விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

நாவாந்துறை கிளை நூலகம்

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S. ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail: srimurugan303@gmail.com, E-mail: srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை (27.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 312

# அரசியல் நிகழ்ச்சி நிரலிலேயே அரசியலமைப்புக்கு எதிர்ப்பு

## மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் ஊடாக நாட்டில் மீண்டுமொரு கலவரம் ஏற்படும் என மகா நாயக்க தேரர்களின் செயற்குழு விடுத்த அறிவிப்பு மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் எதிர்ப்பு பின்னணியில் அரசியல் நிகழ்ச்சி நிரல் இருப்பதாக புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



### அரசியல் கைதிகள்
## வேறு சிறைக்கு இரகசியமாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பை தொடர்ந்து வரும் அரசியல் கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரியவரு 23☛

### கைதிகள் தொடர்பில்
## வாய்திறவா மாகாணசபை

(யாழ்ப்பாணம்)

உயிருக்கு ஆபத்தான கட்டத்திலும் 32 நாளாகவும் போராடி வருகின்ற அரசியல் கைதிகள் தொடர்பில் வடக்கு மாகாண சபை 23☛

## சுதந்திர கட்சியிலிருந்து மகிந்தவை நீக்குவோம் துமிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் சுதந்திரக் கட்சிக்கு இடையூறு விளைவித்தால் அவரை ஓரங்கட்டக் கூட தயங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால 23☛

## டெங்கு காய்ச்சலின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் மிக அதிகம்

### விழிப்புணர்வுடன் இருக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கத்துடன் மலேரியா காய்ச்சலுக்கான அனோபிளிஸ் ஸ்ரெபன்சி எனும் நுளம்பும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது என கூறியிருக்கும் மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் மக்களுடைய விழிப்புணர்வும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் 23☛



## தொண்டராசிரியர் நியமனம் தொடர்பில் மத்திய கல்வி அமைச்சுடன் பேசப்படும்

### வட மாகாண சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 676 தொண்டராசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனவும், இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்று மத்திய கல்வி அமைச்சரை சந்தித்து இது தொடர்பில் பேசுவது எனவும், அதுவரை 182 பேருடைய நியமனங்களை நிறுத்தி வைப்பது எனவும் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 23☛

## யுத்தத்தால் பெறமுடியாததை சட்ட ரீதியாக்க அரசு முயற்சி

### சிங்கள அமைப்புக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

பிரிவினைவாதிகளால் யுத்தம் மூலம் பெற்றுக்கொள்ள முடியாததை சட்டரீதியாக வழங்க அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது என சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முயற்சியை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த ஒன்றியத்தின் பிரதிநிதியான பொங்க 24☛

## இந்திய மீனவர்கள் ஐவர் நெடுந்தீவுக் கடலில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 5 பேர் நேற்றுக் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட போதே அவர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த இழுவைப்படகும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் 23☛

## கொள்கைளில் அரசு தளம்பல்

### ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு சர்வதேச அழுத்தம் அதிகரித்துள்ளமைக்கு அரசாங்கமே காரணம் என பொது ஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் 23☛

### யாழ்.கொடிகாமம் பகுதியில்
## கைவிடப்பட்ட கிணற்றிலிருந்து ஆயுதக் குவியல் மீட்பு



(யாழ்ப்பாணம்)

கைவிடப்பட்ட நிலையில் இருந்த கிணறு ஒன்றில் இருந்து ஆயுதக் குவியல் ஒன்றை விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றினர். 23☛

## 18 ஆண்டுகளாக தடுப்பிலிருந்த தமிழ் அரசியல் கைதி விடுதலை

### கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதியான கனகரத்தினம் ஜீவரத்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரத்தினம் ஜீவரத்தினம் திருகோணமலையில் கைது செய்யப்பட்டு. 18 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று வந்த நிலையில். சட்டமா அதிபரினால் 2014 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார், வான் வாடகைக்கு**

கார்கள், வான்கள் சாரதியுடன் அல்லது சாரதி அல்லாமல் நாள் வாடகைக்கு விடப்படும்.

**RP Rent a Car**

**077 029 5211** (15-4)



**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை வீமன்காமத்தில் 6 1/2 பரப்பு (பொதுச்சந்தைக்கு அருகாமையில்) பொளி கல்லினால் கட்டப் பட்ட கிணற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. (14-2)

**தொடர்புகளுக்கு:**

**077 116 5345**


# துன்னாலை வன்முறை 6பேர் இனங்காணப்பட்டனர்

(கரணவாய்)

துன்னாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் மற்றும் கடலோர பொலிஸார் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டவர்களில் 6 பேர் நேற்று இடம்பெற்ற அடையாள அணி வகுப்பில் அடையாளம் காட்டப்பட்டனர்.

கடந்த யூலை மாதம் 9ஆம் திகதி மணல் கடத்தி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்து ஏற்பட்ட வன்முறை சம்பவத்தை கட்டுப்படுத்த வருகைதந்த விஷேட அதிரடிப்படையினரின் கவசவாகனம் மீது கல்வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் யூலை மாதம் 21-ம் திகதி கடலோர பாதுகாப்பு பணியினை முடித்துவிட்டு முகாம் திரும்பிய கடலோர பாதுகாப்பு படையினர் மீது மணல் கடத்தி வந்தோர் தாக்குதல் மேற்கொண்டனர்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்போரில் 29 பேர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றுக்கு கொண்டுவரப் பட்டனர்.

அச்சந்தேக நபர்களில் நால்வரை கடலோர பாதுகாப்புப் படையினர் அடையாளம் காட்டியதுடன் இருவரை விசேட அதிரடிப்படையினர் அடையாளம் காட்டினர்.

இதனைத் தொடர்ந்து அனைவரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதிதிருமதிநளினி சுபாகரன் உத்தரவிட்டுள்ளார்.(ம-60)


**நோயாளர் பராமரிப்பு சேவை**

நோயாளர்கள், முதியோர்கள், சிறுவர்களை உங்கள் வீட்டிற்கே வந்து பராமரிக்கப்படும். (15-5)

**077 873 0129**




**விற்பனைக்கு**

கிளிநொச்சி திருநகர் தெற்கில் 4 பரப்புக் காணியும் புதிதாக கட்டப்பட்ட வீடும் யாழ்ப்பாணம் றக்கா றோட்டில் றக்கா ஒழுங்கையில் 3 நிலப்பரப்பு காணியில் அமைந்துள்ள மேல் மாடி வீடும் தளபாடங்களும் மற்றும் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு முன்பாக நடேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் 9 1/2 நிலப்பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. (1038)

தொடர்புகளுக்கு: 076 473 4160


# நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவிருக்கும்!

## - கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்



உள்ளம் உவப்பினால் விம்மி நிற்கிறது!
பிறந்தநாள் ஒரு பெரிய விடயமல்ல என்பது என் மனப்பதிவு.
அதனால் அக்கொண்டாட்டத்தில் எனக்கு உவப்பில்லை.
பிறந்த பதிவைவிட வாழும் பதிவின் அவசியத்தைப் பெரிதென நினைக்கிறவன் நான். ஆனாலும் தம் அன்பை வெளிப்படுத்த அந்நாளை சிலர் ஒரு குறியீடாய்க் கருதுகையில், சம்பிரதாயம் கடந்து அவர்தம் அன்பை உணர்ந்து நெகிழ்கிறேன்.

+++++

என் அறுபது அகவை நிறைவுக்கு எத்தனை, எத்தனை வாழ்த்துக்கள்.
மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள், ஊடகங்கள், அமைச்சர்கள்
பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள், பிரமுகர்கள் எனப் பலரும்,
தம் வாழ்த்தால் என்னைத் திக்குமுக்காட வைத்தார்கள்.
யாழ் மண்ணில் 'வலம்புரிப்' பத்திரிகை பெரிய அளவில் இடம் ஒதுக்கி,
ஒரு பிரமுகர்க்குத் தரும் மரியாதையை எனக்குத் தந்திருந்தது.
'காலைக்கதிர்' முன்பக்க செய்தி வெளியிட்டு முக்கியத்துவம் தந்திருந்தது.
தாய்மண்விட்டு இடம்பெயர்ந்த பின்னும் அம்மண் தரும்
மதிப்பினை நினைந்து நெகிழ்கிறேன்.
ஆயிரம்தான் இருந்தாலும் தாய்மண் தாய்மண்தான் எனும் உண்மை புரிகிறது.

+++++

கட்டுரைகள், கவிதைகள், கருத்துப்பதிவுகள் என,
உருக்கம் நிறைந்த பல ஆக்கங்கள் என் உயிர் கரைத்தன.
தமிழ் நாட்டில் என் திருக்குறள் மாணவர்கள் எனது பெயரால் பல
அறக்காரியங்கள் செய்ததையும்,
ஆலயங்களில் வழிபாடுகள் இயற்றியதையும் அறிந்து உருகிப்போனேன்.
இத்தனை பேருக்கு என்னில் நம்பிக்கையா? இவர்களுக்கெல்லாம்
நான் என்ன செய்துவிட்டேன்? நெஞ்சு வினவுகிறது.

+++++

நான் மகிழ்ந்த தமிழை அவர் தமக்கு உரைத்தேன்.-அவ்வளவுதான்!
அவ் உரைப்பிலும் எனக்குத்தான் மகிழ்ச்சி.
'ஈத்துவக்கும் இன்பம்' அது!
எனக்கு மகிழ்வு தந்தவர்கள் நான் மகிழ்வு தந்ததாய் வாழ்த்துகிறார்கள்.
என் ஆசிரியர்கள் எனக்குப் பிச்சையாய் இட்ட அறிவுச்செல்வத்தை ஈந்து,
மற்றவர்களுக்கு நான் கொடையாளியாய்க் காட்சி தருகிறேன்.
குருவருளே திருவருளாம்!

+++++

அன்பைக் கொட்டி வாழ்த்துரைத்த அனைவர்க்கும் என் நன்றிகள்.
இவர்க்கெல்லாம் என்ன கைம்மாறு இயற்றப் போகிறேன்?-
வினாவெழுப்பி புத்தி குடைய,
'இவர்தம் நம்பிக்கைக்கேற்ப நாளுக்கு நாள் உன் வாழ்வைத் தூய்மை செய்வதே,
அவர் தமக்கு நீ செய்யக் கூடிய கடனாம்' என இதயம் பதிலளிக்கிறது.
இறையருளும் இத்தனை பேரது அன்பும் அங்ஙனம் வாழும் ஆற்றலை
எனக்கு நல்கட்டும்.
வாழ்த்துரைத்தார் அனைவரையும் கண்ணீரோடு வணங்குகிறேன்.
'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'
அன்பன்,
இ.ஜெயராஜ்




காரைநகர்

**கிழவன்காடு கலாமன்றம்**

நடத்தும்

**பரிசளிப்பும் கலைநிகழ்வும் அழைப்பு**

இடம் : கிழவன்காடு கலாமன்ற
மனோன்மணி கலையரங்கு,காரைநகர்.
காலம் : 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி

பிரதம விருந்தினர்
திரு.திருமதி இளங்கோவன் கிருபாஹரி தம்பதியினர்
(செயலாளர், ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம்)

சிறப்பு விருந்தினர்
செந்தமிழ்ச் சொல்லருவி, ச.லலீசன் அவர்கள்
(பிரதி அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)
காரை. திரு.சதாசிவம் ரகுநாதன் அவர்கள்
(பொறியியலாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர்
திரு.திருமதி தெட்சணாமூர்த்தி உதயசங்கர் றஞ்சனா தம்பதியினர்
(உலகத் தவில் மேதையின் புதல்வரும் பிரபல தவில் வித்துவானும்)
திரு.திருமதி ரவீந்திரா கிருஷாந்தி தம்பதியினர்
(பிராந்திய முகாமையாளர், DFCC வங்கி, வடக்கு மாகாணம்-
முன்னாள் தலைவர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கலைமாடக்கோன் திரு.திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

நிகழ்ச்சிகளாக கிழவன்காடு கலாமன்ற மாணவர்கள் வழங்கும்
பேச்சு, இணை நடிப்பு, பண்ணிசை, குழு இசை,
மிருதங்க இசை, வயலின் இசை, வீணை இசை,
அரங்க ஆற்றுகை, நாட்டியாஞ்சலி

குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ். கிளையிலிருந்து (இல.11, 1வது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) பி.ப ஒரு மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(சி-184) கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## கோபாலச்சந்திரநாயகன் பத்மராணி

கடந்த 28.09.2017 வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்த கோபாலச்சந்திரநாயகன் பத்மராணி அவர்களின் 31-ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் நாளை மறுதினம் 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பத்மா பவனம், மருதநகர், கிளிநொச்சி என்ற அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: அழகரத்தினம் கோபாலச்சந்திரநாயகன்
(ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர்)
கார்த்திகா ராஜ்குமார்
பிரதீபா டினேஸ் (அரச கால்நடை வைத்திய அதிகாரி பளை)
கோபாலச்சந்திரநாயகன் செந்தூரன் (முகாமையாளர் செங்கடகல பினான்ஸ் (PLC) யாழ்ப்பாணம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(சி-181)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பிற்கு எதிராக கொலைகாரர்கள் அணி திரள்வு!

## கமாலுக்கு அமைச்சர் மங்கள சாட்டையடி





(கொழும்பு)

புதிய அரசியலமைப்பிற்கு எதிராக கொலைகாரர்கள் அணி திரண்டுள்ளதாக நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிதி மற்றும் ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் 63 இலட்சம் மக்கள் நாட்டின் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட வேண்டுமென அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான ஓர் பின்னணியில் புதிய அரசியல் அமைப்பிற்கு ஆதரவாக செயற்படுவோரை கொலை செய்ய வேண்டுமென கோத்தபாயவிற்கு ஆதரவான அமைப்பின் உறுப்பினர் கமால் குணரத்தின உள்ளிட்டவர்கள் கூறி வருகின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உலகின் நம்பிக்கையை வென்று ஜனநாயக ரீதியான பயணமொன்றை ஆரம்பித்துள்ளதனை ஏற்றுக்கொள்ள முடியாத தரப்பினர் இவ்வாறு குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அண்மையில் கோத்தபாயவின் அமைப்பான வியத்மக அமைப்பினைச் சேர்ந்த முன்னாள் இராணுவப் படையதிகாரி, புதிய அரசியல் அமைப்பிற்கு ஆதரவாக செயற்படும் தரப்பினரை கொலை செய்ய வேண்டும் என கூறியுள்ளார். ஜனநாயகத்தை தாங்கிக் கொள்ள முடியாத வெறிபிடித்த சிலர் இவ்வாறு கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கிய கோத்தபாயவின் இரத்த வெறி இன்னும் அடங்கவில்லை. அதன்காரணமாகவே இவ்வாறான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரச அதிகாரமற்ற நிலையில் பொது மேடைகளில் இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்க முடியும் என்றால் அரச அதிகாரம் இருந்த காலத்தில் இவர்கள் எவ்வாறு செயற்பட்டிருப்பார்கள் என்பதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என அமைச்சர் மங்கள சமரவீர தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# கட்டார் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு

## உறவுகளைப் பலப்படுத்த இணக்கம்



(கொழும்பு)

இரண்டுநாள் அரசமுறைப் பயணம் மேற்கொண்டு கட்டார் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கட்டார் பிரதமர் அப்துல்லாஹ் பின் நசர் கலீபா அல் தானிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

கட்டார் பிரதமர் இலங்கை ஜனாதிபதி தங்கியுள்ள டோஹா நகரில் உள்ள ஹோட்டலுக்கு வருகை தந்து ஜனாதிபதியைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஜனாதிபதியின் இந்த விஜயம் கட்டார் நாட்டுக்கு பெரும் கௌரவமாகும் எனக் குறிப்பிட்ட கட்டார் பிரதமர், இரண்டு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்த இது பெரிதும் உதவும் என்றும் தெரிவித்தார்.

கட்டார் - இலங்கை இருதரப்பு உறவுகளை எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் பலமாக முன்னெடுப்பது குறித்து தலைவர்கள் விரிவாக கலந்துரையாடினர்.

மின்சாரம் மற்றும் சக்தி வளத் துறையில் உள்ள முதலீட்டு சந்தர்ப்பங்கள் குறித்து ஜனாதிபதி கட்டார் பிரதமருக்கு விளக்கினார்.

சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புகளுக்கும் கட்டாரில் பல்வேறு துறைகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு வழங்கும் ஒத்துழைப்புகளுக்கும் ஜனாதிபதி கட்டார் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

இவ்விஜயத்தின் போது கைச்சாத்திடப்படும் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்பத்துறை ஒத்துழைப்புகளை மேலும் மேம்படுத்த உதவும் என்றும் நவீன தொழில்நுட்பத்துடன் இன்று முழு உலகமும் இணைந்துள்ள நிலையில், உலகின் அனைத்து நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி கட்டார் நாட்டின் பிரதமருக்கு அழைப்பு விடுத்தார். தான் இலங்கைக்கு விஜயம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்ட கட்டார் பிரதமர், இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் பலப்படுத்த அது மேலும் உதவும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# 'தமிழில் விமர்சிப்பவர்கள் சிங்களத்தில் புகழ்கின்றனர்'

## முஸ்லிம் தலைவர்கள் குறித்து மக்ரூப் விசனம்



(கொழும்பு)

"தமிழ் ஊடகங்களில் அரசாங்கத்தை விமர்சிக்கும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், சிங்கள ஊடகங்களில் அரசாங்கத்தைப் புகழ்கின்றனர்" என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களாகிய நாம், உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, புதியதோர் அரசியல் கலாசாரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

"அதில் ஒரு முக்கிய அத்தியாயமே அரசமைப்பு மாற்றமாகும். இந்த அரசமைப்பு மாற்றத்தை ஜனநாயக வழியில் ஏற்படுத்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். "இதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் எமக்குக் கிடைக்க வேண்டிய அமைச்சுப் பதவிகள், வரப்பிரசாதங்களை விட்டுக்கொடுத்து நல்லாட்சியை ஏற்படுத்தியுள்ளோம்.

"இவ்வாறான நிலையிலேயே வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்ட அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள், தம்மை சமுதாயத்தின் காவலர்களாக மக்களிடம் காண்பிக்க, ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

"குறிப்பாக அரசமைப்பு மாற்றத்தின் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம்களுக்குத் துரோகம் செய்யவுள்ளாரென பிரசாரத்தை முன்னெடுக்கின்றனர்.

"முஸ்லிம் கட்சிகள் தமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைத் தவறவிட்டுவிட்டு இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் பழிபோடுகின்றனர்.

"ஆகவே, இவர்களிடம் நான் ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்குத் தைரியம் இருந்தால் நீங்கள் தமிழ் ஊடகங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பிரதமருக்கும் எதிராக வெளியிடும் கருத்துகளை சிங்கள ஊடகங்களில் தெரிவித்துப் பாருங்கள்" என்றார். (இ-7)

# விமலின் தலையெழுத்தை தீர்மானிக்கும் வழக்கு ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகம் வழங்கிய அரசுக்கு சொந்தமான 40 வாகனங்களை தவறாகப் பயன்படுத்தி அரசுக்கு 9 கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு ஆவணங்களை அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு கடந்த 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, தேசிய பொறியியல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பிரதி முகாமையாளர் சமந்த லொக்குஹென்னதிகே ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்று நீதிமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்வதற்காக வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. வழக்கின் முதலாவது சந்தேகநபரான விமல் வீரவன்ச தனது உறவினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் நெருக்கமானவர்களுக்கு வாகனங்களை வழங்கி அரச பணத்தில் அதற்கான எரிபொருளையும் வழங்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன் விசாரணைகளிலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு

# 2018ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள் இறைச்சிக் கடைகள் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-27.10.2017. தொடக்கம் 09.11.2017, 3.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-10.11.2017 முற்பகல் 10 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :-10.11.2017 முற்பகல் 10.30

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 10.11.2017 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 10.11.2017 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரமுண்டு.
5. இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியினை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் கொண்டு செல்ல எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.
6. எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்பட வேண்டும்.
7. எமது சபையின் சந்தைகள், இறைச்சிக்கடைகளிலிருந்து 1 KM தூரத்திற்குட்பட்ட கடைகளோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறிகள், இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
9. கரைதுறைப்பற்று பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கொக்கிளாய், புதுமாத்தளன் ஆகிய இடங்களில் இறைச்சிக்கடைகள் சபையால் அமைத்து வழங்கப்படும் வரை தாங்களே தற்காலிக கடை அமைத்தல் வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்க மாட்டாது. அத்துடன் சபையால் கடைகட்டி வழங்கவில்லை என்ற காரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டுப்பணத்தில் விலக்களிப்போ குறைப்பனவோ மேற்கொள்ளப்பட மாட்டாது.
10. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா. | ஏற்றுக் கொள்ளக் கூடியஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| 01. முள்ளியவளை உப அலுவலகம் | | | | | |
| 1 | முள்ளியவளை பொதுச்சந்தை | 1,500.00 | 30,000.00 | - | 1,019,400.00 |
| 2 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 1,500.00 | 50,000.00 | - | 2,107,900.00 |
| 3 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | - | 119,300.00 |
| 4 | சிலாவத்தை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | - | 77,100.00 |
| 5 | கேப்பாபிலவு பொதுச்சந்தை | 1,000.00 | 2000.00 | - | 13,200.00 |
| 6 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 25,000.00 | 2,000.00 | 660,000.00 |
| 7 | முள்ளியவளை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,000.00 | 363,100.00 |
| 8 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 30,000.00 | 1,800.00 | 990,000.00 |
| 9 | தண்ணீரூற்று கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 1,800.00 | 726,000.00 |
| 10 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 1,800.00 | 31,500.00 |
| 11 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,800.00 | 22,000.00 |
| 12 | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 1,000.00 | 330,700.00 |
| 13 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | - | 84,700.00 |
| 14 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 15,400.00 |
| 15 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 23,100.00 |
| 16 | வற்றாப்பளை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 17,600.00 |
| 02. முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 1,500.00 | 40,000.00 | 2,000.00 | 1,270,700.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 45,000.00 | 2,000.00 | 1,589,500.00 |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 20,000.00 | 1,800.00 | 770,100.00 |
| 4 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 2,500.00 | 32,800.00 |
| 5 | முல்லைத்தீவு சிறுவர்பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 3,000.00 | | 50,000.00 |
| 03. கொக்கிளாய் உப அலுவலகம் | | | | | |
| 1 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | - | 170,400.00 |
| 2 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | - | 66,000.00 |
| 3 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 8850.00 |
| 4 | கொக்குத்தொடுவாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | - | 144,100.00 |
| 04. முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | | |
| 1 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | - | 80,500.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 1,000.00 | 147,100.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | - | 8,000.00 |
| 4 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 16,300.00 |
| 05. செம்மலை உப அலுவலகம் | | | | | |
| 1 | அளம்பில் பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | - | 32,600.00 |
| 2 | குமுழமுனை பொதுச்சந்தை | 1,000.00 | 10,000.00 | - | 297,100.00 |
| 3 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 12,000.00 | 2,000.00 | 517,100.00 |
| 4 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 5,000.00 | 2,000.00 | 177,000.00 |
| 5 | குமுழமுனை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 3,000.00 | 1,000.00 | 42,400.00 |
| 6 | செம்மலை பொதுச்சந்தை | 1,000.00 | 3,000.00 | - | 30,000.00 |
| 7 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 1,000.00 | 17,000.00 |
| 8 | அளம்பில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | [illegible] | 49,000.00 |

கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.

(C-180)

சி.சுரேசன்.
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்சியை முந்தினார் ஹோலி

## 'போர்ப்ஸ்' பட்டியலில் 7ஆம் இடம்




உலகின் விலை மதிப்பு மிக்க விளையாட்டு வீரர்கள் பட்டியலில் ஆர்ஜென்ரீன கால்பந்து வீரர் மெஸ்சியை முந்தினார் ஹோலி.

அமெரிக்காவில் இருந்து வெளியாகிறது "போர்ப்ஸ்" பத்திரிகை. இது விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்கும் சம்பளம் போனஸ் தவிர விளம்பர ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கும் அதிக வருவாயின் அடிப்படையில் வீரர்களை மதிப்பீடு செய்து வரிசைப்படுத்தி வருகிறது. அவ்வகையில் மிகவும் மதிப்புமிக்க வீரர்கள் பட்டியலை போர்பஸ் தற்போது வெளியிட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ஹோலி, இப்பட்டியலில் 7ஆவது இடம் பிடித்தார். 'ரி20' போட்டிகளில் 'நம்பர்-1' துடுப்பாட்ட வீரராக உள்ள இவரது சந்தை மதிப்பு ரூ. 94.24 கோடியாக உள்ளது.

தவிர, இப்பட்டியலில் இடம் பெற்ற ஒரே கிரிக்கெட் வீரர் என்ற பெருமையும் ஹோலிக்கு கிடைத்தது. இது ஆர்ஜென்ரீன கால்பந்து நட்சத்திரம் மெஸ்சியைவிட அதிகம். இப்பட்டியலில் மெஸ்சிக்கு 9 ஆவது இடம்தான் கிடைத்தது. இவரது சந்தை மதிப்பு ரூ. 87.7 கோடி.

8ஆவது இடத்தில் கோல்ப் உலகின் முன்னாள் 'நம்பர்-1' வீரர், வடக்கு அயர்லாந்தின் மெக்கில்ராய் (ரூ. 88.3 கோடி) உள்ளார்.

### பெடரர் முதலிடம்

இந்த பட்டியலில், சுவிட்சர்லாந்து டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர், 'நம்பர்-1' இடத்தில் உள்ளார். இவரது சந்தை மதிப்பு ரூ. 241.8 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. அடுத்த இரு இடங்களில் அமெரிக்க கூடைப்பந்து வீரர் லெபரான் ஜேம்ஸ் (ரூ. 217 கோடி), உலக தடகள மன்னன், ஜமைக்காவின் உசைன் போல்ட் (ரூ. 175.5 கோடி) உள்ளனர். போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவர், சமீபத்தில் சிறந்த வீரருக்கான 'பிபா' விருது வென்ற கிறிஸ்டியானோ ரொனால்டோ (ரூ. 139.7 கோடி), நான்காவது இடத்தில் உள்ளார்.

## மீண்டும் மலர்ந்தது நட்பு

# சச்சினுடன் கைகோர்த்த கம்ப்ளி



வேற்றுமைகளை மறந்து கடவுளின் கிருபையால் சச்சினும் நானும் இணைந்து உள்ளோம் என்று கம்ப்ளி தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டின் சகாப்தம் டெண்டுல்கர். இவரும் முன்னாள் வீரருமான வினோத் கம்ப்ளியும் பள்ளி பருவத்தில் இருந்தே நெருங்கிய நண்பர்கள். 1988ஆம் ஆண்டு பள்ளி கிரிக்கெட்டில் இருவரும் இணைந்து 664 ஓட்டங்களை குவித்தனர்.

இதன்மூலம் அணிக்குள் நுழைந்த சச்சின் டெண்டுல்கர் சர்வதேச போட்டிகளில் ஜொலித்தார். கிரிக்கெட்டின் கடவுள் என்று போற்றப்படும் அளவுக்கு மிகவும் உயர்ந்த நிலைக்கு சென்றார். ஆனால் கம்ப்ளியால் சர்வதேச போட்டியில் நிலைத்து நிற்க முடிய வில்லை. அவரது கிரிக்கெட் வாழ்க்கை எளிதில் முடிந்தது.

டெண்டுல்கர் தனது கிரிக்கெட் வாழ்க்கை தொடர ஒன்றும் செய்யவில்லை என்று 2009ஆம் ஆண்டு கம்ப்ளி குற்றம் சாட்டினார். இது இருவருக்கும் இடையேயான நட்பில் விரிசலை ஏற்படுத்தியது. 2013 இல் டெண்டுல்கர் ஓய்வுபெறும் போட்டிக்கு கூட கம்ப்ளி அழைக்கப்படவில்லை. தனது உரையில் அவரது பெயரை கூட சச்சின் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் மும்பையில் நடந்த ராஜ்தீப்சர்தேசாய் புத்தக அறிமுக நிகழ்ச்சியில் டெண்டுல்கரும் கம்ப்ளியும் இணைந்து நீண்ட இடைவெளிக்கு பிறகு பங்கேற்றனர். இருவரும் தங்களது நட்பை மீண்டும் புதுப்பித்துக் கொண்டனர். இதுகுறித்து கம்ப்ளி கூறியதாவது.

டெண்டுல்கர் என்னுடைய நகைச்சுவைகளை இழந்து இருப்பார். நான் சில ஜோக்குகள் சொல்லும் போது அவர் எப்போதும் போல் சிரித்தார்.

நாங்கள் இருவரும் அனைத்தையும் மறந்து விட்டோம். வேற்றுமைகளை நானும் மறந்தேன். சச்சினும் மறந்தார். கடவுளின் கிருபையால் எங்கள் நட்பில் புதிய உதயம் ஏற்பட்டுள்ளது.

நாங்கள் நேரில் சந்தித்தபோது தர்மசங்கடம் இல்லை. சச்சின் ஒரு நபராக இன்னும் மாறவில்லை. அதே குணம்தான் இருக்கிறது. ஆனால் இன்னும் வலுவாகவும் நல்லவராகவும் இருக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# CHEMISTRY

## DIAS B.Sc(Hons).Spl. in Chem.

## A/L 2019 Serial 3 - 7 Oct 2017

| Index No | Full Name | School | Med | Sr-3 | Sr-4 | Sr-5 | Sr-6 | Sr-7 | Total | Ave | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| J/8235/B | Arulanantham Abbinanthan | J/J.H.C | Tam | 99 | 92 | 96 | 92 | 96 | 475 | 95.0 | 1 |
| J/7089/M | Thevakumar Jubeerathan | J/K.H.C | Tam | 97 | 93 | 96 | 94 | 92 | 472. | 94.4 | 2 |
| J/8202/B | Jeyanandarasa Kirushikan | J/J.H.C | Tam | 98 | 90 | 98 | 88 | 96 | 470 | 94.0 | 3 |
| J/8109/B | Linthuya Kalaithasan | J/V.G.H.S | Tam | 98 | 88 | 88 | 92 | 99 | 465 | 93.0 | 4 |
| J/7268/M | Suvethiga Jeyanthan | J/V.G.H.S | Tam | 97 | 88 | 92 | 92 | 94 | 463 | 92.6 | 5 |
| J/7177/M | Baskarasabesan Pathmaniroshan | J/J.H.C | Tam | 96 | 91 | 90 | 88 | 97 | 462 | 92.4 | 6 |
| J/8098/B | Anisha Jude Joachimson | J/C.G.C | Tam | 95 | 86 | 96 | 90 | 93 | 460 | 92.0 | 7 |
| J/7076/M | Nagaraththinam Thenujan | J/J.H.C | Tam | 98 | 92 | 84 | 92 | 90 | 456 | 91.2 | 8 |
| J/8038/B | Snoha Nagulendran | J/V.G.H.S | Eng | 96 | 92 | 88 | 88 | 87 | 451 | 90.2 | 9 |
| J/8368/B | Thusharaa Sriskandarajah | J/V.G.H.S | Tam | 97 | 96 | 84 | 82 | 90 | 449 | 89.8 | 10 |
| J/7006/M | Raveendra Jathushan | J/J.H.C | Tam | 97 | 81 | 88 | 88 | 94 | 448 | 89.6 | 11 |
| J/8120/B | Thabothini Vasavan | J/V.G.H.S | Eng | 97 | 89 | 90 | 82 | 88 | 446 | 89.2 | 12 |
| J/7212/M | Pairavi Thanancheyan | J/V.G.H.S | Tam | 99 | 90 | 80 | 84 | 92 | 445 | 89.0 | 13 |
| J/8181/B | Sivathasan Tharmathasan | J/J.H.C | Eng | 97 | 92 | 92 | 78 | 85 | 444 | 88.8 | 14 |
| J/8299/B | Kunarajah Kunadiluxshan | J/J.H.C | Tam | 97 | 84 | 82 | 92 | 84 | 439 | 87.8 | 15 |
| J/8326/B | Thayaparan Nisan | J/J.H.C | Tam | 90 | 86 | 80 | 90 | 90 | 436 | 87.2 | 16 |
| J/8187/B | Shankavi Ilango | J/V.G.H.S | Tam | 98 | 86 | 82 | 82 | 87 | 435 | 87.0 | 17 |
| J/8410/B | Nivetha Mahalingasivam | J/V.G.H.S | Eng | 95 | 80 | 92 | 84 | 83 | 434 | 86.8 | 18 |
| J/8131/B | Adsaya Santhirasegaram | J/V.G.H.S | Eng | 92 | 88 | 84 | 86 | 82 | 432 | 86.4 | 19 |
| J/8173/B | J. Sakthijeevan Sinthujan | J/S.P.C | Eng | 80 | 84 | 92 | 90 | 86 | 432 | 86.4 | 19 |
| J/7214/M | Shabthana Johnson | J/K.H.C | Tam | 94 | 85 | 80 | 86 | 85 | 430 | 86.0 | 21 |
| J/8179/B | Senthareswaran Subangan | J/J.H.C | Eng | 92 | 80 | 80 | 90 | 86 | 428 | 85.6 | 22 |
| J/7335/M | Thevarasa Sangaran | J/V.C.C | Tam | 91 | 85 | 78 | 88 | 86 | 428 | 85.6 | 22 |
| J/8049/B | Araby Jeyaruban | J/C.G.C | Tam | 93 | 86 | 88 | 84 | 76 | 427 | 85.4 | 24 |
| J/7098/M | Rajendran Vuthursan | J/J.H.C | Tam | 93 | 88 | 80 | 88 | 77 | 426 | 85.2 | 25 |
| J/8462/B | Vaishnavi Chandrakanth | J/J.H.L.C | Tam | 91 | 90 | 74 | 84 | 87 | 426 | 85.2 | 25 |
| J/7043/M | Kanagarajah Thanushanth | J/J.H.C | Tam | 92 | 88 | 72 | 88 | 85 | 425 | 85.0 | 27 |
| J/8136/B | Lagitha Thayalaseelan | J/J.H.L.C | Tam | 91 | 75 | 78 | 90 | 91 | 425 | 85.0 | 27 |
| J/7548/M | Pavithra Gnanaganthan | J/K.H.C | Tam | 94 | 69 | 82 | 88 | 92 | 425 | 85.0 | 27 |
| J/7154/M | Sukumar Sivasuthan | J/K.H.C | Tam | 80 | 87 | 88 | 86 | 84 | 425 | 85.0 | 27 |
| J/8441/B | Thiviya Mohanathan | J/V.G.H.S | Tam | 89 | 74 | 92 | 84 | 85 | 424 | 84.8 | 31 |
| J/8565/B | Arunkalaichelvan Anoshigan | J/S.J.C | Eng | 94 | 83 | 88 | 84 | 74 | 423 | 84.6 | 32 |
| J/8126/B | Tharani Balandran | J/V.G.H.S | Eng | 92 | 77 | 88 | 82 | 82 | 421 | 84.2 | 33 |
| J/7364/M | Guanamathiri Ellangognaniar | J/V.G.H.S | Tam | 88 | 84 | 82 | 80 | 86 | 420 | 84.0 | 34 |
| J/8072/B | Tharmashaayine Sivathasan | J/V.G.H.S | Tam | 95 | 83 | 84 | 80 | 78 | 420 | 84.0 | 34 |
| J/7304/M | Sathurgini Uthayakumar | J/V.G.H.S | Tam | 96 | 82 | 70 | 86 | 85 | 419 | 83.8 | 36 |
| J/8180/B | Ilango Elankethan | J/J.H.C | Eng | 95 | 86 | 86 | 88 | 62 | 417 | 83.4 | 37 |
| J/7159/M | kanagalingam Lithurshan | J/J.H.C | Tam | 82 | 83 | 86 | 78 | 88 | 417 | 83.4 | 37 |
| J/7092/M | Panchalingam Kobinath | J/J.H.C | Eng | 88 | 85 | 76 | 82 | 86 | 417 | 83.4 | 37 |
| J/7363/M | Kayalvizhi Susan | J/V.G.H.S | Tam | 89 | 75 | 84 | 82 | 86 | 416 | 83.2 | 40 |
| J/7009/M | Ragunathan Athyraiyan | J/J.H.C | Tam | 83 | 76 | 86 | 86 | 85 | 416 | 83.2 | 40 |
| J/7201/M | Poorvajaa Senthareswarasarma | J/V.G.H.S | Tam | 89 | 76 | 82 | 82 | 86 | 415 | 83.0 | 42 |
| J/8626/B | Narayane Kathiramalai | J/V.G.H.S | Eng | 85 | 85 | 76 | 82 | 85 | 413 | 82.6 | 43 |
| J/8124/B | Abiramy Devanesan | J/V.G.H.S | Eng | 94 | 73 | 80 | 82 | 82 | 411 | 82.2 | 44 |
| J/8019/B | Kugaveni Rajarajeswaran | J/V.G.H.S | Eng | 94 | 73 | 80 | 82 | 82 | 411 | 82.2 | 44 |
| J/8062/B | Sagithira Krishnabala | J/V.G.H.S | Tam | 90 | 81 | 68 | 84 | 88 | 411 | 82.2 | 44 |
| J/5412/M | Shankavi Kandappu | J/V.G.H.S | Tam | 96 | 78 | 80 | 78 | 79 | 411 | 82.2 | 44 |
| J/8048/B | Arthy Jeyaruban | J/C.G.C | Tam | 93 | 76 | 82 | 78 | 81 | 410 | 82.0 | 48 |
| J/7163/M | Sivasothynathan Kugeshan | J/J.H.C | Eng | 89 | 65 | 92 | 86 | 77 | 409 | 81.8 | 49 |
| J/7010/M | Arudchelvan Harishanth | J/J.H.C | Eng | 85 | 92 | 84 | 70 | 76 | 407 | 81.4 | 50 |
| J/8428/B | Clare Stephi Kingsly Robert | J/C.G.C | Tam | 89 | 80 | 58 | 96 | 84 | 407 | 81.4 | 50 |
| J/7266/M | Bilahari Sukumar | J/V.G.H.S | Eng | 88 | 85 | 74 | 80 | 79 | 406 | 81.2 | 52 |
| J/7522/M | Kumarasamy Karthikan | J/J.H.C | Tam | 95 | 82 | 76 | 82 | 71 | 406 | 81.2 | 52 |
| J/7529/M | Nithiyananthan Aathavan | J/J.H.C | Eng | 76 | 78 | 82 | 86 | 84 | 406 | 81.2 | 52 |
| J/8578/B | Shama Anjum Thajudeen | J/V.G.H.S | Tam | 87 | 76 | 82 | 76 | 85 | 406 | 81.2 | 52 |
| J/7256/M | Thilaxshana Tharmaseelan | J/V.C.C | Tam | 88 | 72 | 80 | 80 | 85 | 405 | 81.0 | 56 |
| J/8218/B | Anantharajah Janushan | J/J.H.C | Eng | 84 | 79 | 86 | 86 | 69 | 404 | 80.8 | 57 |
| J/8095/B | Delaxsana Thavarasa | J/V.G.H.S | Tam | 93 | 78 | 78 | 74 | 81 | 404 | 80.8 | 57 |
| J/8503/B | Pathmarajah Niruththikan | J/J.H.C | Tam | 89 | 80 | 84 | 72 | 79 | 404 | 80.8 | 57 |
| J/7289/M | Saundrarajan Lithushan | J/S.J.C | Eng | 83 | 69 | 90 | 90 | 72 | 404 | 80.8 | 57 |
| J/7003/M | Vasanthan Vathsalayan | J/J.H.C | Eng | 88 | 74 | 78 | 80 | 84 | 404 | 80.8 | 57 |
| J/8070/B | Keerthika Johnquintus | J/V.G.H.S | Tam | 78 | 72 | 84 | 88 | 81 | 403 | 80.6 | 62 |
| J/8177/B | Muralitharan Thanushan | J/S.J.C | Eng | 88 | 84 | 82 | 78 | 71 | 403 | 80.6 | 62 |
| J/7144/M | Navaratnam Baanujan | J/J.H.C | Tam | 92 | 74 | 72 | 85 | 80 | 403 | 80.6 | 62 |
| J/8278/B | Sriharan Mathusan | J/S.J.C | Eng | 86 | 82 | 92 | 72 | 71 | 403 | 80.6 | 62 |
| J/7013/M | Kokilathasan Vithushan | J/J.H.C | Tam | 80 | 84 | 76 | 82 | 80 | 402 | 80.4 | 66 |
| J/8227/B | Tharshana Vinsalas | J/V.G.H.S | Tam | 86 | 77 | 74 | 82 | 83 | 402 | 80.4 | 66 |
| J/8078/B | Apssara Uthayakumar | J/V.G.H.S | Eng | 82 | 79 | 80 | 82 | 78 | 401 | 80.2 | 68 |
| J/8297/B | Arunthavarajah Abhiman | J/J.H.C | Tam | 88 | 82 | 84 | 70 | 77 | 401 | 80.2 | 68 |
| J/8228/B | Jenisija Jerad | J/V.G.H.S | Tam | 82 | 84 | 78 | 78 | 78 | 400 | 80.0 | 70 |
| J/7198/M | Meenambika Chandrakumar | J/C.G.C | Eng | 93 | 83 | 64 | 72 | 88 | 400 | 80.0 | 70 |
| J/8232/B | Navaneetharajan Nithurshan | J/J.H.C | Tam | 89 | 74 | 72 | 84 | 81 | 400 | 80.0 | 70 |
| J/8409/B | Nilany Sriskandharaja | J/V.C.C | Tam | 84 | 81 | 74 | 80 | 80 | 399 | 79.8 | 73 |
| J/8067/B | Karthiga Satkuneswaran | J/V.G.H.S | Tam | 83 | 78 | 82 | 80 | 73 | 396 | 79.2 | 74 |
| Kn/8312/B | Vimaleswaran Bavigshan | Kn/K.M.V | Tam | 85 | 78 | 78 | 76 | 79 | 396 | 79.2 | 74 |
| J/8015/B | Mathangi Raveendran | J/V.G.H.S | Tam | 83 | 78 | 78 | 84 | 72 | 395 | 79.0 | 76 |
| J/8063/B | Sankeerani Govindarajan | J/V.J.C | Eng | 80 | 81 | 82 | 76 | 75 | 394 | 78.8 | 77 |
| J/8383/B | Jaraniya Rasenthira | J/V.G.H.S | Eng | 90 | 74 | 82 | 76 | 71 | 393 | 78.6 | 78 |
| J/7578/M | Tharmathurai Kajagoban | J/J.H.C | Tam | 82 | 76 | 74 | 82 | 79 | 393 | 78.6 | 78 |
| J/8178/B | V. Hamshaananth | J/J.H.C | Eng | 83 | 81 | 88 | 78 | 63 | 393 | 78.6 | 78 |
| J/7178/M | Anpuththurai Kirushanth | J/C.S.M.V | Tam | 86. | 74 | 72 | 78 | 82 | 392 | 78.4 | 81 |
| J/8309/B | Thiyakarasa Kiritharan | J/C.S.M.V | Tam | 78 | 83 | 74 | 80 | 77 | 392 | 78.4 | 81 |
| J/8338/B | Sritharan Subaas | J/J.H.C | Eng | 95 | 70 | 80 | 78 | 68 | 391 | 78.2 | 83 |
| J/7143/M | Anpalakan Akimsan | J/V.C.C | Tam | 79 | 74 | 74 | 86 | 77 | 390 | 78.0 | 84 |
| J/7011/M | Sarvendran Birunthaban | J/J.H.C | Eng | 81 | 71 | 76 | 80 | 82 | 390 | 78.0 | 84 |
| J/8127/B | Gowsika Tharmalingam | J/V.G.H.S | Eng | 77 | 76 | 82 | 76 | 77 | 388 | 77.6 | 86 |
| J/8215/B | Jeyakumar Sageepan | J/J.H.C | Eng | 87 | 76 | 90 | 76 | 59 | 388 | 77.6 | 86 |
| J/7211/M | Preethy Srinevasan | J/C.G.C | Tam | 91 | 87 | 72 | 76 | 62 | 388 | 77.6 | 86 |
| J/8537/B | Rathisiya Ravichandran | J/K.H.C | Tam | 90 | 72 | 66 | 78 | 81 | 387 | 77.4 | 89 |
| Kn/8504/B | Sriranganathan Gowthaman | Kn/K.M.V | Tam | 93 | 80 | 70 | 86 | 58 | 387 | 77.4 | 89 |
| J/8289/B | Vigneswaran Sathesharan | J/S.J.C | Eng | 68 | 90 | 88 | 70 | 71 | 387 | 77.4 | 89 |
| J/7114/M | Sivasothy Piranavan | J/J.H.C | Eng | 85 | 73 | 74 | 72 | 81 | 385 | 77.0 | 92 |
| J/8140/B | Sharumathy Shanmugathas | J/V.G.H.S | Tam | 87 | 66 | 66 | 82 | 83 | 384 | 76.8 | 93 |
| J/7455/M | Thasavaran Nithusikan | J/J.H.C | Tam | 77 | 80 | 76 | 78 | 72 | 383 | 76.6 | 94 |
| J/8200/B | Sivathasan Tharshikan | J/J.H.C | Tam | 100 | 91 | 96 | | 95 | 382 | 76.4 | 95 |
| J/7012/M | Kirupagaran Vanaiyan | J/J.H.C | Tam | 73 | 78 | 78 | 82 | 70 | 381 | 76.2 | 96 |
| J/7141/M | Sriskantharaja Sajeevan | J/J.H.C | Tam | 83 | 71 | 70 | 82 | 75 | 381 | 76.2 | 96 |
| J/8192/B | Krishnakumar Mathurangan | J/J.H.C | Eng | 85 | 73 | 84 | 62 | 76 | 380 | 76.0 | 98 |
| J/7180/M | Pirabakaran Yathavan | J/J.H.C | Eng | 78 | 82 | 82 | 82 | 55 | 379 | 75.8 | 99 |
| J/8041/B | Sakithya Jeyamohan | J/V.G.H.S | Eng | 85 | 74 | 70 | 70 | 80 | 379 | 75.8 | 99 |
| Kn/8336/B | Saththiyanathan Tishangan | Kn/V.C.C | Tam | 85 | 82 | 60 | 76 | 76 | 379 | 75.8 | 99 |
| J/7502/M | Vasanthakumar Sethubavan | J/J.H.C | Eng | 81 | 74 | 72 | 82 | 70 | 379 | 75.8 | 99 |
| J/7027/M | Uthayakumar Kirushanth | J/S.C | Tam | 88 | 71 | 68 | 78 | 72 | 377 | 75.4 | 103 |
| J/8066/B | Luxshika Rajasoorie | J/V.G.H.S | Tam | 79 | 71 | 78 | 72 | 76 | 376 | 75.2 | 104 |
| J/8490/B | Sivapalan Pavithiran | J/J.H.C | Eng | 87 | 78 | 76 | 72 | 62 | 375 | 75.0 | 105 |
| J/7187/M | Shriganeshan Nathiskar | J/J.H.C | Eng | 82 | 77 | 70 | 74 | 71 | 374 | 74.8 | 106 |
| J/8007/B | Thuvaraka Edward | J/V.G.H.S | Tam | 87 | 71 | 66 | 80 | 70 | 374 | 74.8 | 106 |
| J/7326/M | Tilakshana Siththivinayagam | J/J.H.L.C | Eng | 85 | 74 | 74 | 72 | 69 | 374 | 74.8 | 106 |
| J/7160/M | Vickneswaran Abinajan | J/J.H.C | Tam | 86 | 70 | 78 | 72 | 68 | 374 | 74.8 | 106 |
| J/8213/B | Saththeswaran Praveenan | J/J.H.C | Tam | 80 | 72 | 66 | 80 | 75 | 373 | 74.6 | 110 |
| J/8189/B | Baviththira Srikumaran | J/V.G.H.S | Tam | 81 | 73 | 64 | 78 | 76 | 372 | 74.4 | 111 |
| J/7021/M | Kajananthan Janarthanan | J/J.H.C | Eng | 77 | 81 | 76 | 74 | 64 | 372 | 74.4 | 111 |
| Kn/8561/B | Pathmasenan Palasuthan | Kn/M.M.V | Tam | 71 | 74 | 78 | 76 | 73 | 372 | 74.4 | 111 |
| J/5407/M | Ravichandran Kirushanthan | J/J.H.C | Tam | 74 | 73 | 66 | 78 | 81 | 372 | 74.4 | 111 |
| J/8139/B | Tharshika Logeswaran | J/V.G.H.S | Tam | 85 | 58 | 78 | 82 | 69 | 372 | 74.4 | 111 |
| J/8118/B | Jeshurika Manogaran | J/V.G.H.S | Eng | 90 | 71 | 72 | 66 | 72 | 371 | 74.2 | 116 |
| J/8191/B | Sutharsana Vijayakumar | J/V.G.H.S | Tam | 95 | 58 | 82 | 76 | 60 | 371 | 74.2 | 116 |
| J/7007/M | Thavachelvan Habishath | J/J.H.C | Eng | 86 | 68 | 80 | 70 | 66 | 370 | 74.0 | 118 |
| J/8090/B | Dansika Rameskarani | J/M.L.C | Tam | 68 | 74 | 76 | 76 | 74 | 368 | 73.6 | 119 |
| J/8075/B | Sajitha Kanagalingam | J/V.C.C | Tam | 72 | 78 | 68 | 80 | 69 | 367 | 73.4 | 120 |
| J/7429/M | F.R.J.Jude Dinoshan | J/S.P.C | Eng | 88 | 64 | 74 | 70 | 69 | 365 | 73.0 | 121 |
| J/8432/B | Tharsika Sivanandan | J/V.G.H.S | Eng | 91 | 69 | 78 | 64 | 63 | 365 | 73.0 | 121 |
| J/8185/B | Amsavy Sivaharan | J/V.G.H.S | Tam | 88 | 71 | 72 | 74 | 58 | 363 | 72.6 | 123 |
| J/8284/B | Loganathan Senthilkumaran | J/J.H.C | Eng | 75 | 75 | 78 | 66 | 68 | 362 | 72.4 | 124 |
| J/7152/M | Murukananthan Nithujan | J/J.H.C | Tam | 73 | 72 | 66 | 82 | 69 | 362 | 72.4 | 124 |
| J/7032/M | Sankavi Ravichandran | J/V.G.H.S | Tam | 87 | 64 | 66 | 78 | 66 | 361 | 72.2 | 126 |
| J/8467/B | Gayathri Sivaneswaran | J/V.G.H.S | Eng | 95 | 66 | 68 | 74 | 56 | 359 | 71.8 | 127 |
| J/8458/B | Kalaiveni Kulenthiran | J/V.G.H.S | Eng | 78 | 69 | 72 | 74 | 65 | 358 | 71.6 | 128 |
| J/8132/B | Gobika Shandraraj | J/V.G.H.S | Tam | 81 | 72 | 66 | 66 | 72 | 357 | 71.4 | 129 |
| J/7503/M | Ravishankar Banujan | J/J.H.C | Eng | 75 | 74 | 82 | 70 | 56 | 357 | 71.4 | 129 |
| J/8247/B | Lathangi Ramakrishnan | J/V.G.H.S | Tam | 78 | 65 | 70 | 80 | 63 | 356 | 71.2 | 131 |
| J/7207/M | Thulashika Balachandran | J/J.H.L.C | Tam | 83 | 65 | 74 | 66 | 68 | 356 | 71.2 | 131 |
| J/8264/B | Dunsan Keerthikan | J/S.P.C | Tam | 74 | 70 | 74 | 70 | 66 | 354 | 70.8 | 133 |
| J/8349/B | Jegatheeswaran Venujan | J/J.H.C | Tam | 84 | 72 | 64 | 76 | 56 | 352 | 70.4 | 134 |
| J/7230/M | Sarannija Sivarasa | J/V.G.H.S | Tam | 76 | 72 | 72 | 76 | 56 | 352 | 70.4 | 134 |
| J/7504/M | Indrakumar Aran | J/J.H.C | Eng | 81 | 82 | 64 | 70 | 54 | 351 | 70.2 | 136 |
| J/8157/B | Thanuja Jegatheeswaran | J/V.G.H.S | Tam | 82 | 63 | 66 | 74 | 66 | 351 | 70.2 | 136 |
| J/8011/B | Ajanthana Sritharan | J/V.G.H.S | Tam | 77 | 59 | 72 | 78 | 64 | 350 | 70.0 | 138 |
| J/7252/M | Anusiya Sivalingam | J/J.H.L.C | Tam | 83 | 71 | 60 | 70 | 66 | 350 | 70.0 | 138 |
| J/7146/M | Sivaskaran Nilaksan | J/T.U.C | Tam | 75 | 67 | 66 | 82 | 60 | 350 | 70.0 | 138 |
| J/7062/M | Vikneswaran Malmarugan | J/J.H.C | Tam | 86 | 62 | 72 | 66 | 64 | 350 | 70.0 | 138 |

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.
NEW SCIENCE WORLD
(சி-177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அடையாள அட்டைகளுக்கான புகைப்படம் குறித்து விசேட அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2015.12.22 ஆம் திகதியை 1946/31 ஆம் இல விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1968 ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் அதற்கு உரித்தான விதிமுறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படம் தொடர்பாக 12ஆம் விதிமுறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அடையாள அட்டைக்கான புகைப்படம் கீழ் குறிப்பிடப்படும் அளவு, தரம் மற்றும் தன்மைக்கு அமைவாக இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றது.

(i) நிழற்பட அளவானது அகலத்தில் 35 மி.மீ X உயரத்தில் 45 மி.மீ. என்புதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் நிழற்படத்தின் தரமானது ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் மென்பொருளுக்கிணங்க அல்லது அறிவுறுத்தல்களுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

(ii) முகமானது திறந்த மற்றும் தெளிவாகத் தென்படக்கூடிய கண்களுடனும் மூடிய வாயுடனும் சிரிப்பில்லாமலும் சுயநிலை முகக் குறிப்புடன் இருத்தல் வேண்டும்.

(iii) தலைமுடியானது முகத்திலிருந்து விலகியிருத்தல் வேண்டுமென்பதுடன் முகத்தின் விளிம்புகள் தெளிவாகத் தென்படக்கூடியனவாகவிருத்தலும் வேண்டும்.

(iv) மூக்குக் கண்ணாடிகளிலிருந்து (ஏற்புடையதாயின்) பிரதிபலிப்புகள் எவையும் தென்படக்கூடியனவாக விருத்தலாகாது வில்லைகளினூடாகக் கண்கள் தெளிவாகத் தென்படக்கூடியனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் தெளிவான (நிறப்பூச்சிடப்படாத) வில்லைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.

(v) வெளிச்சமிடுகை ஒரு சீரானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் நிழல்களை கூசொளியை அல்லது பளிச்சீட்டுப்பிரதிபலிப்புகளைக்காண்பித்தலுமாகாது.

(vi) நிழற்படத்தின் காட்சிப்படுத்தலும் வெண்நிறப் பின்புலமும் விண்ணப்பதாரரின் இயற்கையான தோல் நிறத்தைப் பிரதிபலித்தல் வேண்டும்.

(vii) தோற்றநிலை நேராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் முகமும் தோள்களும் நிழற்படக் கருவிக்கு நடுவிலும் எல்லாப் புறமும் சரிசமமாகவும் இருத்தலும் வேண்டும்.

(viii) பின்னணியானது ஒரு சீராகவும் அலங்காரமின்றியும் வடிவங்களில்லாமலும் இளநீல நிறத்திலும் இருத்தல் வேண்டும்.

(ix) உருவமானது தெளிவாகவும் கூர்மையாகவும் ஒரு நிலைப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(x) நிழற்படமானது உயர் தொழில்சார் அச்சிடும் ஆய்வு கூடத்தைப் பயன்படுத்தி நிறத்தில் அச்சிடப்படுதல் வேண்டும்.

(xi) நிழற்படமானது எவ்வகையிலும் மாற்றப்படுதலாகாதென்பதுடன் விண்ணப்பதாரரின் இயற்கை நிலையில் எடுக்கப்படுதலும் வேண்டும்.

அதன்படி 2017.09.01 ஆம் திகதி முதல் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளும் முகமாக உங்கள் மூலமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்துடன் மேற்குறிப்பிட்ட தர அளவீட்டிற்கு அமைவாக பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படத்தினை அனுப்புமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதிய புகைப்படம் எடுக்கும் முகமாக தயாரிக்கப்பட்ட மென்பொருள் மற்றும் அதற்கு தேவையான பயிற்சிகள் தற்போது திணைக்களத்தின் கீழ் புகைப்பட நிலைய உரிமையாளர் மற்றும் அவருடைய பணியாளர்களுக்கு இலத்திரனியல் அடையாள அட்டை கருத்திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் புகைப்படத்திற்காக அறவிடப்படும் உச்ச கட்டணம் 150 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகைப்பட நிலையங்கள் தொடர்பான விபரங்கள் www.drp.gov.lk எனும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது விநியோகிக்கப்படும் அடையாள அட்டைக்கு பதிலாக புதிய சூட்டிகை அட்டை (Smart Card) விநியோகிப்பதற்காக திணைக்களத்தின் மூலமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த சூட்டிகை (Smart Card) அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்கும் போது குறித்த நபருக்குரிய கையொப்பத்தினை பதிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் காரணமாக விண்ணப்பம் சிபார்சு செய்யும் போது 4ஆம் பக்கத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சரியான முறையில் இடப்பட்டுள்ளதா? எனவும் 35 மி.மீ. அகலம் 45 மி.மீ.உயரம் அளவை உடைய புகைப்படம் சரியான தர அளவுகளுக்கு அமைவாக எடுக்கப்பட்டு ஒட்டப்பட்டுள்ளதா? என்பதையும் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். (விண்ணப்பதாரின்கையொப்பம்பெற்றுக்கொள்ளும் போது கையொப்பம் பெட்டியினுள்ள எந்தக் கோடுகளையும் தொடாதவாறும் பெட்டியினுள்ள மேல் மற்றும் கீழ் கோடுகளுக்கு சமாந்திரமாகவும் இடப்பட்டிருக்க வேண்டும்.)

தற்பொழுது தேசிய அடையாள அட்டை உபயோகிக்கின்ற நபர்கள் தமது அடையாள அட்டையானது தெளிவாக இருக்கையில் அல்லது அவ்வடையாள அட்டையில் எவ்வித திருத்தங்களும் செய்யப்பட தேவையில்லாத சந்தர்ப்பத்தில் புதிய அடையாள அட்டையைப்பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்பது அவசியமற்றது என அனைத்து விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2017.09.01ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு பழைய தொழில்நுட்பத்திலான அடையாள அட்டையினையே வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றேன் என ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் பீ.வி.குணதிலக அறிவித்துள்ளார். (இ


## கண்ணீர் அஞ்சலி

அமரர் திரு.

**செல்லத்துரை தங்கராசாப் பத்தர்**



எமது கல்லூரியின்
சகோதரத்துவ உறுப்பினரும் ஆசிரியருமான
தங்கராசா ஜெயசிறி
அவர்களின் அன்புத் தந்தை
**செல்லத்துரை தங்கராசாப் பத்தர்**
25.10.2017 அன்று
இறைபதமடைந்ததையிட்டு
அன்னாரின் பிரிவினால்
ஆழ்ந்த துயரடைந்திருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவர்களின்
துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(176)


## "இலங்கைச் சீத்தையின் உயிர்ப்பு" ஆவணக்காப்பகத்தின் 49வது நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 49 ஆவது நிகழ்வாக "இலங்கைச் சீத்தையின் உயிர்ப்பு" என்ற தலைப்பில் "மார்க் ஈ பால்ம் போர்த்" உரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற சீத்தைத்துணி உருவாக்கத்தின் மூலத்தில் யாழ்ப்பாணத்தின் பங்கு பற்றியும் காலனிய காலத்தில் அதன் உற்பத்தி உபயோகம் தொடர்பானதாகவும் இவரது உரையாடல் அமையும்.

மேற்படி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நல்லூரிலுள்ள சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் (199, கோவில் வீதி) இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள், சிற்பிகள் அனைவரும் தவறாது கலந்து பயன் பெறுமாறு ஆவணக்காப்பக பொது முகாமையாளர் விமலா வேல்தாஸ் அறிவித்துள்ளார். (இ-7)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பெரிபுலம் கத்தோலிக்கதமிழ்க்கலவன் பாடசாலை**

ஜோ.சானுஷன்-185, அ.அமலமௌலிஸ்-182, ஜெ.விதுஷனா-161, ர.தசிந்தன்-155.

**யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்**

இ.கிசாந்-161. (இ-104)

## இராசி பலன்

27.10.2017
ஐப்பசி 10, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சப்தமி பிற்பகல் 12.18 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 12.50 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
ஐப்பசி வெள்ளி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம், திருவாதிரை | | ராகு |
| கேது<br>சந் | | | |
| | சனி | சூரி.புத.<br>குரு | செவ்<br>சுக் |

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாணபயமுண்டு, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், இனிமையான நாள்.

**கன்னி:** சுப செய்திகள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கிடைக்கும்.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பெரியோர்களின் உதவி கிடைக்கலாம்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், இறை வழிபாட்டில் நாட்டம் கூடும்.

**மீனம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

# மனவளக்கலை யோகா பயிற்சிகள்

உடல்நலத்திற்கு



உயிர்வளத்திற்கான காயகல்ப பயிற்சிகள்




எளிய முறை உடற் பயிற்சிகள்




உளநலம் காக்க எளிய முறை தியானப் பயிற்சிகள்



யாழ்.அறிவுத் திருக்கோவிலில் தமிழ்நாடு மனவளக் கலைப் பேராசிரியரால் நடாத்தப்படுகின்றன.

அனைவரையும் பயிற்சி பெற்று பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

28.10.2017 சனிக்கிழமை மாலை 5.00 மணி

(சி-178) : 021 222 2772 இல.31, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி
# விலை மனுக்கோரல்

## இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளின் விற்பனை

**கேள்வி இல.2017/NP/11**

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளை விற்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பங்களை செயற்பாட்டு முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி, வடமாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இடமிருந்து மீளளிக்கப்படாத தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 10,000 ரூபா/- வரிகள் (VAT+NBT) இனையும் மீளளிக்கப்படும் தொகையாக கிளை ஒன்றிற்கு 250,000/- இனையும் வைப்புச் செய்ததன் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விலை கோருபவர்கள் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளை வைப்பிலிடும் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வியாபார நிறுவனமெனின்-வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி/கூட்டிணைவுச் சான்றிதழின் பிரதி.

தனிப்பட்ட நபரெனின் - தேசிய அடையாள அட்டையின் பிரதி/ சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் கிளைகளில் தங்க நகைப் பொதிகளைப் பரிசீலிக்க முடியும்.

| இடம் மற்றும் முகவரி | பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் |
|---|---|
| இலங்கை வங்கி<br>1. முல்லைத்தீவு கிளை<br>2. திருநெல்வேலி கிளை<br>3. பளை கிளை<br>4. கரணவாய் கிளை<br>5. பூவரசங்குளம் கிளை<br>6. மானிப்பாய் கிளை<br>7. யாழ்ப்பாணம் இரண்டாம் மேற்தரக் கிளை. | திகதி: 05.11.2017<br>நேரம்: மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை<br><br>பரிசீலனை நேரத்தினை விண்ணப்பதாரர்கள் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக முற்பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br>பெயர்: திரு.க.சகாதேவன்.<br>தொலைபேசி இல: 021 222 4683, 077 512 1983. |

கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 08.11.2017 பி.ப. 3.00 வரை

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 09.11.2017 மு.ப. 10.00 வரை

➤விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட தங்க நகைப் பொதிகளுக்கு விலை கோர முடியும். அதே சமயம் அவ்விலை கோரல்கள் யாவும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டு ஒரே கடித உறையினுள் இடப்படலாம்.

➤கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம், விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.

➤முத்திரையிடப்பட்ட விலை கூறல்களை 09.11.2017 (கேள்வி முடிவுத் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உதவி பொது முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். காலதாமதமாகிய விலை கூறல்கள் யாவும் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாது விலை கூறியோரிற்கு மீள அனுப்பப்படும். காலதாமதமான விலை கூறல்கள் தொடர்பாக தபாலில் இட்டமைக்கான சான்றுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

➤விலை கூறல்கள் ஏற்கப்படும் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விலை கோரியவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விலை கூறிய ஒருவருக்கு ஒரு பிரதிநிதி) கேள்விகள் திறப்பின் போது சமுகமளிக்கலாம்.

➤தெரிவு சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர்/களுக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளரினால் அறியத்தரப்படும்.

➤தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர், தெரிவு செய்யப்பட்டமை அறியத்தரப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்களினுள் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். முழுத் தொகையை செலுத்திய நாளிலிருந்து, 7 நாட்களினுள் சம்பந்தப்பட்ட கிளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விலை கூறியவரிற்கு தங்க நகைப் பொதி கையளிக்கப்படும்.

எக் காரணமும் குறிப்பிடாது விலை கூறல் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
(வடமாகாணம்), இலங்கை வங்கி,
வட மாகாண அலுவலகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 222 3985
திகதி: 27.10.2017

(சி-165)

# சாவகச்சேரி தபால் நிலையம் தேசிய ரீதியில் முதலிடம்



(சாவகச்சேரி)

உலகதபால்தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள தபால் நிலையங்களுக்கிடையிலான தரப்படுத்தலில் சாவகச்சேரி தபால் நிலையம் அகில இலங்கை ரீதியிலும் வட மாகாண ரீதியிலும் முதலிடத்தை தனதாக்கிக் கொண்டது.

உலக தபால்தினத்தின் 143 ஆவது நினைவு தின நிகழ்வு பொலநறுவை புத்தி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றபோது சாவகச்சேரி அஞ்சல் நிலைய அதிபர் லம்பேட் இன்பராஜுக்கான சான்றிதழ் மற்றும் விருதுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிக் கௌரவித்தார். (இ-29)

# சர்வதேச பாதுகாப்புத் தலைவர்களின் மாநாட்டில் படைப் பிரதானி ரவீந்திர



(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் தீவிரவாதிகளின் தாக்குதல்களை ஒடுக்குவது பற்றிய பாதுகாப்புத் தலைவர்களின் மாநாட்டில் இலங்கைப் பாதுகாப்புப் படை பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன கலந்து கொண்டார்.

எழுபதுக்கும் அதிகமான நாடுகளின் பாதுகாப்புத் தலைவர்கள் கலந்துகொண்ட இரண்டாவது சர்வதேச மாநாடு அமெரிக்காவின் வேர்ஜீனியாவில் கடந்த 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதன் போது தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக நாடுகளிடையே ஏற்படுத்தப்படவேண்டிய தொடர்பாடல் மற்றும் பரஸ்பர உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. (இ-7)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 41<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L கடை<br>தொ.இ: B/7151 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 57<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் : BA ஆசிரியர் (தற்காலிகம்)<br>தொ.இ: G/6052 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் BA சிங்கப்பூர்<br>தொ.இ: B/7153 | பிறப்பு: 1990 RC<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் BSc/தனியார்தொழில்<br>தொ.இ: G/6054 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L சாரதி<br>தொ.இ: B/7155 | பிறப்பு: 1984 RC<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BDF/ வங்கியாளர்<br>தொ.இ: G/6056 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் O/L டுபாய்<br>தொ.இ: B/7156 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc,MSc,phd/ USA<br>எதிர்பார்ப்பு: பெண் விவகாரத்தானவர்<br>தொ.இ: G/6057 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்செய்கைக்கு போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறவில்லை

## விவசாயிகள் பெரும் நெருக்கடியில்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்கின்ற வரட்சி காரணமாக காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தில் 60 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ள நிலையில் மழை வீழ்ச்சியின்மையால் இரணைமடுக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், குடமுருட்டிக்குளம், புதுமுறிப்புக்குளம், கல்மடுக்குளம், கரியாலை நாகபடுவான்குளம் உட்பட அனைத்து குளங்களுக்குமான நீர் வரவு பெறவில்லை. அனைத்துக் குளங்களும் வரட்சியான நிலையில் காணப்படுகின்றன.

தற்போதைய காலத்தில் குளங்களின் நீர் மட்டம் பத்தடியைத் தாண்டியிருக்கும். ஆனால் குளங்களுக்கான நீர் வரவு கிடைக்ககப் பெறக் கூடிய வகையில் மழை வீழ்ச்சி இடம்பெறவில்லை.

மாவட்டத்தின் அனைத்து விவசாயிகளும் புழுதி விதைப்பின் மூலம் விதைப்பை நிறைவு செய்துள்ள நிலையில் மழை வீழ்ச்சி இடம்பெறாததன் காரணமாக பயிர்கள் எரிகின்றன. பல வயல்களில் விதைக்கப்பட்ட நெல்லுக்கு மழை வீழ்ச்சி இடம்பெறாததன் காரணமாக பயிர் முளைக்காத நிலைமை காணப்படுகின்றது. கூடுதலான விலையில் விதை நெல்லினைப் பெற்று விதைப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நெருக்கடி நிலைமையில் உள்ளனர்.

குறிப்பாக பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 12ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள மானாவாரி நெற்செய்கை அழிவடைந்து கொண்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழை வீழ்ச்சி இடம்பெறாவிட்டால் மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை பெரும் அழிவுகளை எதிர்நோக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2-315)




# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனர்த்த முன்னாயத்த தயார்படுத்தல் நிகழ்வு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அனர்த்த முன்னாயத்த தயார்படுத்தல் மற்றும் பதிலிருப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் அனர்த்த தயார்படுத்தல் மற்றும் பதிலிருப்பு பிரிவின் வழிகாட்டலில் முல்லை.மாவட்ட வைத்தியசாலை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஆகியன இணைந்து இந் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது. குறித்த ஒரு நேரத்தில் மிகப் பெருந்தொகையான விபத்துக்குள்ளானவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது வைத்தியசாலை நிர்வாகத்தினர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே இந் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

குறிப்பிட்ட பாரிய விபத்து தொடர்பான செய்தி வைத்தியசாலைக்கு கிடைக்கும் பட்சத்தில் வைத்தியசாலையின் அனைத்து பிரிவுகளும் எவ்வாறு தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். விபதுக்குள்ளானவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்து வரும் பட்சத்தில் அவர்களின் பதிலிருப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவதே இந் நிகழ்வின் நோக்கமாகும்.



நிகழ்வு முடிவடைந்த பின் எவ்வாறான விடயங்களில் முன்னேற்றங்கள் தேவை, திருத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றி வைத்தியசாலை பணிப்பாளரினால் ஊழியர்கள், தாதியர் மற்றும் வைத்தியர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (2-281)

# கரைவலை தொழிலுக்கு உழவு இயந்திரங்களை பயன்படுத்தும் முறைகளை நிறுத்துங்கள்

## ஜனாதிபதிக்கு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் கடிதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரங்களில் நடைபெற்று வருகின்ற கரைவலை தொழிலுக்கு உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறைகளை நிறுத்தக் கோரி வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் கந்தையா சிவநேசன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 108 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது.

இதன்போதே குறித்த கடிதம் தொடர்பில் அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யுத்த நடவடிக்கைகள் முடிவுக்கு வந்த பின்பு மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் தமது கரைவலைத் தொழிலுக்கு உழவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதை பரவலாகக் காண முடிகிறது.

மீன்பிடித் தொழிலுக்காக வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தரும் தொழிலாளர்களே மேற்படி சட்டவிரோத மீன்பிடி முறையை பயன்படுத்துகிறார்கள். உள்ளூர் மீன்பிடித் தொழிலாளர்கள் இந்த முறையை பயன்படுத்துவதிலிருந்து சுய கட்டுப்பாட்டுடன் தம்மை விலக்கி வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 80வரையிலான கரை வலை தொழிலிடங்கள் உள்ளன. ஒவ்வொரு கரைவலையிலும் 40 பேர் வரையிலும் தொழில் புரிகின்றனர். ஆனாலும் இன்றுஅவர்களால் சீராக தொழில் செய்ய முடியாத அளவுக்கு சட்டவிரோதமான முறையிலான உழவு இயந்திரமுறை எவ்வித கட்டுப்பாடின்றி மேற்கொள்ளப்படுகின்றது.

வெளிமாவட்ட மீனவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான உழவு இயந்திர முறையை கட்டுப்படுத்த முடியாதவர்களாக, அல்லது விரும்பாதவர்களாகவே இம் மாவட்டத்தில் உள்ள சுற்றுச்சூழல் திணைக்களத்தின் அதிகாரிகள் உள்ளனர் என குற்றஞ்சாட்டப்படுகின்றது. 400இற்கும் அதிகமான உழவு இயந்திரம் மூலமான மீன்பிடி முறையினால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது. இதைவிட 70 Km நீளமான கடற்கரை அழிவுக்குள்ளாகிறது.

இதன் பிரகாரம், உழவு இயந்திரங்களை தொடர்ந்து இயக்குவதன் மூலம் கடற்கரை குண்டும்குழியுமாகி இயல்பாக பாவனைக்குத்த வாததாக மாறுகின்றது.

கடல்சார்ந்த தாவரங்களான ஆம்பல் ,இராவணன் மீசை, அடம்பன் கொடி அனைத்தும் அழிக்கப்படுகின்றன.

இத்தாவரங்களை உண்டு வாழும் மணலை போன்ற மற்றும் சிறிய மீன்கள் உணவின்றி அழிவுக்குள்ளாகின்றன.

கைகளால் இழுத்துவரப்படும்போது கிடைக்கும் ஒரு சில செக்கன் இடைவெளி இல்லாமல் கரைவலை மடியை தொடர்ச்சியாக இயந்திரங்கள்மூலம் இழுத்து வருவதனால் சேறு நிறைந்த பிட்டி வழித்து வரப்படுவதனால் அதனுள் வாழும் மீன்கள் அழிந்து போகின்றன. இதன் காரணமாக சிறு தொழில்செய்யும் மீனவர்கள் மிக மோசமாக பாதிக்கப்படுகிறார்கள்.

கொக்கிளாய்ப் பகுதியில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட சட்டவிரோத உழவு இயந்திர முறையினால் கூலி வேலையாக கரைவலையில் ஈடுபடுபவர்களது தொழில் வாய்ப்புகளும் பறிபோய் விட்டன.

சட்டவிரோத உழவு இயந்திர உதவியுடனான மீன்பிடி நடவடிக்கைகளை உடன் நிறுத்த தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தங்கள் சுற்றுச் சூழல் அமைச்சின் கீழ் வரும் திணைக்கள அதிகாரிகள் மூலம் பாரபட்சமற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய கடுமையான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4-315-281)



மன்னார் மறைமாவட்டம்,கட்டைக்காட்டு பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட புதிய பங்குப்பணிமனை நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்ட போது... (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வகுப்பறை கட்டடத் தொகுதி திறப்பு

(மன்னார்)

மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான புதிய வகுப்பறை கட்டடத்தொகுதியை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனால் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் யூ.என். ஹபிற்டாட் நிறுவனத்தின் அமு



லாக்கத்துடன் குறித்த வகுப்பறைக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்விற்கு விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியான், யூ.என்.ஹபிற்டாட் நிறு வனத்தின் சிரேஷ்ட ஆலோ சகர் ஐ.ஏ.ஹமீட், யூ.என். ஹபிற்டாட் திட்ட முகாமையாளர் எம்.எஸ். எம். ஆலிம் ஆகியோர் கலந்து கொண்டதோடு ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

கிளிநொச்சி பூநகரி டைனமைற் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுள்ள ஐந்து பேருக்கும் தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி கடற்பகுதியில் மன்னார் பள்ளிமுனை பகுதியைச் சேர்ந்த 5 கடற்றொழிலாளர்கள் சட்ட விரோதமான முறையில் டைனமைற் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வட்டுவாகல் கடற்படை முகாம் காணி அளவீடு நிறுத்தம்

## வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியை உள்ளடக்கி மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணிகளை கையகப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கிழக்கு கடற்படை வலயத்துக்குட்பட்ட கோத்தபாய கடற்படை கப்பல் என்னும் கடற்படை தளத்துக்கு நேற்றையதினம் நிரந்தரமாகக் .காணி சுவீகரிப்புப் பணிகள் நடைபெறவிருந்த நிலையில், குறித்த காணிகளுக்கு சொந்தமான மக்கள் கடற்படை முகாம் அமைக்க நிரந்தரமாக காணி சுவீகரிப்புக்கு அளவீடுக்கு அனுமதிக்க முடியாது என தெரிவித்து வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த வர்த்தமானி அறிவித்தலில் குறித்த கடற்படை முகாமுக்கு நிரந்தரமாக காணி சுவீகரிக்கப்பட இருப்பதாக அறிவித்தல் வந்த நிலையில் நேற்றையதினம் காணி அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவிருந்தன.

இதனை அறிந்த மக்கள் குறித்த கடற்படை முகாமுக்கு முன்பாகவுள்ள வட்டுவாகல் பாலத்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் (ஏ-35) பரந்தன்-முல்லைத்தீவு வீதி ஊடான போக்குவரத்து அரை மணி நேரத்துக்கும் அதிகமாக தடைப்பட்டிருந்தது.

அதனை அடுத்து வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பொலிஸார் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வீதி மறியலை கைவிடுமாறு கோரிய போதும் மக்கள் தொடர்ந்தும் வீதி மறியல் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். அதனையடுத்து மக்களை சந்தித்த முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் (இன்று) நேற்றையதினம் நடைபெறவிருந்த குறித்த காணி சுவீகரிப்பு தொடர்பான அளவீட்டு பணிகள் நடைபெறமாட்டாது என தெரிவித்ததோடு உரியவர்களுக்கு காணி உரிமையாளர்களின் கோரிக்கை தொடர்பில் தெரிவிப்பதாக உறுதியளித்ததை தொடர்ந்து போராட்டம் மக்களால் கைவிடப்பட்டது.

குறித்த மக்களின் போராட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்து கொண்டு மக்களின் காணிகள் விரைவில் விடுவிக்கப்படவேண்டும் என தெரிவித்திருந்தார்.

இறுதி யுத்தத்துக்கு பின்னர் குறித்த கடற்படை முகாம் மக்களின் காணிகளில் அமைக்கப்பட்டதோடு கடற்படைமுகாம் நவீன வடிவில் பாரிய படைத்தளமாக கட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த கடற்படைத்தளத்துக்கு நிரந்தரமாக காணி சுவீகரிப்பு நடைபெற பலமுறை அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## குளங்களின் நீர்மட்டம் குறைவு நன்னீர் மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக சுமார் 750 இற்கும் மேற்பட்ட நன்னீர் மீனவக்குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்களின் நீர் மட்டம் மிகவேகமாக குறைவடைந்து வருகின்றது. இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், அக்கராயன் குளம், குடமுருட்டிக்குளம், வன்னேரிக்குளம், பிரமந்தனாறுக்குளம், கனகாம்பிக்கைக்குளம் , கரியாலை நாகபடுவான்குளம், புதுமுறிப்புக் குளம் ஆகிய ஒன்பது குளங்களின் கீழும் ஏனைய புதியாறு குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய குளங்களின் கீழும் சுமார் 750 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வருகின்றன.




இவ்வாறு முழு நேரமாக நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வரும் 750 வரையான குடும்பங்களும் தற்போதைய வரட்சி காரணமாக பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

குறிப்பிட்ட சில குளங்களின் மீன்பிடித்தொழில் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் கடுமையான வெப்பம் காரணமாக மீன் உருவாக்கம் அற்றுப்போயுள்ளது. இவ்வாறு வரட்சி காரணமாக நன்னீர் மீன்பிடியை நம்பி வாழும் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (2-315)



ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சூரம்போர் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றதைப் படத்தில் காணலாம். (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## சிவில் அமைப்புக்களுடன் கலந்துரையாடல்

(குருமன்காடு)-வவுனியாவில் "இலாபத் துக்குப் பதிலான வாழ்க் கைக்கான பொருளாதாரம்" என்ற தொனிப் பொருளில் சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் நேற்று விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

காணி மற்றும் விவசாய மறுசீர் அமைப்பினால் நடத்தப்பட்ட இக்கலந்துரையாடலில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது புதிய அரசியல் யாப்பு நாட்டின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக மக்களிடையே போதியளவு விழிப்புணர்வு காணப்படாமை தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப் பட்டன. (2-250)

# வவுனியாவில் 22 வேலைத் திட்டங்களுக்கு 3.3 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு

(குருமன்காடு)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து இளைஞர் பாராளுமன்றத்திற்கு ஒதுக்குகின்ற நிதியின் கீழ் மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டம் நாடாளாவிய ரீதியில் இளைஞர் கழகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 22 அபிவிருத்தி திட்டங்களுக்கு 3.3 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகரன் கேசவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ் வருடம் 3 ஆயிரம் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கியிருந்தார்.

ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்கும் கடந்த வருடம் 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இவ் வருடம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் மக்கள் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட காரியாலயத்தின் அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர், பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள் உடைய நேரடி கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படும்.

இவ் வேலைத்திட்டத்திற்கு விண்ணப்பித்திருந்த இளைஞர் கழகங்களுக்கு 4 பிரதேச செயலகங்களிலும் பிரதேச செயலாளர்கள் தலைமையில் நேர்முகத்தேர்வு நடைபெற்று கழகங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவில் வேலைத் திட்டத்தின் எண்ணிக்கை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா பிரதேச செயலக பிரிவில் 8 வேலைத்திட்டங்களும், வவவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் 5 வேலைத்திட்டங்களும், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 5 வேலைத் திட்டங்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 4 வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகரன் கேசவன் மேலும் தெரிவித்தார். (2-250)



முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு தொற்று நோய்கள் பரவி வரும் நிலையில் முல்லைத்தீவு இளைஞர் படையணியினால் நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் நண்பகல் வரை சிரமதானப் பணி நடைபெற்றுள்ளது. இதில் சுமார் நூறு இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு வைத்தியசாலை வளாகத்தை சுத்தம் செய்துள்ளனர். (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# வளிமண்டல மாசாக்கம் தொடர்பான பிரச்சினைகள்: அமிலமழை, ஒளி இரசாயனப் புகார்

கொழும்பு இரசாயனவியல் நிறுவகத்தில் (Insitiute of Chemistry) பேராசிரியர் K.R.மகாநாமவினால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் வழங்கப்பட்ட குறிப்புக்கள் உள்ளடங்கிய வளிமண்டல மாசாக்கம் பற்றிய பகுதி மாணவர்களின் நலன் கருதிப் பரீட்சை நோக்கில் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றது. பேராசிரியர் K.R. மகாநாம கபொத (உ/த) இரசாயனவியல் பாட வினாத்தாள் தயாரிக்கும் குழுவில் கைத்தொழில் மற்றும் சூழலியல் இரசாயனம் தொடர்பான வினாக்களுக்குப் பொறுப்பான பேராசிரியர் ஆவார்.

அமில மழை (Acid Rain)

வளிமண்டலத்திலுள்ள அமில வாயுக்கள் நீரில் கரைந்து அமிலத்தன்மைக்குப் பங்களிப்புச் செய்கின்றன. இவ்வாறு அமிலத்தன்மையை ஏற்படுத்தும் வாயுக்கள் எல்லாம் அமில மழைக்குக் காரணமாக அமைவது இல்லை. ஏனெனில் உருவாகும் அமிலத்தின் வலிமை ஒரு குறிப்பிடத்தக்க மட்டத்தினை விட அதிகரிக்கும் போதுதான் அமில மழைக்குக் காரணமாக அமைகின்றது.

சாதாரண மழை நீரின் $P^H$ பெறுமானம் அண்ணளவாக 5.6 . இப் பெறுமானம் 5 இனை விடக் குறையும் போது அமில மழை எனப்படுகின்றது.

உதாரணம்:

$CO_2(g)$ இன் அளவு வளிமண்டலத்தில் உயர்மட்டத்தில் காணப்பட்டபோதிலும் அது அமில மழைக்குப் பங்களிப்புச் செய்வதில்லை. ஏனெனில் $CO_2(g)$ நீரில் கரைவதனால் பெறப்படும் காபோனிக் கமிலம் $(H_2CO_3)$ pH 5.1 - 5.8 கொண்டதாக அமைகின்றது.

ஆனால் NOx, SOx என்பன வளிமண்டலத்தில் மிகச் சிறிய அளவில் காணப்பட்டாலும் அவற்றின் பங்களிப்பு மிக உயர்வாக இருக்கும். ஏனெனில் $NO_2$ வாயு நீரில் கரைவதனால் பெறப்படும் $HNO_2$, $HNO_3$ அமிலங்களினதும் $SO_2$ வாயு நீரில் கரைவதனால் பெறப்படும் $H_2SO_3$ (aq) அமிலத்தினதும் pH 4 - 5 வரை குறைவாகக் காணப்படும்.

அமில வாயுக்கள் நீரில் கரைந்து அமிலமழைக்குப் பங்களிப்புச் செய்தலில் பிரதான இரண்டு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1.அமிலவாயுக்கள் நீரில் கரையும் திறன் $(K_H)$

2.உருவாகும் அமிலத்தின் வலிமை (Ka)

**வளிமண்டலத்தில் $SO_2(g)$ இன் தாக்கங்கள்**

1.$SO_2(g)$ நீரில் கரைதல்

$SO_2(g) + H_2O(l) \rightleftharpoons H_2SO_3(aq)$

$H_2SO_3(ag) + H_2O(l) \rightleftharpoons H_3O^+(aq) + HSO_3^-(aq)$

$HSO^-_3(aq) + H_2O(l) \rightleftharpoons H_3O^+(aq) + SO_3^{2-}(aq)$

2. $SO_2(g)$ இனது ஒட்சியேற்றம்

$SO_2(g) \xrightarrow[\text{ஒட்சியேற்றிகள்}]{\text{வளிமண்டலத்திலுள்ள}} SO_3(g)$

வளிமண்டலத்திலுள்ள $O_2(g)$, $O(g)$, $\dot{O}H(g)$ பரஒட்சைட்டுக்கள் போன்றன ஒட்சியேற்றிகளாகத் தொழிற்படும்.

பின்பு $SO_3(g)$ நீரில் கரைந்து $H_2SO_4(aq)$ ஐ உருவாக்கும்.

3. $SO_2(g)$, $O_2(g)$ ஆகியன இரண்டும் மழைத்துளியில் கரையக்கூடியன. மழைத்துளி இரண்டு பதார்த்தங்களையும் ஒன்றாகச் சேர்ப்பதன் மூலம் ஒட்சியேற்ற செயன்முறையை சாதகமாக்கும்.

$SO_3(g) + H_2O(l) + 1/2O_2(g) \rightarrow H_2SO_4(aq)$

$H_2SO_4(aq) + 2H_2O(l) \rightarrow 2H_3O^+ + SO_4^{2-}(aq)$

**வளிமண்டலத்தில் NOx இனது தாக்கங்கள்**

$2NO(g) + O_2(g) \rightarrow 2NO_2(g)$

$4NO_2(g) + 2H_2O(l) + O_2(g) \rightarrow 4HNO_3(aq)$

$HNO_3(aq) \rightarrow H^+(aq) + NO_3^-(aq)$

**$SO_2$ சூழலில் சேரும் வழிகள்**

1.S ஐக் கொண்டுள்ள சேர்வைகளின் தகனம்

உ+ம் : நிலக்கரி, டீசல்

2.உலோகங்களை வளியில் வறுத்தல் மூலம் பிரித்தெடுத்தல்

$MS + O_2(g) \rightarrow M + SO_2(g)$

**$NO_x$ சூழலில் சேரும் வழிகள்**

1.Nஐக் கொண்டுள்ள சேர்வைகளின் தகனம்

2.இடிமின்னலின்போது $N_2(g)$, $O_2(g)$ உடன் சேருதல்

$N_2(g) + O_2(g) \rightarrow 2NO(g)$

3. மேலதிக வளமாக்கிகளின் பாவனையின்போது அவற்றின் மீது பக்றீரியாக்களின் உயிர் இரசாயனத் தாக்கங்களின் போது

4.900°C இற்கு மேற்பட்ட வெப்பநிலையில் நடைபெறும் தகனச்செயன்முறைகளின் போது

உதாரணம்: மோட்டார் வாகனங்களில் நடைபெறும் எரிபொருட் தகனம், சிகரெட்டில் நடைபெறும் தகனம்

5. வளிமண்டலத்தில் நடைபெறும் ஒட்சியேற்றல் தாக்கங்களின் போது

*ஓரினமான ஒட்சியேற்றம்

*ஐதரொட்சைல் சுயாதீன மூலிகம் மூலம்→

$S\dot{O}_2 + OH \quad HS\dot{O}_3$

$HS\dot{O}_3 \xrightarrow{O_2} SO_3 + H\dot{O}_2$

* அணுநிலை 'O' மூலம்

$SO_2 + 'O' \longrightarrow SO_3$

* ஏனைய ஒட்சியேற்றிகள் மூலம் $O_3$, பரஒட்சைட்டுக்கள் மூலம்

$HO_2 + SO_2 \rightarrow SO_3 + \dot{O}H$

இறுதியாக

$SO_3(g) + H_2O(l) \longrightarrow H_2SO_4(aq)$

* மழைநீர் துளியில் ஓரினமான கரைசல் நிலைக்குரிய தாக்கம்

$SO_2(g) + H_2O_2(aq) \rightarrow H_2SO_4(aq)$

பல்லினமான ஒட்சியேற்றம்

$SO_2(g) + 1/2O_2(g) \rightarrow SO_3$

$SO_3 + H_2O \rightarrow H_2SO_4$

இங்கு V, Mn, Fe போன்றன திறனுடைய ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படும்.

இங்கு தாக்கிகளும், ஊக்கியும் வெவ்வேறு பௌதீக நிலைகளில் இருப்பதனால் பல்லினமான ஒட்சியேற்றம் எனப்படுகின்றது.

**அமில மழையினால் ஏற்படும் பாதகமான விளைவுகள்**

1.தாவரங்களைச் சேதப்படுத்துவதுடன் நீர்நிலைகளில் உள்ள மீன்களை இறக்கச் செய்கின்றன.

2. அமிலமழையில் காணப்படும் சல்பூரிக்கமிலம், நைத்திரிக்கமிலம் போன்றன மண்ணிலுள்ள அலுமினியம் சிலிக்கேற்றில் உள்ள அலுமினியத்தைக் கரையச் செய்து நீரினுள் சுயாதீன $Al^{3+}$ஐ வெளியேற்றும். இச் சேர்வை மீன்களின் பூக்களில் காணப்படும் சீதத்துடன் திரள்வதால் மீன்களின் வாயுப் பரிமாற்றம் பாதிப்படையும்.

3. அமில மழைநீர் மண்ணினூடாக வடிந்து செல்லும் போது போசணைப் பதார்த்தங்கள் மண்ணிலிருந்து அகற்றப்படுவதனால் மண்ணின் வளம் குன்றும். மேலும் $Al^{3+}$ அயன்களை இவை விடுவிப்பதால் முக்கிய போசணைப் பதார்த்தங்களான $Ca^{2+}$, $Mg^{2+}$ போன்றவற்றிற்குப் பதிலாக $Al^{3+}$ அயன்களை தாவரங்கள் உறிஞ்சுகின்றன.

4.சுண்ணாம்புக் கல்லாலான கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், தூபிகள் போன்றன சேதமடைகின்றன.

5.கட்டடப்பொருள், உலோகங்கள்,அரிப்பிற்குள்ளாவதால் கட்டடங்கள், பாலங்கள், கப்பல்கள், மோட்டார் வாகனங்கள் என்பன பாதிப்படைகின்றன.

6. தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

* கூடுதலான அளவு அமிலத் தன்மை தாவர இலைகளைப் பாதிப்படையச் செய்வதுடன் தாவர வளர்ச்சியையும் குறைக்கின்றது.

* ஒளித்தொகுப்புச் செயன்முறைகளைக் குறைக்கும்.

* $SO_2$வாயு தாவரங்களுக்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தும்

* சல்பரின் ஒட்சைட்டுக்கள் சுவாசப்பையில் அழற்சியை ஏற்படுத்தும்.

*நைதரசனின் ஒட்சைட்டுக்கள் மூக்கில் அழற்சியை ஏற்படுத்தும்.

* அடையல் பாறைகளில் இருந்து நச்சுத்தன்மையான உலோகங்களை வெளிவிடச் செய்யும். இவை தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் நச்சுத்தன்மையானதாக அமையும்.

$MCO_3 + H^+ \longrightarrow M^{2+} + HCO_3^-$

* நீர்நிலைகள் அமிலத்தன்மையாவதுடன் அங்குள்ள உயிரங்கிகளுக்கு பாதிப்பினையும் உண்டு பண்ணும்.

**அமில மழையால் சூழலில் ஏற்படும் பிரச்சினைகள்**

1. டொலமைற்று ($CaCO_3$, $MgCO_3$), சுண்ணாம்புக்கல், மாபிள் என்பன அமில நீரில் கரையும். இக் கரைதல் செயற்பாடு பின்வரும் வெவ்வேறு நிலைமைகளில் வெவ்வேறு விதமாக அமையும்.

i.சிறிதளவு அமில நிலைமைகளின் கீழ்

$CaCO_3.MgCO_3 + 2H^+(aq) \rightarrow Ca^{2+}(aq) + Mg^{2+}(aq) + HCO_3^-(aq)$

$\rightarrow CaCO_3(s) + H^+(aq)$

$Ca^{2+}(aq) + HCO_3^-(aq)$

$\rightarrow MgCO_3(s) + H+(aq)$

$Mg^{2+}(aq) + HCO_3^-(aq)$

இங்கு கரைய முடியாதவை கரையக்கூடியனவாக மாறும்.

ii. செறிந்த அமில நிலைமைகளின் கீழ்

$\rightarrow CaCO_3.MgCO_3(s) + 4H^+$

$Ca^{2+} + Mg^{2+} + 2H_2O(l) + 2CO_2(g)$

$CaCO_3(s) + 2H^+ \rightarrow Ca^{2+}(aq) + H_2O(l) + CO_2(g)$

2. மண்கரைசலில் உள்ள கற்றயன்கள் $H^+$ அயன்களால் மாற்றீடு செய்யப்படுகின்றன. இதனால் மண்ணிலுள்ள $Al^{3+}$, $Mg^{2+}$, $Ca^{2+}$ ஆகிய கற்றயன்களும் பார உலோகங்களும் மண்ணிலிருந்து அகற்றப்படுகின்றன.

3. மண்ணினூடாக வடிந்தோடும் அமிலநீரானது பாறைகள் வானிலையாலழிதலை ஏற்படுத்துவதுடன் மேற்பரப்பு நீரின் வன்மை, அமிலத்தன்மை, உவர்த்தன்மை, நைதரசன் செறிவு என்பனவற்றையும் அதிகரிக்கச் செய்யும்.

**அமில மழையினைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

1. $CaCO_3(s)$ போன்ற காரத்தன்மையான பதார்த்தங்களைப் பயன்படுத்தி $SO_2(g)$ இனை இல்லாமற் செய்தல்.

$SO_2(g) + CaCO_3(s) \longrightarrow CaSO_3 + O_2$

2. யூரியாவினைப் பயன்படுத்தி $NO_2(g)$ இனை இல்லாமற் செய்தல்

$NH_2CONH_2 + NO_2 \rightarrow N_2$

(தொடரும்)

கே.வாணிமுகுந்தன்
பிரதி அதிபர், யா/
மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை

## வாரத்திற்கு ஒரு புதிர்! 196

ஐக்கிய அமெரிக்காவில் (USA) பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை முதன் முதலில் (1869 இல்) வழங்கிய மாகாணம் எது?

புதிர் 195 இற்கான விடைகளை 06.11.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான
சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 195க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கார்த்திகேயன் சசிதரன்
சர்வோதய வீதி.
ஆவரங்கால் மேற்கு.

**புதிர் 195க்கான கேள்வியும் விடையும்:**

2017 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றவர் யார்?
Kazuo Ishiguro

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 196**

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா மையத்தை அகற்றக்கோரி வடக்கு மாகாண சபை முன் கவனயீர்ப்பு




(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு அக்கரை கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையத்தை அகற்றுமாறு கோரி வடக்கு மாகாண சபைக்கு முன்பாக அப்பகுதி கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்றைய தினம் ஈடுபட்டிருந்தனர். வடக்கு மாகாண சபையின் 108 வது அமர்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலக கட்டடத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாகாண சபைக்கு வெளியே போராட்டம் நடைபெற்றது.

வலி.கிழக்கு பிரதேச சபையால் தொண்டைமானாறு அக்கரை பகுதியில் உல்லாச சுற்றுலா மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சுற்றுலா மையத்தால் அப்பகுதியில் கலாசார சீர்கேடு அதிகரித்து காணப்படுவதாகவும் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் கூறி, அப்பகுதி மக்கள் சுற்றுலா மையத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த உல்லாச சுற்றுலா மையத்தை அங்கிருந்து அகற்றி சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்குமாறு கோரி வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சுகிர்தன் சபையில் பிரேரணை ஒன்றை கொண்டு வந்திருந்தார். எனினும் அந்த பகுதியில் உள்ள சிலர் சுயநல நோக்கங்களுடன் தான் குறித்த சுற்றுலா மையத்தை எதிர்ப்பதாக மாகாண சபையின் கடந்த அமர்வில் சில உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் தான் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அங்கு அமைந்துள்ள சுற்றுலா மையத்தை சிறுவர் பூங்காவாக மாற்றுமாறு கோரியும் அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். எமது பெண்களின் கலாசாரத்தையும் தன்மானத்தையும் பாதுகாப்போம்,

கலாசார சீர்கேட்டை உடன் நிறுத்து, மதுப்பாவனையை அனுமதிக்காதே, நூற்றுக்கணக்கான மக்களின் வயிற்றிலடிக்கும் சுற்றுலாத்துறை எமக்கு வேண்டாம் என எழுதப்பட பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டம் மாகாண சபை அமர்வு முடியும் வரை நடைபெற்றிருந்தது. (இ-4-134)



பொன்னாலை மான் பாய்ந்தான் தரவையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாட்டுவண்டி சவாரியின் போது...

# இலங்கை இன்று சரியான பாதையில் பயணிக்கின்றது

## கட்டாரிலுள்ள இலங்கையர்கள் மகிழ்ச்சி

(கொழும்பு)

நேர்மையான, எளிமையான அரச தலைவராக விளங்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இலங்கை இன்று சரியான பாதையில் பயணிப்பதையிட்டு தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாக கட்டாரில் வசிக்கும் இலங்கையர்கள் தெரிவித்தனர்.

கட்டாருக்கான இரண்டு நாள் அரசமுறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் கட்டாரில் வசிக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் டோஹா நகரில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெருந்திரளான இலங்கையர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். ஜனாதிபதிக்கு இதன்போது சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், சிறுவர், சிறுமியர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, எத்தகைய சவால்களையும் தடைகளையும் எதிர்கொள்ள நேரிட்டாலும் சுபீட்சம் மிக்க சிறந்த ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்காக தமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ள ஜனநாயகம், சுதந்திரம் காரணமாக சிலர் இணையத்தினூடாகவும் வலைத்தளங்களின் ஊடாகவும் மிகவும் தவறான பிரசாரங்களை மேற்கொள்கின்றமை பற்றி கருத்து தெரிவித்த ஜனாதிபதி இணையத்தினூடாக காணும் இலங்கை தேசத்தின் நிலை உண்மையான நிலைக்கு முற்றிலும் வேறுபட்டதாகும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தினால் நாட்டில் தரமான அரசியல் கலாசாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், நல்லாட்சிக் கோட்பாடுகளின் கீழ் சமூக, பொருளாதார மாற்றங்கள் பலவும் ஏற்படுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி கட்டாரில் வசிக்கும் இலங்கையர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

கட்டாருக்கான தமது அரசமுறை விஜயம் தொடர்பாக கருத்து தெரிவித்த ஜனாதிபதி இரு நாடுகளுக்கிடையில் ஏற்படுத்தப்படும் புதிய ஒப்பந்தங்களினூடாக நாடுகளுக்கிடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப உறவுகள் மேலும் வலுப்பெறும் என்றும் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் பணிபுரியும், மத்திய கிழக்கில் வசிக்கும் சகல இலங்கையர்களும் தாய் நாட்டிற்கு வழங்கும் கௌரவத்திற்காக ஜனாதிபதி இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கான முதலாவது அரச துறை விஜயமாக கட்டார் நாட்டிற்கு வருகை தந்ததையிட்டு அங்கு வாழும் இலங்கையர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (இ-7)

# இடி,மின்னல் தாக்கத்திற்குள்ளான மின்சாதனப் பொருட்கள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

இடி, மின்னல் தாக்கத்திற்குள்ளாகி இருபாலைப் பகுதியில் பல மின் சாதனப் பொருட்கள் செயலிழந்துள்ளதாக தெரியவருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இருபாலை கட்டப்பிராய் பகுதியில் ஏற்பட்ட இடி மின்னல் தாக்கத்தினால் குறித்த பகுதியிலுள்ள பல வீடுகளில் மின்சாதனப் பொருட்கள் செயலிழந்ததுடன் தொலைத் தொடர்பு வயர்களும் அறுந்த நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-10-136)

# தீவக வலய மாணவர் பாராளுமன்றம் இன்று வேலணை மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் சு. சுந்தரசிவம்தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண ஓய்வு நிலை கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா, கௌரவ விருந்தினர்களாக வேலணை விடிவெள்ளி அமைப்பின் தலைவர் இ.சிறிதரன், வேலணை மக்கள் ஒன்றியத் தலைவர் ம.அரசரட்ணம், புங்குடுதீவு உலக மையத் தலைவர் பி.சதீஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# அரசியல் யாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய சமாதானப் பேரவையின் ஆதரவால் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையினால் அரசியல் யாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறும்..இங்கு வளவாளர்களாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான கிருஸ்ணநாதன், லால்விஜயநாயக்க ஆகியோர் கலந்து கொள்வர்.

இக் கருத்தரங்கில் பங்குகொள்ள விரும்புபவர்கள் இணைப்பாளர் பா.**அனுசனின் 076 684 8679 என்ற இலக்கத்து**டன் தொடர்பு கொண்டு முன் பதிவினை செய்யுமாறு பொதுச் செயலாளர் கனகலிங்கம் ராசா அறிவித்துள்ளார். (இ-7)

# வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் கந்தசாமி நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி திருஞானசம்பந்தர் சந்திரசேகரன் கலந்து கொள்வார். நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். குடத்தனை அ.த.க. பாடசாலை அதிபர் கே.குகநாதன் நிகழ்த்துவார். பரிசில்களை பருத்தித்துறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வதனா சந்திரசேகரன் வழங்குவார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் பாடசாலை திறந்த வெளியரங்கில் பாடசாலை அதிபர் கே.வாகீசன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக உயர் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளரும் பாடசாலை பழைய மாணவனுமான வ. சிவகுமார் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் டாக்டர் சி.கோமதி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-136)

❖❖❖❖❖❖

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதிக்கல்விப்பணிப்பாளர் அ.அகிலதாஸ், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன், தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளா சோ. சுஜீவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# பாரதம்

## தாஜ்மஹால் வளாகத்தை சுத்தம்செய்த உ.பி முதல்வர்



(ஆக்ரா)

பிரதமர் மோடியின் முக்கிய திட்டங்களில் ஒன்றான தூய்மை இந்தியாவை துரிதப்படுத்தும் நோக்கில், ஆக்ராவில் உள்ள உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹாலை உத்தரப்பிரதேச மாநில முதல்வர் நேற்று தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டார். முதல்வர் யோகி ஆதித்ய நாத் நேற்றுக் காலை தாஜ்மஹால் வளாகத்திற்கு சென்றார். அங்கு சென்ற அவர் கையில் துடைப்பம் ஏந்தி தாஜ்மஹால் வளாகத்தை தூய்மைப்படுத்தினார். யோகி ஆதித்யநாத்துடன் அரசு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களும் தாஜ்மஹாலை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். முதல்வரின் வருகையை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து முதல்வர் யோகி ஆதித்ய நாத் ஷாஜகான் பூங்கா பகுதியிலும் தூய்மை பணியில் ஈடுபட்டார். முன்னதாக உத்தரப்பிரதேச அரசின் சுற்றுலா வழிகாட்டி பக்கத்திலிருந்து தாஜ்மஹால் அகற்றப் பட்டது. இது நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதனை தொடர்ந்து பல்வேறு பாரதிய ஜனதா தலைவர்கள் தாஜ்மஹாலுக்கு எதிரான பல கருத்துக்களை முன் வைத்ததால் பெரும் சர்ச்சை வெடித்தது.

இந்நிலையில் அம்மாநில முதல்வர் யோகி ஆதித்ய நாத் தாஜ்மஹாலை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது அமெரிக்கா குண்டு வீச்சு

(சனா)

ஏமன் நாட்டில் ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்கா நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 13 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

அரபு நாடுகளான ஈராக், சிரியாவில் பதுங்கி இருக்கும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தொடர்ந்து குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் பக்கத்து நாடுகள் சிலவற்றிலும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் புகுந்து சில இடங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இதேபோல் ஏமன் நாட்டில் அல்பேதா மாகாணத்தின் சில பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி வைத்துள்ளனர். அந்த இடங்களில் அமெரிக்கா ஏற்கனவே சில முறை தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி ஐ.எஸ். தீவிரவாதிகளின் முகாம்களில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் 50 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் மீண்டும் அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. ஐ.எஸ்.தீவிர வாதிகள் 2 வாகனங்களில் வீதியில் சென்று கொண்டு இருப்பதை அறிந்த அமெரிக்க விமானப்படை உடனடியாக ஆளில்லா விமானங்களை அனுப்பி குண்டு வீச செய்தது. இதில் 2 வாகனங்களும் சித றின. அதில் பயணித்த 13 ஐ.எஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (8)

## பட்டாசு ஆலையில் பயங்கர தீ விபத்து

### 23 பேர் பலி

(ஜகார்தா)

இந்தோனேஷியா நாட்டில் டாங்ஜெராங் என்ற இடத்தில் உள்ள பட்டாசு உற்பத்தி தொழிற்சாலையில் நேற்று ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 23 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தோனேஷியா தலைநகர் ஜகார்தாவின் மேற்கு பகுதியில் உள்ள டாங்ஜெராங் என்ற இடத்தில் தொழிற்சாலை வளாகம் உள்ளது. இந்த வளாகத்தில் உள்ள பட்டாசு உற்பத்தி ஆலை ஒன்றில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து காரணமாக உள்ளே இருந்த வெடி பொருட்கள் வெடித்துச் சிதறத் தொடங்கின.

தீ மற்றும் கரும்புகை காரணமாக மீட்புப்பணி சவாலாக இருப்பதாக மீட்புப் படையினர் கூறியுள்ளனர். 103 தொழிலாளர்கள் விபத்து நடந்த நேரத்தில் உள்ளே இருந்ததாக கூறப்படுகிறது. 23 பேர் பலியானதாகவும், 43 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (8)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் தொடர்பு; மூன்று கேரள இளைஞர்கள் கைது

(திருவனந்தபுரம்)

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்த 3 கேரள இளைஞர்கள் கண்ணூரில் பதுங்கியிருந்த போது பொலிஸார் அவர்களை கைது செய்து இரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கேரள மாநிலம் கோழிக்கோடு, கண்ணூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் சுமார் 20 பேர் திடீரென்று மாயமானார்கள். அதன் பிறகு அவர்களது உறவினர்களுக்கு மாயமானவர்களிடமிருந்து தொலைபேசித் தகவல்கள் மட்டும் பரிமாறப்பட்டன.

அந்த தகவலின்படி அவர்கள் சிரியாவில் செயற்படும் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்திருப்பது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து இந்த தகவல் மாநில அரசு மூலம் தேசிய புலனாய்வு அமைப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

தேசிய புலனாய்வு அமைப்பினரும் அவர்களை கண்காணித்து வந்தனர். இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளும் கேரளாவில் நடந்து வருகிறது.

இதற்கிடையில் கண்ணூர் மாவட்டத்தில் இருந்து மாயமாகி இருந்த அப்துல் ரசாக் (வயது 26), ரஷீத் (வயது 25), மிதிலாஜ் (வயது 24) ஆகியோர் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பினர் விசாரணை நடத்திய போது, அவர்கள் சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் இணைந்திருப்பது உறுதியானது.

இந்நிலையில் அவர்கள் 3 பேரும் கடந்த 2 நாட்களுக்கு முன்பு கண்ணூர் திரும்பி இருப்பதாக கண்ணூர் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அவர்கள் நடமாட்டத்தை கண்காணித்து கண்ணூர் முண்டரை என்ற இடத்தில் வைத்து அப்துல் ரசாக், ரஷீத், மிதிலாஜ் ஆகிய 3 பேரையும் கைது செய்தனர்.

அவர்களை இரகசிய இடத்தில் வைத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். மேலும் இவர்கள் கைதானது பற்றி தேசிய புலனாய்வு அமைப்புக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுபோல வேறு யாராவது ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் கேரளா திரும்பி உள்ளார்களா? என்று பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (8)

## ஒரு வருடத்தின் பின் நடந்த தாய்லாந்து மன்னரின் இறுதிச்சடங்கு



(பாங்கொக்)

தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யா தேஜ் இறந்து ஒரு வருடத்திற்குப் பின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்றது. இதில் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர்.

ஆசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் பரம்பரையாக மன்னர் ஆட்சி நடந்து வந்தது. இடையில் ஜனநாயக ஆட்சிக்கு மாறியது.

ஆனாலும், பரம்பரையாக மன்னரை தேர்வு செய்யும் முறையும் தொடர்ந்து இருந்து வருகிறது. மன்னருக்கு குறைந்த பட்ச அதிகாரங்கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

அங்கு மன்னராக இருந்து வந்த பூமிபால் அதுல்யா தேஜ் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி உடல்நல குறைவு காரணமாக மரணம் அடைந்தார். அவருக்கு வயது 88.

மன்னர் இறந்தாலும் உடனடியாக அவருக்கு இறுதிச் சடங்குகள் நடத்தப் படவில்லை. பிரமாண்ட நினைவிடம் ஒன்று அமைத்து அதில் இறுதி சடங்குகள் நடத்துவது என்று முடிவு செய்திருந்தனர். இதற்காக பல கோடி ரூபாய் செலவில் நினைவிடம் அமைக்கும் பணி நடந்து வந்தது.

பாங்கொக்கில் சனம் லூவாங் என்ற இடத்தில் நினைவிடம் கட்டும் பணி நடந்தது. மிகப்பெரிய நிலப்பரப்பில் செயற்கை ஏரியுடன் இந்த நினைவிடம் கட்டப்பட்டது. அதன் பணிகள் முடிவடைந்தன.

இதையடுத்து ஓராண்டுக்கு பிறகு மன்னரின் இறுதி சடங்கு நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக 4 நாட்களுக்கு முன்பே இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தொடங்கின. இதில் ஏராளமான மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.

அதைத்தொடர்ந்து இறுதி ஊர்வலம் தொடங்கியது. மரத்தினாலான ரதம் ஒன்று செய்யப்பட்டு அதில் உடலை வைத்து ஊர்வலமாக கொண்டு சென்றனர். நகரின் முக்கிய வீதிகள் வழியாக மன்னரின் உடல் எடுத்து செல்லப் பட்டது. ஊர்வலம் 5 மணி நேரம் நடைபெற்றது.

இறுதியாக நினைவிடம் அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு உடல் கொண்டு செல்லப் பட்டு அங்கு அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. மன்னரின் மகனும் தற்போதைய மன்னருமான வஜிராலாங்கோவா மன்னர் உடலுக்கு தீ மூட்டினார்.

ஊர்வலத்தில் பங்கேற்க நேற்றுக் காலை 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அரண்மனை அருகே கூடி இருந்தனர்.

இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்கு 40 நாடுகளின் தலைவர்கள் வந்திருந்தனர். 16 நாடுகளில் இருந்து மன்னர் குடும்பத்தை சேர்ந்தவர்களும் அங்கு வந்திருந்தனர். (8)

## இராணுவ தீவிரவாதிக

### 9 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள இராணுவ சாவடி மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 9 வீரர்கள் பலியாகினர். தாக்குதல் நடத்திய 17 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.



ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள பரா மாகாணத்திற்குட்பட்ட புஷ்ட் ரோடு மாவட்டத்தில் உள்ள இராணுவ சோதனை சாவடியின் மீது நேற்று முன்தினம் இரவு வெடி குண்டுகளை வீசியும், துப்பாக்கிகளால் சுட்டும் தலிபான் தீவிரவா


## ரோஹி திரும்ப

### மியன்மார்

(மியன்மார்)

மியன்மாரில் ஆங் சான் சூகி தலைமையிலான ஜனநாயக தேசிய லீக் (என்எல்பி) ஆட்சியில் உள்ளது. ஜனாதிபதியாக சூகியின் நண்பர் டின் கியாவ் பதவி வகிக்கிறார். மியன்மார் அரசின் ஆலோசகராகவும் ஆளும் கட்சியின் தலைவராகவும் சூகி இருக்கிறார்.

இந்நிலையில், கடந்த ஓகஸ்ட் 25ம் திகதி மியன்மாரில் இராணுவத்துக்கும் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதன் பின் இராணுவம் கடும் நடவடிக்கையில் இறங்கியதால், இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் மியன்மாரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ...சாவடி மீது ...ள் தாக்குதல்

திகள் தாக்குதலில் ஈடுபட்டனர். அங்கிருந்த இராணுவ வீரர்களும் எதிர் தாக்குதல் நடத்தினர்.

சுமார் 4 மணிநேரம் நீடித்த துப்பாக்கிச் சண்டைக்கு முடிவுகட்ட அந்த இடத்துக்கு இராணுவ விமானங்கள் விரைந்துவந்து தாக்குதல் நடத்தின. இருதரப்பு மோதலில் இராணுவத்தை சேர்ந்த 9 பேர் பலியானதாகவும், 4



வீரர்கள் காயமடைந்ததாகவும் பராமாகாண ஆளுநரின் செய்தி தொடர்பாளர் முஹம்மது நாசர் மெஹ்ரி தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தவந்த 17 தலிபான் தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (8)

## ஒருநாள் விமானியாக ஆறு வயதுச் சிறுவன்



(ரியாத்)


சவுதி அரேபியாவில் 6 வயது சிறுவன் ஒருநாள் விமானியாக பணியாற்றிய சம்பவம் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஆதம் என்ற சிறுவன் எதிகாட் விமானத்தை இயக்கிய விதத்தை பார்த்த அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். சிறுவன் ஆதம் விமானம் பற்றி அனைத்தையும் தெரிந்து வைத்துள்ளான். அந்த சிறுவன் வருங்காலத்தில் சிறந்த விமானியாக வருவான் என சமூக வலைத்தளங்களில் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். அவனு டைய கனவு விரைவில் நினைவாகும் எனவும் தெரிவித்தனர்.

விமானி போன்று உடை அணிந்து மற்றொரு விமானியுடன் இணைந்து எதிகாட் விமான பயிற்சி மையத்தில் உள்ள ஏ-380 விமானத்தை அவன் ஓட்டினான். (8)

## உலகில் சக்திவாய்ந்த கடவுச்சீட்டு; தரவரிசைப்படுத்தலில் சிங்கப்பூர் முதலிடம்

(சிங்கப்பூர்)

உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டு என்ற பெருமையை சிங்கப்பூர் நாட்டு கடவுச்சீட்டு பெற்றுள்ளது. இந்த கடவுச்சீட்டு மூலம் விசா இல்லாமல் 159 நாடுகளுக்கு செல்ல முடியும்.



சர்வதேச ஆலோசனை நிறுவனமான ஆர்டான் கேபிடல் என்ற நிறுவனம், உலக நாடுகளின் கடவுச்சீட்டுகள் குறித்த தரவரிசையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

விசா இன்றி பயணம்செய்ய அனுமதிப்பதன் அடிப்படையில் முதல் 10 இடங்களை பிடித்த உலகின் மிகவும் சக்திவாய்ந்த கடவுச்சீட்டுக்கள் குறித்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதில் சிங்கப்பூர் 159 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளது. இந்த நாட்டின் கடவுச்சீட்டு மூலம் 159 நாடுகளுக்கு விசா இன்றி பயணம் மேற்கொள்ளலாம்.

அதற்கு அடுத்த இடத்தில் 158 புள்ளிகளுடன் ஜெர்மனி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

அமெரிக்கா 154 புள்ளிகளுடன் 6-வது இடத்திற்கு பின்தங்கி உள்ளது. இந்திய கடவுச்சீட்டு 51 புள்ளிகளுடன் 75ஆவது இடத்திலுள்ளது.

இந்த பட்டியலில் கடைசி இடத்தில் ஆப்கானிஸ்தான் நாடு உள்ளது. அந்த நாட்டின் குடிமக்களை விசா இன்றி 22 நாடுகள் மட்டுமே அனுமதிக்கின்றன. அதற்கு முந்தைய இடத்தில் ஈராக் (26), பாகிஸ்தான் (26), சிரியா (29) உள்ளன.

இதுகுறித்து ஆர்டான் கேபிட்டல் நிறுவனத்தின் சிங்கப்பூர் அலுவலக நிர்வாகி பிலிப்பி மே கூறும்போது, 'முதல் முறையாக ஆசிய நாடு ஒன்று (சிங்கப்பூர்), சக்திவாய்ந்த பாஸ்போர்ட் வைத்திருக்கும் நாடு என்ற பெருமையை பெற்றுள்ளது. இது அந்நாட்டின் தூதரக உறவுகள் மற்றும் வெளியுறவு கொள்கைகளுக்கு ஒரு சான்றாகும்.

இந்த பட்டியலில் அமெரிக்கா மிகவும் பின்தங்கியுள்ளதற்கு காரணம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் விசா கெடுபிடி காட்டியதே காரணம் என கூறப்படுகிறது. (8)

## கென்யாவில் அரசியல் குழப்பம்




(நைரோபி)

கென்யாவில் தேர்தலில் ஏற்பட்ட முறைகேடுகள்காரணமாக உச்சநீதிமன்றிற்கு பொலிஸார் திடீரென 'சீல்' வைத்தனர்.

கென்யா நாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில்ஜனாதிபதி உஹுரு கென்யட்டா வெற்றி பெற்றார். ஆனால் அந்த தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி, உஹுரு கென்யட்டா வெற்றி பெற்றது செல்லாது என உச்ச நீதிமன்றம் அறிவித்தது. இதனால் அரசியல் குழப்பம் உருவானது. இதை யடுத்து நேற்று மறு தேர்தல் நடத்தப்படும் என அறிவிக் கப்பட்டது. ஆனால் இந்த தேர்தலை புறக்கணிக்கப் போவதாக எதிர்க்கட்சி தலை வர் ரைலா ஒடிங்கா அறி வித்தார்.

இதற்கிடையே இந்த தேர்தலுக்கான ஆயத்த வேலைகளை தேர்தல் வாரியம் சரியாக செய்து முடிக்கவில்லை என்பதால் தேர்தலை இப்போது நடத்தாமல் தாமதப்படுத்த வேண்டும் என்று கூறி, மனித உரிமைகள் ஆர்வலர் கெலிப் கலிபா என்பவர் உச்சநீதிமன்றில் வழக்கு தொடுத்தார்.

அந்த வழக்கை உச்சநீதிமன்று நேற்று முன்தினம் விசாரிக்க தயாரான போது, நீதிமன்றுக்குப் பொலிஸார் திடீரென 'சீல்' வைத்தனர்.

உச்சநீதிமன்றம் அமைந்துள்ள வீதியில் யாரும் நுழைய முடியாதபடிக்கு தடுப்பு வேலிகளை பொலிஸார் அமைத்துள்ளனர்.

அங்கு கலவர தடுப்பு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (8)

## ...ஞ்யா முஸ்லிம்களை அழைக்க நடவடிக்கை

### ...தலைவர் சூகி தகவல்



இருந்து பங்களாதேஷத்திற்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்தியாவிலும் ஆயிரக்கணக்கில் ரோஹி ஞ்யா முஸ்லிம்கள் தங்கி உள்ளனர்.

குறிப்பாக 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிஞ்யா முஸ்லிம்கள் பங்களாதேஷத்திற்குள் சென்றதால், அவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தர முடியாமல் அந்நாட்டு அரசு திணறி வருகிறது. இதையடுத்து அவர்களை திரும்ப அழைக்க வேண்டும்என்று பங்களா தேஷ்அரசு வலியுறுத்தி வருகிறது.

இச்சூழலில் பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் அசாதுஸமான் கான் தலைமையிலான 10 பேர் அடங்கிய குழுவினர், நேற்று முன்தினம் ஆங் சான் சூகியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அதன் பின் பத்திரிகையாளர்களிடம் சூகி கூறும்போது, மியன்மாரில் இருந்து அக திகளாக வெளியேறிய ரோஹிஞ்யா முஸ்லிம் களை திரும்ப அழைக்கும் நடவடிக்கையை அரசு தொடங்கி விட்டது. (8)



ரஷ்யாவில் அடுத்தாண்டு நடைபெற உள்ள உலகக்கோப்பை கால்பந்து தொடரில் தாக்குதல் நடத்துவோம் என அறிவிக்கும் விதமாக ஐ.எஸ்ஆதரவு இணையத்தளம் ஒன்று போஸ்டர் மூலம் மிரட்டல் விடுத்துள்ளது. ஐ.எஸ் ஆதரவு இணையத் தளமான வாபா மீடியா பவுண்டேஷன் என்ற தளமானது விளையாட்டு உலகத்தை அதிர வைக்கும்விதமாக ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளது. ஆர்ஜெண்டீனாவைச் சேர்ந்த நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ் ஸியின் கண்கள் மற்றும் வாயிலிருந்து இரத்தம் சிந்தும் வகையில் கம்பிகளுக்கு பின்னர் அவர் இருப்பது போல ஒரு போஸ்டரை அந்த தளம் வெளியிட்டுள்ளது.

## இந்தியா - ரஷ்யா இடையே இராணுவ கூட்டுப் பயிற்சி

(விளாடிவேஸ்டோக்)

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து முதன்முறையாக முப்படை இராணுவ பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

இருநாடுகளுக்குஇடையே இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் விளாடிவோஸ்டோக் துறைமுகத்தில் அதற்கான பயிற்சி தொடங்கியுள்ளது.

400இற்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்களும் ஐ.என்.எஸ்.சத்புரா, ஐ.என்.எஸ்.கட்மட் ஆகிய கப்பல்களும் 2 போர் விமானங்களும் 10 நாள் இராணுவப் பயிற்சியில் இந்தியா சார்பில் கலந்து கொண்டுள்ளது. இதன் மூலம் இரு நாடுகளிடையே ஒத்துழைப்பு வலுப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகருக்கான நில மீட்பு பணிகளில் ஐம்பது வீதம் பூர்த்தி

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தை அமைப்பதற்கான நிலத்தை உருவாக்கும் பணிகள் பாதிக்கட்டத்தை தாண்டியுள்ளதாகவும் நிலத்தை உருவாக்கும் பணிகள் 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் என்றும் மேல்மாகாண அபிவிருத்தி மற்றும் பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர உருவாக்கப்பணிகளை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பில்லியன் டொலர் சீன முதலீட்டில் உருவாக்கப்படவுள்ள துறைமுக நகரத்துக்கான 269 ஹெக்டேயர் நிலத்தை உருவாக்கும் பணிகளில் 50 வீதம் நிறைவடைந்துள்ளது. இதுவரை 134.5 ஹெக்டேயர் நிலம் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நிலத்தை உருவாக்கும் இந்தத் திட்டத்தின் முதற்கட்டத்தை நிறைவேற்றும் பணிகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும்.

நிலத்தை உருவாக்கும் பணிகள் நிறைவடைந்ததும் ஜனாதிபதி துறைமுக நகரப் பிரதேசத்தை நாட்டின் நிலப்பிரதேசமாக பிரகடனம் செய்வார். சட்டபூர்வமாக நாட்டின் வரைபடத்திலும் உள்ளடக்கப்படும். அதன் பின்னர் கட்டுமானப்பணிகளுக்கான அனுமதி அளிக்கப்படும்.

துறைமுக நகரத்தில் ஒரு பேர்ச் காணித்துண்டை உருவாக்குவதற்கு 285,000 ரூபா செலவு ஏற்படும். ஒரு



பேர்ச் காணித்துண்டை 20 மில்லியன் ரூபாவுக்கு விற்க முடியும். 2018 தொடக்கத்தில் இந்தக் காணிகள் ஏலத்தில் விற்கப்படும்.

முன்னைய அரசாங்கம் துறைமுக நகரத்தை பொழுதுபோக்கு மற்றும் சூதாட்டமையமாகவே அமைக்கத் திட்டமிட்டிருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் நிதி நகரமாக மாற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் துறைமுக நகரத்தில் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் முதற்கட்டமாக ஒரு பில்லியன் டொலர் முதலீடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல்முறையாக ஊடகவியலாளர்கள் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைக்கும் செயலக பணிக்காலம் ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிப்பு

(கொழும்பு)

நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் பணிக்காலம் ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் தொடர்பான பணிகளை முன்னெடுப்பதற்காக மனோ தித்தவெல வைத்தலைவராகக் கொண்ட இந்தச் செயலகம் 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.



இரண்டு ஆண்டுகள் செயற்படும் வகையில் உருவாக்கப்பட்ட இந்தச் செயலகத்தின் பணிக்காலம் முடிவுக்கு வருகிறது.

இந்நிலையில் இந்தச் செயலகத்தின் பணிக்காலத்தை 2019 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலராக கிரேஸ் ஆசீர்வாதம் நியமனம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சில் புதிதாக இராஜாங்கச் செயலர் என்ற பதவி உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 17ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தப் பதவியை உருவாக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதையடுத்து, வெளிவிவகார அமைச்சின் முதலாவது இராஜாங்கச் செயலராக கிரேஸ் ஆசீர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று



முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க வழங்கினார்.

வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான, கிரேஸ் ஆசீர்வாதம் நெதர்லாந்து, நேபாளம் ஆகிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றியவர்.

ஜேர்மனி, பாகிஸ்தான் நாடுகளில் இலங்கை தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார். அத்துடன் வெளிவிவகார அமைச்சில் முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார்.

நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பின் பிரதிப்பணிப்பாளராகவும் கிரேஸ் அசீர்வாதம் நான்கு ஆண்டுகள் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி அட்மிரலாகப் பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை கடற்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வுபெறும் வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா **அட்மிரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.**

நேற்று முன்தினம் 2017 ஒக்டோபர் 25ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டுள்ளது.

**1982ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையில் இணை**ந்த அட்மிரல் சின்னையா 35 ஆண்டுகள் பணியாற்றியிருந்தார்.

இலங்கை கடற்படைத் தளபதியாக கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பதவியேற்ற ட்ரவிஸ் சின்னையா நேற்றுடன் ஓய்வுபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ராவிஸ் சின்னையா



வுக்கு ஜனாதிபதி சேவை நீடிப்பை வழங்காமையினால் ஓய்வுபெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சௌகரியமான சைகைகள்!

என் இளவயதில் என்னை ஒரு விளையாட்டு மிக அசத்தியது உண்டு.

இருபது புத்தகங்களை மேசையில் இரண்டு வரிசையாக அடுக்கி வைத்து விட்டு அவற்றுள் ஒன்றைக் தொடச் சொல்லுவான் ஒரு நண்பன். நான் தொடுவேன். வெளியிலிருந்து வரும் இன்னொரு நண்பன் வருவான். நீ தொட்ட புத்தகம் எது என்று நான் சொல்லட்டுமா? என்பான். ''அதெப்படி முடியும்?'' என்பேன் நான். ஆனால் மிகச் சரியாகச் சொல்லி விடுவான். எனக்கு ஒரே வியப்பு.

அதன் பிறகு தான் அந்த இருவரும் ஓர் உண்மையைப் போட்டு உடைத்தார்கள். உள்ளே இருப்பவன் வெளியே இருந்து வருபவனைப் பார்த்துத் தலையைச் சொறிந்தால் முதல் வரிசையில் உள்ள புத்தகம் என்று பொருள். மூன்றாவது விரலை நெட்டி முறித்தால் மூன்றாவது புத்தகம் என்று பொருள். இவன் செய்கிற இந்த ஜாடைகளை வைத்தே அவன் மிகச் சரியாக அடையாளம் காட்டிவிடுவான்.

பல ஜோடிகள் ஒன்றாக இருக்கும் போது சட்டென்று பிக்னிக் போவது என்று முடிவாகிறது. ஒருவருடைய மனைவிக்கு மட்டும் இது பிடிக்கவில்லை. ஆனால் சபை நாகரிகம் கருதிச் சும்மா இருக்கிறாள். அவள் முகத்தை வைத்துக் கணவனால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. சம்மதம் என்கிறான். பிக்னிக்கில் தான் மனைவி சொல்கிறாள். எனக்கு இதெல்லாம் கொஞ்சம் கூடப் பிடிக்கலைங்க. அப்பவே சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே என்கிறான் கணவன். எல்லோரும் இருக்கும் போது எப்படிச் சொல்றதாம்? என்கிறாள் அவள். அதற்கு நான் என்ன பண்ண முடியும்? என்கிறான் இவன்.

பிக்னிக் விடயம் என்பது மிகச் சாதாரணம். இதுவே பலர் முன்னிலையில் ஒரு முக்கியமான முடிவு எடுக்க வேண்டும். அவன் மனைவியைக் கேட்டு விட்டுச் சொல்கிறேன் என்றா சொல்ல முடியும்? அல்லது மனைவிதான் ஏதும் துணிந்து சொல்லிவிட முடியுமா?

இரு பங்குதாரர்கள் கடையில் அமர்ந்திருக்கிறார்கள். ஒருவர் வருகிறார். பெரிய ஆர்டர் ஒன்றை நீட்டுகிறார். ஆனால் கடனில் கேட்கிறார். ஒரு பங்குதாரர் இவரை விடக்கூடாது என நினைக்கிறார். மற்றவர் ஐயோ! இது வம்பான வியாபாரம் என நினைக்கிறார். இருவரும் வாடிக்கையாளர் முன்பு பேசிக்கொள்ள முடியாத நிலைமை. ஒருவர் என்ன நினைக்கிறார் என்பது மற்றவருக்கு தெரியவில்லை.

மகனுடன் பெண்பார்க்கப் பெற்றோர் போகிறார்கள். பையனுக்கு பெண்ணைப் பிடிக்கவில்லை. எல்லோரும் வெளிப்படையாகக் கேட்கிறார்கள்.

இத்தகைய எல்லாச் சூழ்நிலைகளின் போதும் அந்தப் புத்தக விளையாட்டில் பின்பற்றிய முறையைப் பின்பற்ற வேண்டும்.

கண்ணாடியைக் கழற்றி துடைத்தால் சம்மதம், கர்ச்சிப்பை எடுத்துக் கழுத்தைத் துடைத்தால் சம்மதமில்லை என்பது போல் அவரவர் சௌகரியத்திற்கேற்ப இரண்டு சைகைகளை மட்டும் பின்பற்றலாம். அதில் வல்லவராகி விட்டால் கூடுதலான சைகைகளை அறிமுகப் படுத்தலாம்.

ஒரு தொழிலதிபரின் எதிரே உட்கார்ந்து கொண்டு ஒருவர் அறுஅறு என அறுக்கிறார். தொழிலதிபர் ஸ்டெனோவைக் கூப்பிடுகிறார். டேபிள் வெயிட்டை உருட்டுகிறார். உடனே அவள் புரிந்து கொண்டு சார்! உங்களைப் பார்க்க இன்னும் பத்து நிமிடத்தில் எக்ஸிகியூட்டிவ் இன்ஜினியர் வருகிறார் என்கிறாள். ஓ என்கிறார் தொழிலதிபர், எதிரே இருப்பவர்களைக் கிளப்ப இது போன்ற முறைகளை அமெரிக்காவில் கூடப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

**நமக்கு இத்தகைய சந்தர்ப்பங்களில் நன்கு உதவும்.**

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை நிழலின் கீழ் வல்லை திட்டம் நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)
பசுமை நிழலின் கீழ் வல்லை நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.
முதல் நாள் நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் வல்லை வெளியில் பயன்தரும் மரக்கன்றுகளும் நிழல் தரும் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.
கரவெட்டி பிரதேச செயலர் தலைமையில் பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-60)




# ஜனாதிபதி தலைமையில் தேசிய மீலாத் விழா எதிர்வரும் டிசெம்பர் 18 ஆம் திகதி யாழில்

(யாழ்ப்பாணம்)
தேசிய மீலாத் விழா இம்முறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ளது. இதில் யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என தபால்துறை மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் கலீம் தெரிவித்துள்ளார்.



யாழ்.மாவட்டத்தில் இம்முறை கொண்டாடப்படவுள்ள 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழா தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று முஸ்லிம் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்க ண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி கொண்டாடப்பட வேண்டிய இந்த நிகழ்வு சில தடங்கல்கள் காரணமாக டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் உள்ள வேறு பிரதேசங்களில் இந் நிகழ்வு கொண்டாடப்பட்ட போதும், இம்முறை விசேட விதமாக யாழில் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு முஸ்லிம் மக்கள் கடந்த காலங்களில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக வாழ்வாதாரம், கல்வி போன்ற விடயங்களில் பின்தங்கி உள்ளார்கள். இந்த மக்களின் பிரச்சினையை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்வதற்காகவும், இது ஒரு தேசிய நிகழ்வாதலால் இனங்களுக்கிடையே ஒற்றுமையை பலப்படுத்துவதற்கும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் இம்முறை யாழ்ப்பாணத்தில் இந்த மீலாத் விழா நடத்தவுள்ளோம்.

இந்த விசேட கலந்துரையாடலில் சமய ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்த நிகழ்வுகள் தொடர்பாகவும், வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் முஸ்லிம்களுக்கான போக்குவரத்து, சுகாதார ஏற்பாடுகள் குறித்து இங்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.

யாழ்.மற்றும் கிளிநொச்சி முஸ்லிம் பிரதிநிதிகள், வடமாகாண பள்ளிவாசல் நிர்வாகிகள், சங்கத்தினர், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பொலிஸார், இராணுவத்தினர், துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (இ-9)

# லஹிரு, சுகதானந்த தேரர் தொடர்ந்து விளக்கமறியலில்

(கொழும்பு)
அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர மற்றும் டெம்பிடியே சுகதானந்த தேரர் ஆகியோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கை காரணமாக இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பின்னர், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர்கள் நேற்று மீண்டும் கொழும்பு - கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது இவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மாணவர்களின் விடுதலை கோரி கொழும்பில் மௌனப் போராட்டம்

(கொழும்பு)
கோட்டை நீதவான் நீதிமன்றின் முன்பாக நேற்று பிற்பகல் சிலர் மௌன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர, பல்கலைக்கழகங்களின் பிக்கு முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தம்பிட்டிய சுகதானந்த மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையைக் கோரியே இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரிலேயே மேற்படி மாணவத் தலைவர்களும் மாணவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடற்படை சிப்பாய் சடலமாக மீட்பு!

(கொழும்பு)
திருகோணமலை, கெக்கிராவ, கல்நாவப் பகுதியைச் சேர்ந்த பீ.எம்.புஷ்பகுமார (வயது-28) எனும் கடற்படைச் சிப்பாய் கிளப்பன் பேர்க் கடற்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளாரென சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

# விண்ணப்ப காலம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கைநெறி(ESBM) 2017/2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பத்திற்கான கால எல்லை 29/10/2017 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கவிரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# நிர்வாகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள சிவகுரு நாதபீட வேதாந்த மண்டபத்தில் சங்கத் தலைவர் ந.சிவகரன் தலைமையில் இடம்பெறும். (இ-10)

# நெற்செய்கையாளர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)
மந்துவில் வடக்கு மற்றும் கிழக்கு கமக்கார அமைப்பினரால் காலபோக நெற்செய்கையாளர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மந்துவில் வடக்கு மற்றும் கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறும். (இ-10-101)

# கட்டாரிலுள்ள ஸ்ரீலங்கன் பாடசாலைக்கு ஜனாதிபதி விஜயம்







(கொழும்பு)
இரண்டுநாள் அரசமுறைப் பயணம் மேற்கொண்டு கட்டார் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் டோஹா நகரில் உள்ள ஸ்டபட் பாடசாலைக்கு விஜயம் செய்தார். 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்டபட் ஸ்ரீலங்கன் பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல் உயர் வகுப்பு வரை சுமார் 1300 மாணவ மாணவியர்கள் கல்வி கற்கின்றனர்.

அறிவும் பண்பாடும் கொண்ட மாணவர் தலைமுறையை உருவாக்குவதில் ஸ்டபட் ஸ்ரீலங்கன் பாடசாலை மேற்கொண்டு வரும் பணிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, உலகில் எங்கிருந்தாலும் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெற்றுக் கொடுப்பது அனைவருடைய பொறுப்பாகும் என்றும் குறிப்பிட்டார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா யாழ்.உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டார். (படங்கள்:-சக்தி)

# சுவசக்தி அபிமானிகள் தேசிய விருது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு




(யாழ்ப்பாணம்)

சுவசக்தி அபிமானிகள்-2017 தேசிய விருதை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் பெற்றுக்கொண்டது. கடந்த 2ஆம் திகதி கொழும்பு தாமரை தடாகத்தில் நடைபெற்ற சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் மாற்றுத்திறனாளிகளுக்கான சுவசக்தி அபிமானிகள் தேசிய விருது வழங்கும் நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் சிறந்து மாற்றுத் திறனாளிகள் கல்வி வழங்கும் நிறுவனமாக தன்னுடைய ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஆனைக்கோட்டை அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை விசேட பிரிவு வெற்றியடைந்தது. இதற்கான விருதை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் பணிப்பாளரிடம் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டியின் போது சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்,சிறந்த மாற்றுத்திறனாளிகள் சமாசம், சிறந்த சுய தொழில் முயற்சியாளர் சிங்கராசா காந்தரூபன் குடும்பத்துடன் மீள் இணைக்கப்பட்ட மாற்றுத்திறனாளி ஜனோசா, சிறந்த கல்வி வழங்கும் நிறுவனம் ஆனைக்கோட்டை அ.த.க பாடசாலை, சிறந்த தொழில் வழிகாட்டி மாற்றுத்திறனாளிகள் நிலையமாக சிறப்பு குழந்தை இல்லம் போன்ற 5 விடயங்களில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது. தேசிய மட்டபோட்டி நடைபெற்ற போது 312 பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து போட்டியிட்டனர். ஆயினும் 27 விருதுகளே வழங்கப்பட்டன. இதில் யாழ். மாவட்ட ரீதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மட்டுமே சுவசக்தி அபிமானிகள் விருதை வெற்றி கொண்டது. வட மாகாண ரீதியாக நோக்கும் போது சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் கரைச்சி பிரதேச செயலகம் மட்டுமே மேற்படி போட்டியில் தமிழ் ரீதியில் வெற்றியடைந்தன.

இந் நிகழ்வில் வெற்றிக் கேடயமும்7000 ரூபா பணம், சான்றிதழ் என்பன கையளிக்கப்பட்டன. (இ-7)

# மணலகழ்வை நிறுத்தக்கோரி குடத்தனையில் ஆர்ப்பாட்டம்

(கரணவாய்)

குடத்தனை கிழக்குப் பகுதியில் தொடரும் மணல் அகழ்வை எதிர்த்து மணல் ஏற்ற வந்த உழவியந்திரமொன்றை முற்றுகையிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை குடத்தனை பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.



குறித்த பிரதேசத்தில் தொடர்ந்து மணல் அகழ்வில் ஈடுபடுவதால் தமது கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்துவிடும் அபாயம் இருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடந்த இடத்திற்கு வந்த மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

குடத்தனைப் பகுதியில் தொடரும் மணல் அகழ்வை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர். (இ-10-60)

# சுதந்திரக்கட்சியை அழிக்கும் மகிந்த!

## அமைச்சர் துமிந்த விசனம்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ சிறந்த தலைவர் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும் அவர் செய்யும் தவறுகளை ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்ற தேவை இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை அழிக்கும் நடவடிக்கைகளை தடுக்க வேண்டியது எமது கடமை என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். மகிந்தவை நிராகரித்து அரசியலில் பயணிக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் அற்ற நாடு விழிப்புணர்வு வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் போதைப்பொருள் அற்ற நாடு என்ற தொனிப்பொருளில் அமைந்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்றது.

பல்வேறு துறைசார் வல்லுநர்கள் வளவாளர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ள இந் நிகழ்வில் இக்கால தேவைப்பாட்டை உணர்ந்து இளைஞர், யுவதிகளை வேலைத் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

குருநகர் ஜே/68 மற்றும் ஜே/69 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (இ-10-106)



யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகம் தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பயனாளிகளை தெரிவு செய்து நல்லினத் தென்னங்கன்றுகளை வழங்கி வருகின்றது. இதன் அடிப்படையில் பருத்தித்துறை வீதியில் வேம்படிச் சந்திக்கு அருகாமையில் உள்ள சங்க செயலாளருடைய இல்லத்தில் வைத்து 50 பயனாளிகளுக்கு தென்னை பயிர்ச்செய்கை உத்தியோகத்தரின் அறிவுறுத்தலுடன் லயன்ஸ் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு வீடமைப்பு விடயத்தில் அநீதி

## யாழ்.மாவட்ட செயலகம் முன் நேற்று போராட்டம்






(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள் குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு அரசினால் வழங்கப்படும் வீடமைப்பு விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுக் காலை 8 மணி முதல் 10 மணி வரை சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை யாழ்.மாவட்ட செயலக முன்றலில் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த வீட்டுத்திட்டத்தில் தமக்கு பல்வேறு காரணங்களைக் காட்டி இறுக்கமான நிபந்தனைகளை அரச அதிகாரிகள் முன்வைப்பதாக தெரிவித்தே இப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

மீள்குடியேற்ற செயலணியின் மூலம் கடந்த 2016 டிசெம்பர் மாதத்தில் முஸ்லிம் மக்களுக்காக 200 வீடுகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிலையில் இன்றுவரை அதில் ஒரு வீட்டையாவது குறித்த மக்களுக்கு வழங்கவில்லை எனவும் 2017 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருக்கின்ற நிலையில் 20 இற்கும் குறைவானவர்களுக்கே வீடுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

மக்களுக்காக வழங்கப்பட்ட 200 வீடுகளும் முழுமையாக வழங்கப்படல்வேண்டும் எனக் கோரிக்கையை விடுத்து சமாதானமான முறையில் உயர் அதிகாரிகளுடன் பேசினோம் ஆனால் எந்தப் பலனும் இதுவரை கிடைக்கவில்லை. எனவே எமது நிலையை உலகிற்கு எடுத்துச் சொல்வதற்கு இந்த அமைதியான அடையாள சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டோம் என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாகத் தெரிவித்த கருத்துக்களை பதாகைகளில் ஏந்தியவாறு, "இவர்களின் கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள போதும் ஒரு சில தமிழ் அதிகாரிகள் இனத்துவேசம் காட்டி தம்மை பழிவாங்குவதாகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடப்பது ஏன்" என தெரிவித்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (இ-9-106)

# ஆசிரியர் இல்லாத பாடசாலைகளுக்கே ஆசிரியர் வேண்டும்

## கிழக்கு முதல்வர் கோரிக்கை



(கொழும்பு)

"கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கான போட்டிப் பரீட்சை நிறைவு புள்ளிகளும்வெளியாகியுள்ள நிலையில், ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பகுதிப் பாடசாலைகளுக்கே புதிய ஆசிரியர் நியமனத்தில் முன்னுரிமையளிக்கப்பட்டு, நியமனம் வழங்கப்பட வேண்டும்" என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னு லாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

தற்போது கிழக்கின் பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையின் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் இது குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் கூறினார்.

"கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்திக்கும் வகையில் பட்டதாரிகள் நியமனங்களை முன்னெடுப்பதற்கான திட்டங்களை நான் முன்னர்வகுத்திருந்தேன்.

"கிழக்கு மாகாணத்தின் கல்வித்துறையின் பின்னடைவுக்குப் பிரதான காரணங்களில் ஒன்றாக ஆசிரியர் பற்றாக்குறைகாணப்படுவதுடன் அதனை நிவர்த்திக்க உரிய ஆவணங்கள் மற்றும் தரவுகளை நாம் அரசாங்கத்துக்கு வழங்கி எமது மாகாணத்தில் மேலும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தேன்.

"இந்நிலையிலேயே பட்டதாரிகளின் போராட்டமும் இடம்பெற்றது. அவர்களின்போராட்டம் மூலமான அழுத்தமும் எமது தொடர் முயற்சிக்கமைய அரசாங்கமெமக்கு 1700 பட்டதாரிகளை நியமிப்பதற்கான அனுமதியை வழங்கியது.

"இதனடிப்படையில் கடந்த ஜூன் மாதம் 259 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்கி வைத்தோம். ஏனைய 1,441 பேரை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை தற்போது நிறைவு பெற்றுள்ளது.

"இந்நிலையில், ஒருசில கல்வி வலயங்களுக்கு மாத்திரம் ஆசிரியர்கள் பகிர்ந்தளிக்கப்படுவதால் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை வளர்ச்சியடையும் என எண்ணுவது தவறாகும். "அத்துடன், உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட முன்னர் குறித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்களை ஆளுநர் வழங்க வேண்டும் (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1230

Search for people, places and things | Nagendram Home

### சந்தியா




### தேனுஜா




### சத்தியா




### தனு




### பிரக்யா




### ராகுலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய தொல்பொருள் நிலையத்தை ஜனாதிபதி மைத்திரி பார்வையிட்டார்





(கொழும்பு)

இரண்டு நாள் அரச முறைப் பயணம் மேற் கொண்டு கட்டார் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் டோஹாவிலுள்ள இஸ்லா மிய தொல்பொருள் நிலை யத்தைப் பார்வையிட்டனர்.

உலகிலுள்ள மிகப் பெரும் இஸ்லாமிய கலைப் படைப்பு களை கொண்ட தொல்பொருள் நிலையங்களில் டோஹா இஸ்லாமிய தொல்பொருள் நிலையமும் ஒன்றாகும்.

இந்த நிலையத்திலுள்ள தொல் பொருட்களைப் பார்வை யிடுவதற்காக வருடாந்தம் ஆயிரக்கணக்கான சுற்று லாப்பய ணிகள் வருகை தரு கின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ)

# விமர்சனங்களுக்கு அஞ்சினால் முடியாது

## அரசியலமைப்பு குறித்து சுசில்



(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு குறித்து விமர்சனங்களை முன் வைக்க சகல தரப்பினருக்கும் இடமுள்ளது.

சகல தரப்பின் கருத்துக் களை ஆராய்ந்தே புதிய அரசியல் அமைப்பினை உருவாக்க முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

விமர்சனங்களை கண்டு அஞ்சினால் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெ ற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# வெலிக்கடை சிறைச்சாலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு



(கொழும்பு)

வெலிக்கடை சிறைச் சாலையில் இடம்பெற்ற கலகத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒன்றுக்கு 20 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டுள்ள அதேவேளை காயமடைந்த ஒருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்கப் பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேற்று முன்தினம் இந்த நட்ட ஈட்டை வழங்கியுள்ளார்.

நட்டஈடு வழங்குவதற்கான பரிந்துரை செய்யப்பட்டவர்களில் சிலர் இதுவரையில் ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை எனவும், அவ்வாறு சமர்ப் பித்ததன் பின்னர் அவர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய அரசியல் அமைப்பிற்கு மூன்றில் இரண்டு சாத்தியம்

## தம்பிர அமல் தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் பிரதான இரு கட்சிகளிடையே கருத்து முரண்பாடுகள் காணப் பட்டாலும், அக்கட்சிகளின் தலைவர்களான பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரிடத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர்பில் சரியான தீர்மானம் காணப் படுவதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்பர அமில தேரர் தெரிவித்தார்.



இதுவரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் அனைத்திற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைக்கப் பெற்றுள்ளது. கட்சிகளிடையே என்ன கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், தீர்மானம் எடுக்கும் விடயத்தில் அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமுகத்துடனேயே செயற்பட்டு வருவதாகவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

தேசிய தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற புதிய அரசியல் யாப்பு தொடர்பிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைக் கூறினார்.

அரசாங்கத்துக்குள் உள்ள பிரதான இரு கட்சிகளிடையே ஜனாதிபதி முறைமை குறித்தே ஒருமித்த தீர்மானம் காணப் படாதுள்ளதாகவும், இந்நிலையில், புதிய அரசியலமைப்பு கொண்டுவருவது சாத்தியமாகுமா? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தேரர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# மலையகத்தில் ஒன்பது வயது மாணவியின் இசைப்பயணம்



(மாத்தளை)

மாத்தளை புனித தோமையர் பெண்கள் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்று வரும் 9 வயதான சிறுமி செல்வி மிதுனா ஸ்ரீயின் இறுவெட்டு வெளியீடும், அரங்கேற்றமும் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மிகவும் சிறிய வயதில் பக்திப் பாடல்களை பாடி இறுவெட்டு வெளியீடு செய்யும் அளவிற்கு மலையகத்தில் ஒரு கலைஞராக உருவாகி உள்ளமை மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

சிறிய வயதில் இனிமையான குரலில் பக்தி பாடல்களை பாடியுள்ளார்.

இதுவே மலையகத்தில் சிறிய வயதில் மாணவி ஒருவர் பக்தி பாடல்களை பாடி இறுவெட்டு வெளியிட்டதும் முதற் தடவையாகும். (இ-7)

# பாதாள உலகக்குழு தலைவர்களை காப்பாற்ற முயற்சிக்கும் அமைச்சர்கள்

(கொழும்பு)

கொலை, கொள்ளை மற்றும் கப்பம் பெற்றமை உட்பட மிகப்பெரிய பல குற்றங்களுடன் தொடர்புடைய இரண்டு பாதாள உலகக்குழு தலைவர்களை காப்பாற்ற அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு முக்கிய அமைச்சர்கள் அதிரடிப்படை மற்றும் பொலிஸாருக்கு கடும் அழுத்தங்களை கொடுத்து வருவதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேலியகொடை பிரதேசத்தை தளமாக கொண்டு இயங்கும் இந்த பாதாள உலகக் குழு தலைவர்கள் அமைச்சர்களின் அரசியல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த பாதாள உலகக் குழு தலைவர்களை கைது செய்ய பொலிஸாருக்கும் அதிரடிப்படையினரும் நடவடிக்கைகளை ஆரம்பித்த பின்னர் கடும் கோபத்திற்கு உள்ளாகியிருக்கும் அமைச்சர்கள் அவர்களை காப்பாற்ற கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சர்கள் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் சிலருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளது டன் கைது செய்யப்பட உள்ள பாதாள உலகக்குழு தலைவர்கள் அப்பாவியான இளைஞர்கள் எனக் கூறியுள்ளனர்.

[illegible] டுள்ளதாகவும் தேவையேற்பட்டால் பொலிஸாரிடம் நேர் நிலைப்படுத்துவதாகவும் அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

கைதுசெய்யப்பட உள்ள இந்த பாதாள உலகக்குழு தலைவர்கள் கடந்த காலத்தில் மேல் மாகாணத்தில் நடந்த கொலை, கொள்ளை மற்றும் கப்பம் பெற்றமை உட்பட பல குற்றங்களுக்காக பொலிஸாரினால் தேடப்பட்டு [illegible] பொலிஸ் [illegible] தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹற்றன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஹற்றனில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் என போடப்பட்டிருந்த பெயர்ப்பலகை இரு தினங்களுக்கு முன் அகற்றப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பொது மக்கள் பலர் ஹற்றன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மலையகத்தில் பல பாகங்களிலிருந்தும் பொது மக்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுடைய பிள்ளைகளின் தொழிற்பயிற்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட





ஜேர்மன் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மூலமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் என அடிக்கல் நாட்டப்பட்டு கட்டி அமைக்கப்பட்ட இந்த தொழிற்பயிற்சி நிலையம் அமரர். சௌமிய மூர்த்தி தொண்டமானின் மறைவுக்கு பின் ஆறுமுகன் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

அன்று முதல் இன்றைய நல்லாட்சி அரசாங்க காலம் வரை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையமாகவே இயங்கி வரும் இந்த நிலையம் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஆர்ப்பாட்டதை மேற்கொண்டனர்.

மீண்டும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையமாகவே இந்த நிலையம் இயங்க வேண்டும் என்ற உறுதியான கோரிக்கையை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்ட ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையமாக 1998ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த பயிற்சி நிலையத்தை 2000 ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கத்தின் அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் ஊடாக திறந்து வைக்கப்பட்டது.

மறைந்ததலைவர்சௌமிய மூர்த்தி தொண்டமானால்

# சித்திரப்போட்டியில் மாணவி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் யாழ். புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய மாணவி விஜயரூபன் வேணுஜா ஆரம்பப் பிரிவில் முதலிடம் பெற்றுள்ளார். (இ-10)



# மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் லொறிகளுடன் நேற்றுக் கைது



(மூதூர்)

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்கை காட்டுப் பகுதியில் மணல்அகழ்வில்ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகள் ஐவரையும் நேற்றுக் கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அரசு மௌனத்தை கலைக்க வேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பாக மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தனது உண்மையான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய் தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

புதிய யாப்பு தொடர்பில் அரசாங்கம் தனது முடிவுகளை மூடிமறைக்கும் போது சமூகத்தில் குழப்பங்களும், பல்வேறு சந்தேகங்களும் எழுவதை தவிர்த்துவிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசின் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு மகாநாயக்க தேரர்கள், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உட்பட பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

எனினும் புதிய அரசியலமைப்பு இதுவரை இறுதிப்படுத்தப்படவில்லை என்று ஜனாதிபதியும் பிரதமரும் பல தடவைகள் பகிரங்கமாகவே கூறிவருகின்றனர்.

இந்த நிலையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க புதிய அரசியலமைப்பு பற்றிய தனது கருத்தை வெளியிட்டார்.

"புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக அரசாங்கம் தனது உறுதியான நிலைப்பாட்டை நிச்சயம் அறிவிக்க வேண்டும். அரசாங்கம் கூறுகின்ற வகையில் இறுதி வரைபு இன்னும் உருவாக்கப்படவில்லை. ஜனாதிபதியும், பிரதமரும் பல சந்தர்ப்பங்களில் இதனை கூறுவதை நான் கண்டிருக்கிறேன். எனினும் சமூகத்தில் இதுபற்றி அதிகளவில் பேசப்படுகின்றன. மக்களது கருத்துக் கணிப்பு நடத்திய சட்டத்தரணி லால் விஜேநாயக்க தலைமையிலான குழு அறிக்கை ஒன்றை பிரதமரிடம் கையளித்ததோடு அந்த அறிக்கை அரசியலமைப்புச் சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இடைக்கால அறிக்கையில் அனைத்துக் கட்சிகளினதும் யோசனைகள் காணப்பட்டுள்ளன. எது எவ்வாறாயினும் அவற்றை சமூகத்தில் தெரியப்படுத்த வேண்டும். அப்படி செய்யாமல் அரசியல் தீர்வுகளை மூடிமறைத்து நடவடிக்கை எடுத்தால் அது ஆபத்தில் முடியும். 1978ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் உருவாக்கப்பட்ட இந்த அரசியலமைப்பை தவிர்த்து புதிய ஒன்றை உருவாக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா 2000ஆம் ஆண்டில் முயற்சித்தார். ஆனால் அவரது பதவிக்காலத்தை நீடிப்பதற்கு அப்போது எதிர்ப்பு வெளி வந்ததால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பல தடவை புதிய அரசமைப்பை உருவாக்க முயன்ற போதிலும் இறுதியில் 18 ஆவது திருத்தம் உட்பட சில திருத்தங்களை மட்டும் செய்தார். பாரிய சமூக பிரச்சினைகளை ஏற்படுத்தும் விபரீதம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் உள்ளதால் அப்படியாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எனினும் அமுலில் உள்ள அரசியலமைப்பு மிகவும் பலம்வாய்ந்தது என்ற போதிலும் வடக்கிற்கான அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவற்றை திருத்திக் கொள்வதே சாலவும் பொருத்தமென்று நினைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விஜயனுடன் ரஞ்சனை ஒப்பிட்ட பொன்சேகாவுக்கு மேர்வின் பதில்



(கொழும்பு)

விஜயன் குமாரதுங்கவுடன் ரஞ்சன் ராமநாயக்கவை ஒப்பிட்டு, ஹாலோ பொன்சேகா போன்ற மதிப்புக்குரிய பிரஜை ஒருவர் பேசியமையை ஒருபோதும் ஏற்க முடியாது என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜரானார்.

இதன்போது, ஹாலோ பொன்சேகா ஊடகங்களிடம் தெரிவித்த கருத்து தொடர்பில், மேர்வின் சில்வா மேற்கண்ட விடயத்தைக் கூறியுள்ளார்.

விஜயன் மருமகனைப் போல ரஞ்சன் மருமகனும் தைரியமான, துணிச்சலான, மனிதாபிமானம் மிக்க ஒருவர் என, பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக, விஜயன் குமாரதுங்கவைப் போல் தானும் மனித நேயம் மிக்க ஒருவர் என ரஞ்சன் ராமநாயக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்த சந்தர்ப்பத்தில், அதற்கு மேர்வின் சில்வா மறுப்பு தெரிவித்து கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், ஹாலோ பொன்சேகா தெரிவித்த விடயத்தினையும் மறுத்து மேர்வின் சில்வா கருத்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீதிமன்றம் புனிதமானது என இதன் போது சுட்டிக்காட்டிய மேர்வின் சில்வா, நீதிமன்றம், நீதவான்கள் மற்றும் சட்டத்தரணிகளை அவமதிக்க யாருக்கும் அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இரட்டைப் படுகொலை சந்தேக நபர்களின் விளக்கமறியல் நவம்பர் 8 வரை நீடிப்பு

(ஏறாவூர்)

ஏறாவூர் நகரில் கடந்த ஆண்டு இடம்பெற்ற தாய் மற்றும் மகள் இரட்டைப் படுகொலைச் சந்தேக நபர்களில் இருவர் மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகளால் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆஜர் செய்யப்பட்ட அதேவேளை பிணையில் விடுவிக்கப்பட்ட ஏனைய நால்வரும் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகினர்.

இவ்வேளையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர்களில் இருவரையும் நவம்பர் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி வழக்கை அன்றைய தினத்திற்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதி முதலாவது குறுக்கு ஒழுங்கையிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயான நூர்முஹம்மது உஸைரா (வயது- 56) அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் (வயது-32) ஆகியோர் கடந்த வருடம் (2016) செப்டெம்பர் 11ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு!

ஓர் ஊரில் ஒரு சிவன் கோவில் இருந்தது. கணபதிசர்மா என்று ஒரு அந்தணர் அந்தக் கோவிலில் பூஜை செய்து வந்தார். அவருக்குப் பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியம் கிட்டவில்லை. தினமும் இறைவனை மனமுருகப் பிரார்த்தித்து வந்தார். அவர் மனைவியும் விரதங்கள், தானங்கள் என்று செய்து வந்தாள். ஆனாலும் இவர்களுக்குப் பிள்ளையில்லை.

வீட்டில் இருக்கையில் ஒரு மாலைவேளையில் கணபதியின் மனைவி முன் ஒரு சிறிய குட்டி கீரிப்பிள்ளை வீட்டுக்குப் போகத் தெரியாமல் நின்றது. அதைப் பார்த்த அந்தணர் மனைவி அதற்குப் பாலும் சோறும் வைத்தாள். பசியுடன் இருந்த அந்தக் கீரி பாலைப் பருகிப் பசியாறியதும் அங்கேயே படுத்துக் கொண்டது.

சில நாட்களில் அந்தக் கீரிப் பிள்ளை அந்த வீட்டின் செல்லப் பிள்ளையானது. கணபதிசர்மாவும் அவர் மனைவியும் அந்தக் கீரிப் பிள்ளையைத் தாங்கள் சொந்தப் பிள்ளையாகவே நினைத்து வளர்த்து வந்தனர்.

சுமார் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. இப்போது கணபதிசர்மாவுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்திருந்தது.

அந்தக் குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தனர். கீரிப்பிள்ளையும் அக்குழந்தையுடன் சேர்ந்து வளர்ந்து வந்தது.

ஒருநாள் கணபதிசர்மா கோவிலில் பூஜைக்குப் போயிருந்தார். வீட்டில் சமைப்பதற்குத் தண்ணீர் இல்லை என்று குடத்துடன் ஆற்றுக்குக் கிளம்பினாள். அவர் மனைவி ஆற்றுக்குப் புறப்படு முன் கீரியிடம் "குழந்தை தொட்டிலில் தூங்குகிறான். பத்திரமாகப் பார்த்துக் கொள். நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன்." என்று சொல்லி விட்டு வேகமாக நடந்தாள்.

அவள் சென்ற சற்று நேரத்தில் கீரிப் பிள்ளையும் தொட்டிலின் கீழேயே அமர்ந்து கொண்டது. கணபதிசர்மாவும் பூஜையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். அதே நேரம் குடத்தில் நீர் கொண்டு அவர் மனைவியும் வீட்டின் முன் நின்றாள். இருவரும் வீட்டின் முன் நின்ற கீரிப்பிள்ளையைப் பார்த்துத் திடுக்கிட்டனர்.



அவர்கள் செல்லமாக வளர்த்த கீரிப் பிள்ளை வாயில் இரத்தம் ஒழுக நின்றிருந்தது. மிகவும் பரபரப்பாக இங்குமங்கும் அலைந்து கொண்டு இருந்தது. இவர்களைப் பார்த்ததும் அதன் பரபரப்பு அதிகமானது. வாயில் இரத்தம் ஒழுக நின்ற கீரியைப் பார்த்து கணபதியின் மனைவி தன் குழந்தையைக் கடித்துக் கொன்று விட்டது என்று முடிவு செய்தாள்.

"ஐயோ என் குழந்தையைக் கொன்று விட்டதே" என்று அலறினாள்...

இந்த வார்த்தைகளைக் கேட்ட கணபதிசர்மா "என் குழந்தையைக் கொன்று விட்டாயா. நீயும் ஒழிந்து போ" என்றபடியே அருகே நின்றிருந்த மனைவியின் இடுப்பிலிருந்த குடத்தைப் பிடுங்கி கீரியின் மேல் போட்டார். விசுக்கென்ற சத்தத்துடன் அது நசுங்கித் தன் உயிரை விட்டது.

கணவன்-மனைவி இருவரும் வீட்டுக்குள் ஓடிப்போய் பார்த்தனர். குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. அப்பாடா என்று இருவரும் மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டனர். உடனே கீரியின் நினைவு வந்தது. அதன் வாயில் எப்படி இரத்தம் வந்தது என்று சுற்றிப் பார்த்தபோது தொட்டிலின் மறுபக்கம் ஒரு பெரிய நாகபாம்பு இறந்து கிடந்தது. அது இரண்டு மூன்று துண்டாகக் கிடந்தது.

இப்போதுதான் கணபதிசர்மாவிற்குப் புரிந்தது.

"ஐயோ" என்ன காரியம் செய்து விட்டேன். என் குழந்தையைக் கடிக்கவந்த நாகத்தைக் கொன்று விட்டு அதைச் சொல்லத்தானே வாயிலில் வந்து நின்றது அந்தக் கீரிப்பிள்ளை.

ஆத்திரப்பட்டு என் செல்லப் பிள்ளையை நானே கொன்று விட்டேனே என்று புலம்பி அழுதான்.

"ஐயோ நான் தான் அவசரப் பட்டு குழந்தையைக் கொன்று விட்டாயே என்று அலறினேன். அதனால்தானே நீங்கள் கீரியைக் கொன்றீர்கள். நான் தான் தவறு செய்தவள்" என்று அழுதாள் அவர் மனைவி.

ஆண்டாண்டு காலம் அழுதாலும் மாண்டார் மீண்டு வருவாரோ. அவர்கள் அவசரப்பட்டதற்கு உரிய தண்டனை அடைந்துவிட்டனர்.

"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு" என்ற பழமொழியை மெய்ப்பிப்பது போல் இவர்களின் இந்த செயல் அமைந்து விட்டது.

எனவே இந்தக் கதை மூலம் எப்போதும் அவசரமோ ஆத்திரமோ படாமல் நிதானமாக ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்னும் அறிவுரையை நாமும் கற்றுக் கொண்டோம் அல்லவா.




- 939- முதலாம் எட்மண்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1275-ஆம்ஸ்டர்டம் நகரம் அமைக்கப்பட்டது.
- 1682-பென்சில்வேனியாவின் பிலடெல்பியா நகரம் அமைக்கப்பட்டது.
- 1795-ஸ்பானியக் குடியேற்றநாடுகளுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையேயான எல்லைகளை வரையறுக்கும் உடன்படிக்கை ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டது.
- 1806-பிரெஞ்சுப் படையினர் பேர்ளின் நகரினுள் நுழைந்தனர்.
- 1807- பிரெஞ்சு-ஸ்பானியப் படைகள் போர்த்துக்கலைக் கைப்பற்றின.
- 1867-கரிபால்டியின் படைகள் ரோம் நகருள் புகுந்தன.
- 1870- 140,000 பிரெஞ்சுப் படை வீரர்கள் மெட்ஸ் நகரில் இடம்பெற்ற போரில் பிரஷ்யாவிடம் சரணடைந்தனர்.
- 1891- ஜப்பானில் 8.0 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 7000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1904-முதலாவது சுரங்க நியூயோர்க் நகர சப்வே பாதை திறக்கப்பட்டது. இதுவே ஐக்கிய அமெரிக்காவில் மிகப் பெரியதும், உலகில் மிகப் பெரிய சுரங்கப் பாதைகளில் ஒன்றும் ஆகும்.
- 1961- நாசா தனது முதலாவது சட்டர்ன் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது.
- 1961-மூரித்தானியா, மங்கோலியா ஆகியன ஐக்கிய நாடுகள் அவையில் சேர்ந்தன.
- 1962-கியூபா ஏவுகணை நெருக்கடி: ஐக்கிய அமெரிக்காவின் U-2 விமானம் ஒன்று கியூபாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1982-யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.
- 1990-வட இலங்கை முஸ்லிம்களின் கட்டாய வெளியேற்றம்: யாழ்ப்பாண மாவட்டத்தைத் தாயகமாக கொண்ட முஸ்லிம்கள் அனைவரும் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர்.
- 2005-பாரிசில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு கலவரம் ஏற்பட்டது.
- 2007-கொங்கோவில் இடம்பெற்ற பெரு வெள்ளம் காரணமாக 30 பேர் கொல்லப்பட்டு 100 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

- 1858 - தியொடோர் ரோசவெல்ட், அமெரிக்காவின் 26 ஆவது குடியரசுத் தலைவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ. 1919)
- 1920-கே. ஆர். நாராயணன், இந்தியாவின் 10ஆவது குடியரசுத் தலைவர் (இ. 2005)
- 1941- சிவகுமார், தமிழக நடிகர்
- 1977- குமார் சங்கக்கார, இலங்கைத் துடுப்பாளர்
- 1984-இர்பான் பதான், இந்தியத் துடுப்பாளர்
- 1985- சுனிதா ராவ், இந்திய-அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை
- 1986-டேவிட் வார்னர், அவுஸ்திரேலியத்துடுப்பாளர்

### இறப்புகள்

- 1449-உலுக்பெக், பாரசீக வானியலாளர், சுல்தான் (பி. 1394)
- 1605-அக்பர், முகலாயப் பேரரசர் (பி. 1542)
- 2001-மரகதம் சந்திரசேகர், இந்திய அரசியல்வாதி (பி. 1917)
- 2011- எல். ஐ. சி. நரசிம்மன், தமிழகத் திரைப்பட நடிகர்

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (செயின்ட் வின்சென்டு மற்றும் கிரெ[illegible]ன்கள் 1979)
- விடுதலை நாள் [illegible] 1991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 100 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 95 | 120 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 330 | 500 | 450 | 500 |
| தக்காளி | 200 | 100 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 40 | 60 |
| கோவா | 140 | 90 | 160 | 130 | 100 |
| கரட் | 120 | 280 | 240 | 70 | 200 |
| பூசணி | 80 | 30 | 60 | 70 | 60 |
| புடோல் | 120 | 70 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 100 | 75 | 140 | 90 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 220 | 300 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 75 | 200 | 140 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 70 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 250 | 150 | 120 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 170 | 240 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 170 | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 300 | 240 | 40 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 600 | 150 | 200 | 500 | 500 |
| போஞ்சி | 250 | 100 | 200 | 180 | 180 |
| கத்தரித்தம்புள்ள | 140 | 100 | 100 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 250 | 220 | 300 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 70 | 60-80 | 80 | 90 |
| இராசவள்ளி | — | 380 | — | 400 | — |
| வெங்காயப்பூ | 300 | 200 | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 40 | 120 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 15 | 20 | 35 | 20 |
| ஈரப்பலா | — | 30 | 80 | — | — |

பேச்சுப் பல்லக்கு
தம்பி கால்நடை.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழனுக்கும் படைத் தளபதி பதவி கொடுத்தோமல்லோ!

கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ட்ராவிஸ் சின்னையாவின் பதவிக் காலம் முடிந்து விட்டது.

மொத்தம் ஆறு மாதங்கள் மட்டுமே ட்ராவிஸ் சின்னையா கடற்படைத் தளபதியாக இருந்தார். அவ்வளவுதான் இப்போது புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இனவாதம் இல்லை. தமிழர்கள் எச்சந்தர்ப்பத்திலும் புறக்கணிக்கப்படவில்லை. அவர்களுக்கு உரிய இடங்கள் கொடுக்கப்படுகின்றன.

பிரதம நீதியரசராக, சட்டமா அதிபராக, கடற்படைத் தளபதியாக தமிழர்கள் இருந்துள்ளனர் என்றால் இலங்கையில் இனவாதம் இருக்கிறது என்று எப்படிக் கூறமுடியும்? என சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்கான ஏற்பாடுகளை சிங்கள ஆட்சியாளர்கள் கச்சிதமாகச் செய்து முடிக்கின்றனர்.

அவர்கள் கூறுவதைக் கேட்கும் சர்வதேசப் பிரதிநிதிகள் நல்லம் நல்லம் என்று சொல்லி விட்டு போய்விடுவர்.

ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் காலம் தேவை. தமிழ் அரசியல்கைதிகள் தொடர்பில் உடனடியாக எதுவும் செய்ய முடியாது என்று கூறுவதைத் தாரக மந்திரமாகக் கொண்ட இலங்கை ஆட்சியாளர்களைப் பார்த்து,

ஐயா! உங்களுக்கெல்லாம் ஐந்து வருடங்கள் ஆட்சிப் பீடம் தந்தும் எதுவும் செய்வதாக இல்லை. கேட்டால் இன்னும் காலம் தேவை என்கிறீர்கள்.

அப்படியானால் வெறும் ஒரு மாதம், மூன்று மாதம், ஆறு மாதத்துக்கென உயர்பதவிகளில் தமிழர்களை நியமித்துவிட்டு தமிழர்களுக்கும் உயர்பதவி கொடுக்கிறோம் என்றால் அதன் அர்த்தம் என்ன?

கடற்படைத் தளபதியாக ட்ராவிஸ் சின்னையாவை நியமித்த அரசாங்கம் ஆறு மாதத்துடன் அவரை அந்தப் பதவியில் இருந்து ஓய்வுக்குட்படுத்தியது.

கடற்படைத் தளபதியாக ஆறு மாதம் பதவி வகிக்கக்கூடிய ஒருவர் கடற்படைக் கட்டமைப்பில் எத்தகைய மாற்றங்களைச் செய்ய முடியும். ஏதேனும் மாற்றம் செய்தால் அது நிலைத்து நிற்குமா? என்று கேட்பதற்கு ஆளில்லாக் குறைதான் நமக்கு இப்போது இருக்கும் பெரும் குறை.

ஆக, எந்த மாற்றத்தையும் செய்ய முடியாத மிகக் குறுகிய காலத்துக்கு பதவியைக் கொடுத்து விட்டு அதைக்காட்டி இனவாதம் இல்லை என்று நிரூபிப்பதற்கு முற்படும் பேரினவாத சிந்தனைக்கு சாட்டையடி கொடுக்க யார் வருவாரோ தெரியாது.

அதேநேரம் உயர்பதவிகளில் தமிழர்களை நியமிப்பதற்கு முன்பாக, சம்பந்தப்பட்டவர் ஆட்சியாளர்களுக்கு காட்டிய விசுவாசம் நீண்ட பட்டியலாகவும் இருக்க வேண்டும். இல்லை என்றால் அதுவும் கிடையாது என்பதே உண்மை.

எனினும் உண்மையைப் போட்டுடைத்து இதுதான் நடக்கிறது என்று சொல்வதற்கு ஆன அரசியல் தலைமை எங்களிடம் இல்லை.

அதையும் மீறி உள்ளதை சொல்ல நினைப்பவர்களுக்கு தமிழ் அரசியல் தலைமை கொடுக்கும் பரிசு வேறாக உள்ளதெனும் போது,

தமிழ் மக்களின் நிலைமை போகப்போக மோசமாகிக் கொண்டு இருக்கிறது என்று சொல்வதைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

## இலங்கையில் அறிமுகமாகும் புதிய வாகனம்

(கொழும்பு)

இலங்கையில் நடைமுறையிலுள்ள ஆட்டோக்களுக்கு மாற்றீடாக வேறு வாகனம் ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்மூலம் இந்தியா வில் உற்பத்தி செய்யப்படும் ஆட்டோக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான புதிய நடைமுறையை இலங்கை முன்னெடுத்தால், இந்தியாவிற்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்தினை அடிப்படையாக கொண்டு இந்திய ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

ஆட்டோக்களுக்குப் பதிலாக மாற்று நடவடிக்கையாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ள பஜாஜ் Qute என்ற வாகனம் இலங்கைக்கு பொருத்தமானதாக இருக்கும் என குறிப்பிடப்படுகிறது. இந்த வாகனம்மோட்டர் வாகனமாக காணப்படாதெனவும், ஆட்டோக்களுக்கு மாற்றாக இறக்குமதி செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. அதன் என்ஜின் திறன் 216.6 CC ஆக உள்ளதெனவும், Qute வாகனத்தின் நீளம் 2752 மில்லி மீற்றராகவும், அகலம் 1312 மில்லி மீற்றராகவும் காணப்படும் என குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

## கரைவலைமூலம் மீன்பிடியை நிறுத்த வடக்கு மாகாண சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் கரையோரங்களில் நடைபெற்று வரும் இயந்திரத்தின் மூலம் கரை வலை இழுக்கும் சட்டவிரோத மீன்பிடி தொழில் முறையை தடுத்து நிறுத்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சரை வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

மேலும் இந்த தொழில் முறையில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் மூலம் தண்டிப்பதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும் எனவும் வடக்கு மாகாண சபை கோரியுள்ளது. வடக்கு மாகாண சபையின் 108-வது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் சுகிர்தன் ஆகியோர் மேற்படி பிரேரணையை முன்மொழிந்திருந்தனர். அதில் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் தொடக்கம் கொக்கிளாய் நாயாறுவரை பாரம்பரிய மீன்பிடிகளை மீறி உளவு இயந்திரத்தின் மூலம் கரை வலை இழுக்கப்படுகின்றது. இதனால் சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவது மாத்திரமல்ல கரையோரங்களை பாதுகாக்கும் இயற்கை தாவரங்கள் அழிந்து போகின்றன. வீதிகள் பாதிக்கப்படுகின்றது. மண்ணரிப்பும் ஏற்படுகின்றது.

கடலிலும் அதிக தூரம் வலை வளைப்பதால் கடலின் அடியில் இருக்கும் கடல் தாவரங்கள் அழிக்கப்படுவதுடன் மீன் உற்பத்திகளும் தடைப்படுகின்றது. இது சட்டவிரோத தொழிலாகும். எனவே இந்த சட்டவிரோத தொழிலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் இந்த குற்றத்தை செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என தமது பிரேரணையை முன்மொழிந்தனர். பிரேரணையின் விவாதத்தின் போது உரையாற்றிய மீன்பிடி அமைச்சர் சிவநேசன்,

இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மாகாண சபை உறுப்பினராக இருந்த போதே நடவடிக்கை எடுத்திருந்தேன். 18 பேருக்கு இயந்திரங்கள் மூலம் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடி அமைச்சுக்கு என நியதிச்சட்டம் இல்லை. அதனை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என மீன்பிடி அமைச்சர் சிவநேசன் தெரிவித்தார்.

இயந்திரம் பூட்டி கரை வலை செய்வதற்கான ஏற்பாடுகள் ஏதும் உள்ளனாவா? என்பது தொடர்பில் ஆராய வேண்டும். அவ்வாறு இருந்தால் வழக்கு தொடர்வதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளன என உறுப்பினர் பரஞ்சோதியும் கரைவலைக்கு இயந்திரத்தை பயன்படுத்துவது சட்டவிரோதமல்ல என உறுப்பினர் ஆனோல்ட்டும் கூறினார்.

முல்லைத்தீவில் வறுமை என்பதற்கு இந்த சட்டவிரோத மீன்பிடி முறையும் காரணம். 2500 கிலோமீற்றர் எல்லைக்குள் கரைவலை பயன்படுத்த முடியாது. 2500 மீற்றருக்கு அப்பாலும் இயந்திரத்தை பயன்படுத்த முடியாது என முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் மத்திய கடற்றொழில் அமைச்சர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் அனோல்ட் கூறிய கருத்து தவறானதாகும் என உறுப்பினர் ரவிகரன் கூறியிருந்தார். இதனை அடுத்து மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-4)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### செவ்வாய் தோஷத்திற்கு செய்ய வேண்டிய வழிபாடுகள்

செவ்வாய்க்குரிய கல்லான பவளக்கல்லை மோதிரத்தில் பதித்து அணிவது சிவப்பு நிற ஆடையை அணிந்து கொள்வது, செப்புப் பாத்திரங்களை உபயோகிப்பது போன்றவற்றால் செவ்வாயால் உண்டாகக்கூடிய தோஷங்கள் குறையும்.

எதையும் செய்ய முடியாத நிலையில் இருப்பவர்கள் சஷ்டி நாள், கிருத்திகை நாள், செவ்வாய்க்கிழமை இந்நாட்களில் பக்கத்தில் உள்ள முருகன் ஆலயத்திற்குச் சென்று பெயருக்கு அர்ச்சனை செய்து வரவும்.

இதுவும் முடியவில்லை என்றால் செவ்வாய் காயத்ரி மந்திரத்தை நன்றாக படித்து மனதில் சொல்லிக் கொண்டு தியானத்தில் ஈடுபடவும். (முற்றும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அன்பு இருக்கட்டும்

அன்பு இருக்கட்டும், அதற்கு ஒரு பெயரைக் கொடுக்காதீர்கள். நீங்கள் அன்பிற்கு ஒரு பெயரைக் கொடுக்கும்போது அது உறவாகிறது. அந்த உறவு அன்பைக் கட்டுப்படுத்துகிறது.

உங்களுக்கும் எனக்குமிடையில் அன்பு உள்ளது. அது அப்படியே இருக்கட்டும். அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, தாய்- தந்தை, குரு என்று சொல்லும் போது அன்பிற்கு ஒரு எல்லையை வகுக்கிறது.

நீங்கள் உங்களிடம் கொண்டுள்ள உறவு என்ன? நீ உன்னுடைய மனைவியா, கணவனா, அண்ணனா, தம்பியா? அல்லது குருவா?

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கே மார்பகப் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து அதிகம். ஆண்களைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகவே இவ் ஆபத்து பெண்களுக்கு உள்ளது.

வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்ப்பாணம் மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### தர்மத்தால் செல்வம் குறையாது

✦ நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர். ஒருவர் மீது ஒருவர் துவேசம் கொள்ளாதீர்.

✦ பொறாமை மனிதனுடைய நன்மைகளை அழித்து விடுகிறது.

✦ வசதி இல்லாத ஒருவன் மனம் நொந்தவனாக உங்களிடம் ஏதாவது கேட்டால் அவனை விரட்டாதீர்கள். கொஞ்சமேனும் கொடுங்கள்.

✦ ஒருவர் தர்மம் செய்கிறாரென்றால் அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட நல்லெண்ணத்தின் காரணமேயாகும். கஞ்சத்தனம் செய்கிறாரென்றால் அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட தவறான எண்ணத்தின் காரணமேயாகும்.

✦ கஞ்சத்தனத்தைப் பற்றி பயந்து கொள்ளுங்கள். கஞ்சத்தனம் ஷைத்தானின் குணமாகும்.

✦ தர்மம் கொடுப்பதினால் இருக்கும் செல்வம் அழிந்து போவதில்லை. தர்மம் செய்கின்றபோது வருகின்ற துன்பமும் துயரமும் அல்லாஹ்வின் கருணையின் அறிகுறியாகும்.

✦ துர்ப்பாக்கியமுள்ளவனிடமிருந்து இரக்க சிந்தனை அகற்றப்படுகின்றது.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதி, ஆனைக்கோட்டை சந்தி, யாழ்வீதி மானிப்பாய், ஆறுகால்மடம், கூழாவடி, ஆனைக்கோட்டை VC, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயப் பிரதேசம், அரசடி, அட்டகிரி, வேல க்கை, பள்ளத்தடி, குளப்பிட்டி சாவற கட்டுசந்தி, வராகி அம்மன் கோவிலடி, காக்கை தீவு, கிளிநொச்சி பிரதேசத்தில கரைகட்டுக்குளம், நாச்சிக்குடா, ஒலுமடு, சேனைப் புலவு, ஒதியமலை, பட்டிக் குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில்புளியங் குளம், நெடுங்கேணி மொபிற்றல் கோபுரம், நெடுங் கேணி நீர்ப்பாசன சபை, வவுனியா பிரதேசத்தில சொளம்பைக்குளம் பிரதேசம ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பிரெஞ்சு ஓபன் பட்மிண்டன் போட்டி முதல் சுற்றில், சாய்னா, சிந்து வெற்றி




பிரெஞ்சு ஓபன் பட்மிண்டன் தொடரின் முதல் சுற்றுப் போட்டி களில் இந்தியாவின் எச்.எஸ். பிரனோய், சாய் பிரனீத், கிடாம்பி ஸ்ரீகாந்த், சாய்னா நேவால், பி.வி. சிந்து ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பிரெஞ்சு ஓபன் பட்மிண்டன் தொடர் போட்டிகள் பிரான்ஸ் தலை நகர் பாரிசில் நேற்று முன்தினம் தொடங்கியது.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று போட்டியில் இந்தியாவின் எச்.எஸ். பிரனோய், கொரியாவின் லீ ஹியூனை எதிர்த்து விளையாடி னார்.

இப்போட்டியின் முதல் சுற்றை 21:15 என்ற புள்ளிக்கணக்கில் பிரனோய் கைப்பற்றினார். அடுத்த சுற்றிலும் சிறப்பாக விளையாடிய பிரனோய் இரண்டாவது சுற்றை யும் 21:19 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இதன்மூலம் 21:15, 21:19 என்ற நேர் செட்களில் எச்.எஸ். பிரனோய் வெற்றி பெற்றார். இதேபிரிவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் இந்திய வீரர் சாய் பிரனீத் - தாய்லாந்து வீரர் கோசித் பெட்பிரதாப் பலப்பரீட்சை செய்தனர். இப்போட்டியில், சாய் பிரனீத் 21-13, 21-23, 21-19 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் - ஜெர்மனி வீரர் பேபியன் ரோத் இடையேயான மற்றொரு முதல் சுற்றுப் போட்டியிலிருந்து பேபியன் ரோத் காயம் காரணமாக விலகி னார். இதையடுத்து ஸ்ரீகாந்த் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றுப்போட்டியில் இந்தியா வின் சாய்னா நேவால், டென்மார் கின் லைன் ஜார்ஸ்ஃபெல்டை எதிர்கொண்டார். இப்போடியில் 21:14, 11:21, 21:10 என்ற செட்கணக்கில் சாய்னா வெற்றி பெற்றார்.

இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் இந்தியா வின் பி.வி.சிந்து - ஸ்பெயினின் பீட்ரிஸ் கொரல்ஸ் ஆகியோர் மோதினர். இப்போட்டியில் 21:19, 21:18 என்ற நேர் செட்களில் பி.வி.சிந்து வெற்றி பெற்றார். (க)

# யாழ் முஸ்லிம் யுனைட்டட் வெற்றி

யாழ்.முஸ்லிம் யுனைட்டட் மற்றும் புத்தளம் போல்டன் அணி களுக்கிடையில் நடைபெற்ற கால் பந்தாட்ட போட்டியில் யாழ்.முஸ்லிம் யுனைட்டட் அணி 04:01 கோல் களினால் வெற்றி பெற்றுள்ளது.

புத்தளம் கால்பந்தாட்ட லீக் புத்தளம் நகரில் தொடராக நடத்தி வரும் ட்ரகன்ஸ் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்ட தொடரின்போட்டி ஒன்றிலேயே இவ்விரு அணி களும் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டியானது புத்தளம் ஸாஹிரா தேசிய கல்லூரி மைதா னத்தில் அண்மையில் நடைபெற் றது.

இந்தப் போட்டி தொடரில், இது வரை ஒரு புள்ளியையும் பெற்றுக் கொள்ளாத புத்தளம் போல்டன் அணியினை தொடரின் அதிக மான புள்ளிகளோடு காணப்படும் யாழ்.முஸ்லிம் யுனைட்டட் அணி எதிர்பார்த்தது போலவே இலகுவில் வென்றது.


இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மொத்தமாக 16 புள்ளிகளுடன் முன்னணியில் இருந்து கொண்டிருக்கின்ற யாழ் முஸ்லிம் யுனைட்டட் அணி, இந்த போட்டி தொடரில் சம்பியன் கிண் ணத்தினை சுவீகரிக்கும் நோக் கில்ஒவ்வொரு போட்டிகளின் போதும் நாட்டில் பரந்து பட்டு வாழும் யாழ். முஸ்லிம் வீரர்களை புத்தளம் வர வழைத்து போட்டிகளில் கலந்து கொள்ள செய்கிறது.

குறித்த இந்தப்போட்டியில் யாழ் முஸ்லிம் யுனைட்டட் அணிக்காக ருசான் 3 ஹட்ரிக் கோல்களை யும், ஜரீன் ஒரு கோலினையும் புகுத்தினர். நடுவர்களாக எம்.ஐ.எம். அலி, எச்.எச். ஹம்ருஸைன், ஏ.ஏ. எம்.கியாஸ், எம்.ஓ.ஜாக்கீர் ஆகி யோர் கடமையாற்றினர்.

எம். ஜனூசன் தலைமையில் இயங்கும் யாழ்.முஸ்லிம் யுனைட் டட் அணிக்கு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பரந்து பட்டு வாழும் யாழ். முஸ்லிம்கள் மிகுந்த ஆதரவை நல்கி வருகின்றனர்.

இந்த ட்ரகன்ஸ் தொடரில் கலந்து கொள்ளும் சகல அணிகளுக்கும் இன்னும் ஓரிரண்டு போட்டிகள் மிகுதி இருக்கின்றநிலையில் யாழ். முஸ்லிம் யுனைட்டட் அணியா னது விலகல் முறையிலான இரண் டாம் சுற்றுக்குள் தெரிவாகும் நான்கு அணிகளுக்குள் ஒரு அணியாக தெரிவாகும் வாய்ப்பு ஊர்ஜிதமாகி யுள்ளது. (க-26)

# நியூசிலாந்தை வென்றது இந்தியா






நியூசிலாந்து அணிக்கு எதிராக புனேவில் நடைபெற்ற இரண்டா வது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து அணி மூன்று ஒருநாள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

முதல் போட்டியை வென்று தொடரில் முன்னிலை பெற்றிருந்த நியூசிலாந்து அணி தொடரை வெல்லும் முனைப்பில் களமிறங்கி யது. நாணயச்சுழற்சியில் வென்ற அந்த அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

தொடக்க ஆட்டக்காரர்கள் குப்தில் மற்றும் முன்ரோவின் விக் கெட்டுகளை எளிதாக வீழ்த்திய இந்திய பந்து வீச்சாளர்கள் நிதான மாக பந்து வீசினர்.

50 ஓவர்கள் முடிவில் 9 விக் கெட்டுகளை இழந்து நியூசிலாந்து அணி 230 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி தரப்பில் புவனேஷ்வர் குமார் 3 விக்கெட்டுகளும், பூம்ரா, சாஹல் ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளை வீழ்த்தினர்.

231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட் டக்கார் ரோகித் ஷர்மா 7 ஓட்டங் களில் வெளியேறினார். இதனை யடுத்து இறங்கிய அணித்தலைவர் விராட் ஹோலி உதவியுடன் தவான் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார்.

அணித்தலைவர் விராட் ஹோலி 29 ஓட்டங்கள் எடுத்த நிலையில பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் மற்றும் தயான் ஜோடி பொறுமையாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தது. தவான் ஆட்டமிழந்தாலும் பாண் டியா சற்றே அதிரடி காட்டினார்.

46 ஓவர் முடிவுகளில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 232 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தினேஷ் கார்த்திக் 64 ஓட்டங்களுட னும், டோனி 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் ஆக்கியுள் ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி காளி கோவில் சனசமூக நிலையமும் அம்பாள் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அணிக்கு 9 பேர் 8 ஓவர்கள் கொண்ட தாக போட்டி நடைபெறவுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட் டுக் கழகங்கள் 076 912 7930 என்னும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொண்டு விண்ணப் பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# பாரதி (சி) வெற்றி

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத் தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாரதி "சி" அணி வெற்றிபெற்றது.

காமாட்சி அம்பாள் விளையாட் டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத்திட லில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத் தில் புத்தூர் சென் ஸ்டார் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.



இந்த ஆட்டத்தில் பாரதி விளை யாட்டுக் கழக "சி" அணி 25 : 20, 25 : 17, 25 : 18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்செட்களில் வெற்றி பெற்றது. (க)

# உலகக்கோப்பை கால்பந்து போட்டி இறுதிப்போட்டிக்கு ஸ்பெயின் தகுதி

17 வயதுக்கு உட்பட்டோருக் கான உலகக்கோப்பை கால்பந்து தொடரின் அரையிறுதிப் போட்டி யில் மாலி அணியை வீழ்த்தி ஸ்பெயின் அணி இறுதிப்போட்டிக் குள் நுழைந்துள்ளது.

17 வயதுக்கு உட்பட்டோருக் கான உலகக்கோப்பை கால்பந்து தொடர் இந்தியாவின் கொல்கத்தா, டில்லி, கொச்சி, கோவா, கவு ஹாத்தி, நவிமும்பை ஆகிய ஆறு நகரங்களில் நடைபெற்று வந்தன. இறுதிக்கட்டத்தை எட்டி விட்ட இந்த தொடரின் இரண்டாவது அரையிறு திப் போட்டி நவிமும்பையில் நடை பெற்றது.

மாலி மற்றும் ஸ்பெயின் அணி கள் அரையிறுதியில் பலப்பரீட்சை நடத்தின. போட்டி தொடங்கிய 19 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் அபெல் ருயிஸ் முதல் கோல் அடித்தார்.

அடுத்து 43ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை அபெல் ருயிஸ் கோலாக மாற்றி னார். இதன்மூலம் முதல் பாதிநேர



ஆட்டத்தின் முடிவில் ஸ்பெயின் அணி 2-0 என முன்னிலை பெற் றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண் டாம் பாதிநேர ஆட்டத்தின் 71ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் பெரான் ஒரு கோல் அடித்தார். அடுத்து 74ஆவது நிமிடம் மாலி அணியின் தியாயே ஒரு கோல் அடித்தார்.

அதன்பின்னர் இறுதிவரை மேற்கொண்டு எந்த கோலும் அடிக்கப்படவில்லை. இதையடுத்து ஸ்பெயின் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

முன்னதாக நடைபெற்ற மற் றொரு அரையிறுதி போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி, பிரேசில் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. எதிர்வரும் 28ஆம் திகதி கொல்கத்தா வில் நடைபெறும் இறுதிப்போட்டி யில் இங்கிலாந்து - ஸ்பெயின் அணிகளும், மூன்றாம் இடத்தை தீர்மானிக்கும் போட்டியில் மாலி - பிரேசில் அணிகளும் பலப்பரீட்சை செய்கின்றன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு காய்ச்சலின்...

டெங்கு மற்றும் நுளம்பு காய்ச்சல்களை பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்த இயலாது எனவும் கூறியிருக்கின்றார். யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளது. அதே சமயம் யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் மிக அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் 2 மரணங்களும் நிகழ்ந்திருக்கின்றது. இந்நிலையில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. விசேடமாக வெளி மாவட்டங்களில் இருந்து சுகாதார பணியாளர்கள் யாழ்.மாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அதே சமயம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில்மலேரியா காய்ச்சலை பரப்பும் அனோபிளிஸ் ஸ்ரெபன்சி என்ற நுளம்பு அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. யாழ்.மாவட்டத்தில் முதலில் யாழ். புகையிரத நிலைய பகுதியில் இந்த நுளம்பு அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நல்லூர் பகுதிகளிலும் இந்த நுளம்பு அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் எவருக்கும் நோய்த்தாக்கம் உண்டானமை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் மழை காலம் ஆரம்பமாவதால் பொது மக்கள் விழிப்பாக செயற்படவேண்டும்.

அதே சமயம் பொதுமக்களின் விழிப்புணர்வு இல்லாமல் டெங்கு காய்ச்சல் மற்றும் மலேரியா காய்ச்சல் போன்றவற்றை கட்டுப்படுத்தும் நுளம்புகளை கட்டுப்படுத்த இயலாது. எனவே மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு நுளம்பை கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அவர் மேலும் கேட்டுள்ளார்.

**கருப்பை கழுத்து புற்றுநோய்**

கருப்பை கழுத்து புற்றுநோயை கட்டுப்படுத்துவதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 10 வயதை தாண்டிய பெண் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் எச்.பி.வி தடுப்பு மருந்து கொடுக்கப்படுகின்றது. இதனை கருத்தடை ஊசி என மக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் பரப்படுகின்றது. ஆனால் அதில் உண்மையில்லை. கருப்பை கழுத்து புற்றுநோய் தடுப்பு ஊசியே போடப்படுகிறது ...நும் அஞ்சவேண்டாம்.

பெண்களுக்கு வரும் புற்றுநோய்களில் 10 வீதமானவை கருப்பை கழுத்து புற்றுநோய்களே ஆகும். மேலும் மற்றைய புற்றுநோய்களுடன் ஒப்பிடுகையில் கருப்பை கழுத்து புற்றுநோய் அதிக தாக்கம் கொண்டதாகவும், மரணத்தை உண்டாக்க கூடியதாகவும் இருக்கின்றது. இந்நிலையில் கருப்பை கழுத்து புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மத்திய சுகாதார அமைச்சினால் கம்பகா, குருநாகல், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கருப்பை கழுத்து புற்றுநோயை தடுப்பதற்கான தடுப்பு ஊசி போடப்படுகின்றது. இது பாடசாலை மாணவிகளுக்கு குறிப்பாக 10 வயதை தாண்டிய பாடசாலை மாணவிகளுக்கு இந்த தடுப்பு ஊசி போடப்படுகின்றது. இதனால் 70 வீதம் கருப்பை கழுத்து புற்றுநோயை கட்டுப்படுத்தலாம்.

மேலும் 30 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு இந்த நோய் அதிகம் வருகிறது. குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்நோய் அதிகம் வருகிறது. இதேபோல் இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 850 தொடக்கம் 950 பேருக்கு கருப்பை கழுத்து புற்றுநோய் வருகிறது. இதற்கமையவே கிளிநொச்சி மாவட்டத்தில் 10 வயதை தாண்டிய பாடசாலை மாணவிகளுக்கு கருப்பை கழுத்து புற்றுநோய்க்கான தடுப்பு ஊசி போடப்படுகின்றது. அதனை கருத்தடை ஊசி என தவறாக சிலர் கருதியதால் மக்கள் மத்தியில் தவறான கருத்து பரப்பப்படுகின்றது. ஆனால் மக்கள் அதனை நம்ப வேண்டாம் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு தங்கள் பிள்ளைகளுக்கு கருப்பை கழுத்து புற்றுநோய் தடுப்பு ஊசியை போட வேண்டும் எனவும் கேட்டு கொண்டார். (ம-4)

## இந்திய மீனவர்கள்...

கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். இவர்கள் அனைவரையும் நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ம)

## வேறு சிறைக்கு...

கிறது.

தமது வழக்குகளை தமிழ் நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு கோரி, ஒரு மாத காலத்தை கடந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் சிகிச்சை பெறுவதற்கு அவர்கள் மறுத்த போதும் கட்டாய சிகிச்சை வழங்கப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தாம் உணவு தவிர்ப்பை மேற்கொள்ளவில்லை என்றும், நலமாக இருப்பதாக வெளியே காட்டிக்கொள்வதற்காக கட்டாய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றும் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் இவர்களை சந்திக்க சென்றவர்களிடத்திலேயே இவர்கள் தமது பிரச்சினையை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க முடியாத காரணத்தினால் இவர்களை வேறு சிறைகளுக்கு மாற்றி சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரியவருகிறது. (ம-9)

## கைவிடப்பட்ட...

கொடிகாமம், பாதிரியபுலம் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றில் 12 கிளைமோர் குண்டுகள், 60 மில்லிமீற்றர் மோட்டார்கள் ஆறு மற்றும் வெடிக்கக் கூடிய நிலையில் இருந்த 30 கைக்குண்டுகள் என்பன அடங்கும்.

கைப்பற்றப்பட்ட இந்த ஆயுதங்கள் பின்னர் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன. (ம)

## 18 ஆண்டுகளாக...

மாற்றப்பட்டது.

தமிழ் அரசியல் கைதியான கனகரத்தினம் ஜீவரத்தினத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத நிலையில், கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நேற்று அவர் விடுவிக்கப்பட்டார். (ம)

## அரசியல் நிகழ்ச்சி...

மகாநாயக்க தேரர்கள் செயற்குழுவில் 40 பேர் இருக்கின்ற போதிலும் அதில் 9 பேரே கூடியதாகவும், சட்டத்தரணிகள் சங்கத்தில் 950 பேர் இருக்கின்ற போதிலும் அதில் 46 பேரே கூடியதாகவும் தெரிவித்த சட்டத்தரணி லால் விஜேநாயக்க, இவர்கள் இருதரப்பினரும் அறிவித்த அறிவிப்பு மக்களை திசைதிருப்பும் அறிவிப்பு என்பதுபோல நியாயமான அறிவிப்பென ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக மீண்டுமொரு கலவரம் ஏற்படும் என்பதால் அப்படியொரு அரசியலமைப்பு தற்போதைய தருணத்தில் தேவையில்லை என்று அஸ்கிரிய மற்றும் மல்வத்துப்பீட மகாநாயக்கர்கள் தலைமையிலான சங்க சபையின் செயற்குழு அண்மையில் கண்டி தலதா மாளிகையில் கூடி அறிவிப்பொன்றை விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் அவசரமாக செயற்குழுவைக் கூட்டி புதிய அரசியலமைப்பு அவசியமற்றது என்ற அறிவிப்பை விடுத்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் மற்றும் பொது பல சேனா போன்ற கடும்போக்குவாத அமைப்பினரும் புதிய அரசமைப்புக்கு எதிராக குரல் கொடுத்து வரும் நிலையிலேயே இவ்விரு அறிவிப்பும் வெளி வந்தது.

இந்த நிலையில் கண்டியிலுள்ள வழக்கறிஞர் காரியாலயக் கட்டிடத் தொகுதிக்கு நேற்றைய தினம் விஜயம் செய்த புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி நிலைமையை தெளிவுபடுத்தினார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை செயற்குழு கூடி புதிய அரசியலமைப்பு பற்றி ஆராய்ந்தது. மிகவும் கவலையை அந்த அறிக்கை ஊடாக வெளியிட்ட சட்டத்தரணிகள் சங்கம், 10 கேள்விகளையும் அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கிறது. புதிய அரசியலமைப்பு தேவையா? சமஷ்டியையா அல்லது ஒற்றையாட்சியையா உருவாக்க எதிர்பார்க்கிறீர்கள்? போன்ற 10 கேள்விகள். இந்த கேள்விகள் நகைப்பை ஏற்படுத்துகிறது.

அரசியலமைப்பு திருத்த செயற்பாடுகளை ஆரம்பித்தபோது [illegible] அரசியலமைப்பு பற்றி தேறின மூத்த அனுபவம் வாய்ந்தவர்களை உள்ளடக்கிய மக்கள் கருத்தறிய குழுவை நியமித்தபோது அந்தக் குழு கூடி அரசியலமைப்பில் என்னென்ன விடயங்கள் இருக்கவேண்டும் என்ற அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கை எனது குழுவின் அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. திடீரென ஏன் அரசியலமைப்பு தேவை என்று சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

இந்த நிலையில் 950 பேர் அங்கம் வகிக்கும் செயற்குழுவில் திடீரென செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கூடிய கூட்டத்திற்கு 46 பேரே கலந்துகொண்டனர். இவர்களே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர். சட்டத்தரணிகளும் புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு எதிர்ப்பை வெளியிடுவதாக கூறியுள்ளனர்.

இது ஏமாற்று செயற்பாடு. இது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இடம்பெற்றதென்பது தெளிவாகிறது. எனவே மக்களுக்கு இதுகுறித்து நாங்கள் தெளிவுபடுத்த வேண்டும். அதேவேளை மல்வத்து மற்றும் அஸ்கிரிப் பீட மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு என ஒரு நாள் தெரிவித்தனர். மகாநாயக்க தேரர் செயற்குழுவில் 40 பேர் இருக்கின்றனர். ஆனால் மாகாநாயக்க தேரர் வெளிநாட்டில் இருந்த தருணத்தில் 9 பேர் கூடி அப்படியான தீர்மானத்தை அறிவித்தனர். வரலாற்றில் அரசியல் விவகார பேச்சுக்காக மகாநாயக்க தேரர்களது செயற்குழு தலதா மாளிகையில் ஒரு போதும் கூடியதில்லை என்றார். (ம)

## தொண்டராசிரியர்...

மேலும் நிரந்தர நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள தொண்டராசிரியர்கள் 182 பேரில் உள்வாங்கப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 108ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் தொண்டராசிரியர்களில் ஆசிரியர் நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு 182பேரினது பெயர்ப்பட்டியலை வெளியிட்டிருந்தது. எனினும் இந்த பெயர்ப்பட்டியலில் தொண்டராசிரியர் அல்லாதவர்களின் பெயர்களும் உள்ளதாகவும், மேலும் 494 பேர் இதன் மூலம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி வடக்கு மாகாண சபையின் கடந்த மாத அமர்வில் தொண்டராசிரியர்களின் நியமனத்தை இடை நிறுத்தியிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் மீளவும் குறித்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது சம்பவ திரட்டை நியமனத்திற்கான தெரிவுகளில் ஒன்றாக பார்க்காமல் விட்டால் எந்த அடிப்படையில் தெரிவு செய்வது என்பது தொடர்பில் கேள்வியெழுப்பியிருந்தார். எனினும் சம்பவ திரட்டை காரணம் காட்டி ஏனையவர்களை புறக்கணித்து விட முடியாது என முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மற்றும் உறுப்பினர் ப.கஜதீபன் ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் உறுப்பினர்களுடைய அனைவரது ஏற்புடன், தொண்டராசிரியர் நிரந்தர நியமனத்தில் சம்பவ திரட்டு நியமனத்தை கட்டுப்படுத்தாது எனவும், தெரிவு செய்யப்பட்ட 676 பேருக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் பரீட்சை மூலம் தொண்டராசிரியர்களை உள்வாங்குவது என்ற யோசனையை நிராகரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் உள்ள 182 பேர் தான் நியமனத்திற்கு தெரிவானவர்கள் என்று அர்த்தம் இல்லை.

இவர்களில் முறையற்ற விதத்தில் தெரிவாகியவர்கள் அல்லது தொண்டராசிரியர்கள் அல்லாதோர் தொடர்பிலான புகார்கள் விசாரணை செய்யப்பட்டு பட்டியலை மீள் பரிசீலனை செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னர் வெளியாகியிருந்த பட்டியலின் அடிப்படையில் 676பேருமே நியமனத்துக்கு தகுதியானவர்களே, அவர்கள் அனைவரும் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

சம்பவ திரட்டு என்பது 12.05.2016 அன்றைய மத்திய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டிருந்தன. எனினும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் என இந்த திகதிக்கு முன்னதாகவே வடக்கு மாகாண சபை தீர்மானித்திருந்தது. ஆகவே வடக்கு மாகாண சபையின் தீர்மானமே முதன்மையானது என அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் இதன் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த பிரச்சினைகளை மத்திய கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டி முன்னர் தெரிவு செய்யப்பட்ட 676 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என கோருவது எனவும், கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தலைமையில், முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, உறுப்பினர் அரியரட்ணம் ஆகியோர் கொண்ட குழு மத்திய கல்வி அமைச்சரை சந்திப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திப்பின் போது கல்வியற் கல்லூரியிலிருந்து வெளியேறியவர்கள் வெளிமாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டமை தொடர்பிலும் சுட்டிக்காட்ட வேண்டும் என உறுப்பினர் தவநாதன் கூறியிருந்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபைக்கு வெளியே நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நியமனம் நிறுத்தப்பட்ட தொண்டராசிரியர்களிடம் இரு வாரத்திற்குள் தீர்வொன்றை பெற்று தருவதாக கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் உறுதியளித்திருந்தார். (ம-4)

## சுதந்திரக் கட்சி...

சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ முடியாத நிலையில், எந்தவொரு பெறுமதியும் வழங்கமுடியாத தருணத்தில் கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்தார்.

அநுராதபுரம்-ரம்பேவ பிரதேசத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த எச்சரிக்கையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விடுத்துள்ளார். (ம)

## கொள்கைகளில்...

தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் கொழும்பில் நேற்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

சம கால நிகழ்வுகளில் தெளிவற்று செயற்படுகின்றமையினாலும், அரசாங்கத்தின் கொள்கைளில் தளம்பல் நிலை காணப்படுவதனாலும் அரசாங்கத்திற்கு சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## வாய்திறவா...

யின் நேற்றைய அமர்வில் யாரும் வாய்திறக்கவில்லை. அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்ட வழக்கு விசாரணைகளை மீளவும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரி கடந்த ஒரு மாதகாலத்திற்கும் மேலாக அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளது.

உடல் நிலை மிகமோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களை விடுவிக்குமாறு கோரி நாடுமுழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றது. வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போதும் அவைத்தலைவர் சிவஞானத்தால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் பின்னர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் சென்று போராட்டத்தை உடல் நிலையை கருத்திற்கொண்டு கைவிடுமாறு கோரினார்கள்.

எனினும் எந்தவித உத்தரவாதமும் இல்லாத உறுதிமொழியை நம்பி போராட்டத்தை கைவிட தயாரில்லை என உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகள் மூவரும் திட்டவட்டமாக கூறியிருந்தனர். இதன் பின்னர் வடக்கு மாகாண சபை கைதிகள் விடயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது மௌனமாக இருந்து வருகின்றது. எனினும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் மாத்திரம்.

பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இந்த நிலையில் வடக்கு மாகாண சபயின் 108வது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளது விடயம் தொடர்பில் எந்த உறுப்பினரும் வாய் திறக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நேற்றைய சபையில் 15 உறுப்பினர்களே கலந்துகொண்டிருந்தனர். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-153)



UK-550*/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## TECHNO WORLD

**A/L 2019, 2018, Day Class**

அனைத்துத்துறை மாணவர்களுக்குமானது

சித்திரம் - Mr.ஜெயந்தன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

ஊடகக்கல்வி - Mr.கோணேஸ் (யாழ்ப்பாணம் மகாஜனக்கல்லூரி)

இலகு கணிதம் - Mr.துபீபன் (விரிவுரையாளர்)

**ஆரம்பம் : 28.10.2017**

பிரிவு: I சனி, ஞாயிறு 2.30 - 4.00

பிரிவு: II சனி, ஞாயிறு 11.30 - 1.00

A/L - 2019 ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்

A/L - 2018 Paper Class நடைபெறும்

குறிப்பு : தனிப்பட்ட அனுமதி உண்டு குறைந்த கட்டணம்

அனுமதி இலவசம்

**077 017 5346** (1153)

## A/L வணிகக்கல்வி

2018 - செயற்பாட்டு முகாமைத்துவம் (திங்கள், புதன், வெள்ளி 6.00 am)

2019 - வணிக அமைப்புக்கள் (திங்கள், புதன் 2.30 pm)

By **S.ரிஷி**

**UNIVERSAL**

TP : 077 544 2160 கந்தர்மடம் (1132)

## Group Class

**A/L 2019, 2018, Day Class**

Paper Class லவன்

**ICT** உதவி விரிவுரையாளர் கணனி விஞ்ஞானம், யாழ்.பல்கலைக்கழகம்

இடம் : பெருமாள்கோவில் வீதி சனி, ஞாயிறு (3.00 - 4.30)

குறிப்பு : A/L தவணைப்பரீட்சை, இறுதிப் பரீட்சையை நோக்கியது. அனைத்து துறை மாணவர்களும் பங்குபற்றலாம்.

ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்

அனுமதி இலவசம்

**077 326 1648** (1153)


# யுத்தத்தால் பெறமுடியாததை...

முவே நாலக தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரிவினைவாதிகள் யுத்தம் மூலம் நாட்டைப் பிரித்து தனிநாட்டை உருவாக்க முயற்சித்தனர். அதனை வீரதீரமிக்க படையினர் தோற்கடித்து நாட்டுக்கு விடுதலையை பெற்றுக்கொடுத்தனர்.

பிரிவினைவாதிகளால் போரில் வென்றெடுக்க முடியாததை அரசியலமைப்புச் சட்டம் மூலமாக சட்டரீதியாக வழங்க தற்போதைய அரசாங்கம் முயற்சித்து வருகிறது எனவும் பொங்க முவே நாலக தேரர் தெரிவித்துள்ளார். (ம)


## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி திருநகரில் மாவட்ட செயலகத்திற்கு அருகில் சிறிய வீடு வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 076 387 8100 (1151)

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

திட்டமிடல் சேவை திறந்த பரீட்சைக்கு

பிரதி ஞாயிறு 9.00 - 2.00

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு

பிரதி ஞாயிறு 9.30 - 2.30

**EB Exam** வகுப்புக்களும் நடைபெறுகின்றன (C-183)

தொடர்புகளுக்கு 076 688 3394

**D.M.I** (வெலிங்ரன் சந்தி Honda காட்சியறை முன்)

## Possible Green Private Limited Kilinochchi.

கிளிநொச்சியில் தயாரிக்கப்பட்டு உலகம் முழுவதும் விற்பனையாகும் ஆரோக்கிய வாழ்விற்கான தேயிலை உற்பத்தி நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன :

1. சந்தைப்படுத்தல் இயக்குநர் (Marketing Director) குறித்த துறையில் குறைந்த பட்சம் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் சிறந்த தேர்ச்சி இருப்பது சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்.
2. விற்பனைப் பிரதிநிதி (Sales Representative) குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்டமொழித் தேர்ச்சி சிறப்புத் தகைமையாகக்கருதப்படும்.
3. கணனிவடிவமைப்பாளர் (Graphic Designer) குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடஅனுபவம் இருத்தல் வேண்டும். பின்வரும் மென்பொருள் பிரயோகித்தலில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

| | |
|---|---|
| 1. Photoshop | 3. Coral draw |
| 2. Page Maker | 4. MS Office Package |

4.எமது உற்பத்திப் பொருட்களுக்கான சில்லறை மற்றும்மொத்த விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 05.11.2017

பொருத்தமான தகைமையுள்ளோர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

Possible Green Private Limited,
No 11, Sivasundaram road,
Paravippanchan – Kilinochchi.

Email: info@possiblegreen.com
TP : 021-228-3369 / 076-938-6017 (C-182)

## அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)

- 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
- திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
- இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு

யாழ்ப்பாணம் / வேலனை / கிளிநொச்சி

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500 (C-166)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services (C-167)

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

## BA, Bcom, Bsc, BBA

MEDIUM TAMIL

**காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை) வெளிவாரி**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lஇல் முழுமை சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
- இக் கற்கை நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
- BAஇல் தமிழ், தமிழ் இலக்கியம், வரலாறு, அரசியல், பொருளியல், ஆங்கிலம், பொது நிர்வாகம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.
- B.BAகற்கை நெறியானது தமிழ் மொழி மூலம் நடைபெறும்.
- B.Aபொது நிர்வாகம் பாடமானது அரச உத்தியோகத்தருக்கு சிறந்த தெரிவாகும்.
- TOURISM AND HOSPITALITY இப் பட்ட நெறிகளானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டவையாகும்.
- **விரிவுரை திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

குறிப்பு:

01. விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.
02. 2017 சித்திரை பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள் பல்கலைக்கழக இணையத்தளமான **www.mkudde.org** ல் பார்வையிட முடியும்.
03. பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்திய யாழ். இணைப்பாளரால் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

யாழ்.இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம். (மதுரை)
T.P.No:-0212228148,
0215689477, 0778469721

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (C-171)

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

**0768226243**

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



திருச்செல்வம்-மரியரோகினி

அமெரிக்க விசா வெற்றியாளர் (C-153)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

**V2 TRAVELS**

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


## பிரவேசம் இலவசம்

### "சிறுநீரகப் பாதிப்புகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அதனை தவிர்க்கும் வழிமுறைகளும்."

வளவாளர் : துறைசார்ந்த வைத்திய நிபுணர், அநுராதபுரம் பொது வைத்தியசாலை.

இடம் : யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகம்

திகதி : 27.10.2017 காலம் : மு.ப 9.00 - பி.ப 02.00

அனுசரணை :- தென்னை கற்பகதரு சங்க அங்கத்தவர்களும் தென்னை பயிர்செய்கை சபை, யாழ் பிராந்திய காரியாலயமும்.

குறிப்பு :- இவ்வருட தென்னை மானியத்திட்ட யாழ் மாவட்ட பயனாளிகளுக்கு இதே தினம் காசோலைகள் வழங்கப்படும்.

**T.வைகுந்தன்**
பிராந்திய முகாமையாளர்
தென்னை பயிர்ச் செய்கை சபை, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org